# சேர்ந்த இரண்டும்



D. அகஸ்டின் ஜெபக்குமார்

# சேர்ந்த இரண்டும்

சகோ.D.அகஸ்டின் ஜெபக்குமார்

SINCE 1972

GEMS Publications

# பொருளடக்கம்


ஆரம்பம் 1

திருமணத்தின்போது... 8

பாலுறவில் 12

இணைந்துவிட்டதினால்... 15

வேதம் மறக்கப்பட்டால்... 25


## அத்தியாயம் 1


தேவபக்தியுள்ள கணவனும், பக்தியற்ற மனைவியும் 27

(Godly Husband & Ungodly Wife)

1. நீதிமானாயிருந்தும் 29
2. தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன்தான்... 33
3. தேவன் சிநேகித்த மனிதன்தான் (1) 37
4. தேவன் சிநேகித்த மனிதன்தான் (2) 40
5. சாரோனின் ரோஜாவுக்கா இப்படி ஒருத்தி... 45
6. விசுவாசிகளின் தகப்பன் ஆனால்.. 49
7. பாரபட்சமற்றவனுக்கு... 53
8. பொல்லாப்புக்கு விலகுகிறவனின் பொல்லாத மனைவி 57
9. தீர்க்கனுக்கு ஒரு கிறுக்கு மனைவியா? 61


## அத்தியாயம் 2


தேவபக்தியுள்ள மனைவியும், பக்தியற்ற கணவனும் 63

(Godly Wife & Ungodly husband)

10. புத்திசாலிக்கு ஒரு பைத்தியக்காரன் 65
11. தேவனுடைய மனுஷனை அடையாளம் கண்ட தேவ பிள்ளை 69
12. ஆகாமியம் கொண்ட ஆசாரியனின் மனைவி 71
13. எதிரியை மடங்கடிக்கும் எஸ்தர் 75

14. மதிக்கப்படத்தக்க மருமகள் 77
15. பயந்தவனுக்கு பராக்கிரமசாலியைத் தந்தவள் 81
16. நீதிமன்றம் வரை சென்ற மனைவி 83
கிடைத்துவிட்டதை மாற்ற நினைக்காதீர்கள் 85

## அத்தியாயம் 3

தேவபக்தியுள்ள கணவனும், பக்தியுள்ள மனைவியும் 87
(Godly husband & Godly wife)

ஒருமனமாகிய இருமனம் 88
17. சீர்கெட்ட பூமியில் சீரான குடும்பம் 91
18. ஆபத்துக்கஞ்சாத ஆதிப் பெற்றோர் 95
19. கர்த்தரை மையமாகக் கொண்ட கணவன் மனைவி 99
20. ஆபத்தை முன்னறிந்த ஆத்துக்காரி 103
21. பிந்தின நற்குணமும் நிறைவான பலனும் 107
22. அந்தகார வேளையில் ஒளியேற்றின தம்பதியர் 111
23. அழுகும் உலகில் ஆச்சரியக் குடும்பம் 115
24. அடையாளமாவதற்கு விட்டுத்தந்த அன்பு மனைவி 117
25. அடைக்கலப் பட்டணமான ஆசாரியக் குடும்பம் 121
26. ஏழைகள் ஆனால் ஏக இரட்சகரின் பெட்டகம் 125
27. பிரிக்க முடியாத பிரயாணிகளான குடும்பம் 129
28. தேவ பயமிக்கவர் தேசத்தில் ஆசீர்வாதச் சின்னங்கள் 133

## அத்தியாயம் 4

தேவபக்தியற்ற கணவனும், பக்தியற்ற மனைவியும் 135
(Ungodly Husband & Ungodly Wife)

29. கர்த்தரை குறை கூறும் கணவன் மனைவி 137
30. ஒருமனப்பட்டு அழிந்த ஒரு அன்பு தம்பதி 141
31. தேசத்தைக் கெடுக்கப் போதும் இணைந்த இருவர் 143
32. ஆதிப் பெற்றோர் தந்த அலங்கோலம் 147

கேள்வி-பதில் 150

# சேர்ந்த இராணுவம்

**Bro.D.Augustine Jebakumar**

Published by
**GEMS PUBLICATIONS**
Sikaria, Indrapuri (PO), Dehri on Sone,
Rohtas Dist. Bihar 821 308, North India
E-Mail : publications@gemsbihar.org
www.gemsbihar.org
Tel. : 06184 234026, 234567, Fax 06184 234042

Copies can also be received from
**GEMS**
No.11, 13th Cross Street,
New colony, Chrompet, Chennai - 44
TamilNadu, SouthIndia
Tel. : 044 22386031, 22380295

©copyright by Gospel Echoing Missionary Society (GEMS)

First edition 2012 - 5,000 copies

Second edition 2013 - 3,000 copies

*No part of this publication may be reproduced in any form or by any mean, electronic or mechanical, including photocopying, recording or any information storage and retrieval system without permission in writing from the publisher.*

Presented to

____________________________

on ____________

for the Occasion of ______________________

From ____________________

# ஆரம்பம்

"குடும்பம் ஒரு கோவில்" என்றனர் நம் மூதாதையர்; அதாவது, ஆண்டவர் தங்கி தாபரிக்கும் ஸ்தலம் என்பது அதின் கருத்து; எனவேதான், அதனைத் தாக்க சத்துருவாகிய சாத்தான் பலமுறைகளில், பலவேளைகளில் முயற்சி செய்கிறான்; அதில் இந்நாட்களில் பெரும் வெற்றியையும் கண்டுவருகிறான். குறிப்பாக, கிறிஸ்தவக் குடும்பங்களில் இவை காணப்படும் போது நம் இதயம் வேதனைப்படுகிறது. அதன் காரணம் நம் ஜனங்கள் "அறிவில்லாமல் சங்காரமாகிறதினாலேயே" (ஓசி 4:6). **'நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால், நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்' என்பதே ஆண்டவரின் அங்கலாய்ப்பு.** 'என் வேதத்தின் மகத்துவங்களை அவர்களுக்கு எழுதிக்கொடுத்தேன், அவைகளை அந்நியகாரியமாக எண்ணினார்கள்' என்பதே அவரின் புலம்பல் (ஓசி 4:6; 8:12). **வேதத்தின் வெளிச்சத்தில் நடக்க முற்பட்டால் அநேக குடும்பங்கள் புயலுக்குத் தப்பி**, புரிந்துகொண்ட வாழ்க்கைக்குத் தங்களை ஒப்புக்கொடுப்பர் என்பது என்னுடைய அசையா நம்பிக்கை.

திருமணம் தேவனால் ஏற்படுத்தப்பட்ட உயர்ந்த ஒரு காரியம். முதல் திருமணத்தை தேவனே முன் நின்று நடத்தினார் (ஆதி 2:22). குமாரனாகிய இயேசுவும், தன்னுடைய முதல் அற்புதத்தினை திருமண வீட்டில் நடத்தி திருமணத்தை அலங்காரமாக மாற்றினார் (யோவா 2:11). பரிசுத்த ஆவியானவரும், சபையாம் மணவாட்டியை ஆட்டுக்குட்டியானவருக்கு ஆயத்தம் செய்கிறார் (வெளி 19:7; 2 கொரி 5:5). எனவே **திரித்துவ தேவன் இதனை ஆமோதித்து, அங்கிகரித்து, அழகு செய்து அகமகிழ்கிறார்.** அதனை சத்துரு விரும்புவதில்லை. அதனால், ஆதியிலேயே அவன் அதற்கு விரோதமாய் கிரியை செய்து, அவர்களை பிரிக்கவும் மற்றும் ஒருவரை ஒருவர் வெறுக்கவும் செய்துவிட்டான் (ஆதி 3:12,13); அத்துடன், திருமணத்தின் நோக்கத்தினை மறக்கவும் செய்துவிட்டான்.

தேவன் பரிசுத்தர் எனவே பரிசுத்தமாக வாழவேண்டும்; தான் உண்டாக்கிய மற்றும் தமது சாயலாக உருவாக்கப்பட்ட மனிதர்கள் பரிசுத்தமாகத்தான் வாழவேண்டும் என்பது அவருடைய மாறாத

விருப்பம். அவர் பரிசுத்தத்தினை சிநேகிப்பவர் அல்லவா (மல் 2:11). வேசித்தனமும், விபச்சாரமும் தம்முடைய ஜனத்தில் காணப்படக்கூடாது என்பதற்காக அதனை உண்டாக்கினார் (1கொரி 7:2); கூடவே ஒரு பரிசுத்தமுள்ளதும், தேவபக்தியான சந்ததியை உருவாக்க வேண்டும் என்பது அவருடைய நோக்கம் என்பதனை மல்கியா தீர்க்கன் மூலம் அவர் விளக்குகிறார் (மல் 2:15).

இதோ, நானும், கர்த்தர் எனக்குக் கொடுத்த பிள்ளைகளும் சீயோன் பர்வதத்தில் வாசமாயிருக்கிற சேனைகளின் கர்த்தராலே இஸ்ரவேலில் அடையாளங்களாகவும் அற்புதங்களாகவும் இருக்கிறோம் (ஏசா 8:18) என்று சாட்சி பகறவேண்டிய குடும்பங்கள், இன்று சின்னா பின்னமாகி, நிலையிழந்துக் காணப்படக் காரணம் தெளிவும், புரிந்து கொள்ளுதலும் தேவ நோக்கத்தினைக் குறித்த அறிவும் இல்லாததே.

பாரம்பரியம், சமூகக் கட்டுப்பாடு, வழிவழியாய் வந்த கொள்கைகள், கலாச்சார வேற்றுமைகள், சத்துரு உத்தியாய் விதைத்துவிட்ட வேதத்திற்கு ஒவ்வாத புதுமை எண்ணங்கள் (modernism), மேற்கத்திய நாகரீக மோகங்கள், சிலுவையில் அடிக்கப்படாத சுயம், சுதந்தரம் என்ற பெயரில் காணப்படும் தாறுமாறுகள், உரிமை என்ற குரலில் தொனிக்கும் அகங்காரம், சம்பாத்தியம் எனக்குரியது என்ற பெருமை, பணம் படுத்தும் பாடு, அடிமையாக்க நினைக்கும் அற்பத்தனங்கள் இவை அனைத்தும் திருமண வாழ்வின் இன்பத்தினையும் (pleasure), நோக்கத்தினையும் (purpose) நோகடித்து, சிதறடித்து விடப் போதுமான பெலனுள்ளவை என்பதனை யார் மறுக்கக் கூடும்.

“தேவன் இணைத்தவர்கள்” (மத் 19:6) என்று அனைத்து திருமணங்களையும் அழைத்தாலும், அநேக நேரங்களில் இந்தியாவின் சூழ்நிலையில் திருமணத்தை நிர்ணயித்தது வேறு அநேக காரியங்களாகவே உள்ளது. பணம், படிப்பு, அழகு, அந்தஸ்து, பெற்றோரின் பெருமை, விருப்பம், வயது வந்தோர்களின் ஆசை நிறைவேற்றம், ஜாதி, குலம், கோத்திர வரம்புகள், முன்னுரிமை பெற்றதினால் அநேக திருமணங்கள் நிச்சயக்கப்படுகின்றன.

தேவசித்தமும், தேவ நோக்கமும் அநேக நேரங்களில் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. தேவன் இணைத்தார் என்பதனை விட “மனிதர்கள் இணைந்தார்கள்” என காதல் திருமணத்தினை

குறித்தும், “மனிதர்கள் இணைத்தார்கள்” என்பது ஒழுங்கு செய்யப்பட்ட திருமணங்களிலும் காணப்படுகின்றன. கொஞ்ச பணம் கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட மனக்கசப்பு அநேகக் குடும்பங்களைச் சிதறடித்து விட்டதும் நாம் அறிந்ததே.

மேலை நாகரீகமும், வாழ்க்கை முறையும் (life style) அதிக தாக்கத்தினை (influence) ஏற்படுத்திய சூழ்நிலையில், “தாங்களாகவே தெரிந்து கொள்ளுதல்” பெருகி வரும் இந்நாட்களில், இணையதளங்களும், ஊடகங்களும் (website & media) பெரும் பங்கு வகிக்கின்றன. ஒரு மாயத் தோற்றம் உருவாக்கப்பட்டு, அதனையே “நிஜம்” என நம்பி ஓடிய வாலிப உள்ளங்களும், அதனையே நிஜ வாழ்வில் கைப்பிடிக்க நினைத்து தோற்றுப் போய் நிற்கும் அவல நிலை பட்டணத்து வாசிகளோடு மற்றவர்களையும் அதிகம் பாதித்துவிட்டது.

“இரட்டை எண்ணங்களில்” மாட்டிக்கொள்ள நேரிட்ட இன்றைய சமுதாயத்திற்கு, அதாவது முந்தைய நாட்களின் எண்ணங்கள்” இன்றைய நாட்களின் எண்ணங்கள் என வேறு பிரிக்கப்பட்ட சூழ்நிலையில், இடையில் தத்தளிக்கும் இன்றைய தம்பதியினரின் பாடு மிக அதிகமே. “கூடி வாழ்ந்தால் கோடி நன்மை” (Joint family system) என்பது அன்றைய எண்ணம். “கிட்டப்போனால் முட்டப் பகை” (Independent family System) என்பது இன்றைய எண்ணம். திருமணம் ஆனவுடன் தனிக்குடித்தனம் என்பது தான் சிறந்தது என்ற நிலையில், “என் சுதந்திரம் அது” என்பது இன்றைய தம்பதியினரின் மாறாத தீர்மானம். “சேர்ந்து வாழ பிடிக்காமல் பிரித்துக் கொண்டுப் போய்விட்டாள்” என்பது இன்றைய மருமக்களைக் குறித்து மாமியார் கூறும் பெரிய ஆவலாதி.

“ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான் அவர்கள் இருவரும் ஒரே மாமிசமாயிருப்பார்கள் என்று அவர் சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா?” என்ற இயேசுவின் கேள்வி (மத் 19:4,5) அநேகப் பெற்றோர்களால் புரிந்து கொள்ளப்படாமலேயே இருக்கிறது. திருமணமாகும் ஆணும் பெண்ணும் ஒரு தனி யூனிட்

**என்பதனை புரிந்து கொண்டு வெறும் ஆலோசகர்களாகவும், உதவியாளர்களாகவும் செயல் படவேண்டிய பெற்றோர் தாங்களே இன்னமும் முடிவு செய்கிறவர்களாகவும், தீர்மானிக்கிறவர்களாகவும் மாற முயற்சிக்கும் போது (decision makers), சிக்கல்களையும் பிரச்சனைகளையும் உறவு விரிசல்களையும் போராட்டத்தையுமே அது கொண்டு வந்துவிடுகிறது.**

தனக்குப் பிள்ளைகளை வளர்க்க (அதுவும் இருவரும் வேலைக்கு போகும் சூழ்நிலையில்), வீட்டை பாதுகாக்க, பெற்றோரின் ஒத்தாசையினை (support) எதிர்நோக்கும் பிள்ளைகள், பெற்றோர் தங்கள் கூட இருக்க அனுமதிக்கும் போது மேற்சொன்ன காரியங்களில் கவனமாக இல்லையென்றால் நித்தமும் போர்களத்தினையே சந்திக்க நேரிடும். **தங்கள் கனவுகளை மாத்திரம் நிறைவேற்றுவதற்காக, பிள்ளைகளின் கனவுகளை கலைத்துப் போட்ட பெற்றோர்களும் ஏராளமே.**

"பெற்றோரை கனம் பண்ணுவது" ஆசீர்வாதத்திற்கும் வாக்குத்தத்த நிறைவேறுதலுக்கும் அஸ்திபாரம் (எபே 6:1-3) என்ற வார்த்தைகளை தவறாகப் புரிந்து கொண்டு செயலாற்றும் பெற்றோரும் உண்டு. திருமணம் ஆன பின்னரும் எல்லாவற்றிலும் (பணத்தினை செலவழிப்பதில், பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதில், வேலையினை தீர்மானிப்பதில்) தங்களின் விருப்பப்படி தான் பிள்ளைகள் கேட்டுச் செய்ய வேண்டும் என அடம் பிடித்து, அதனைத் திணிக்க முயலும் பெற்றோர், தங்கள் வாழ்க்கையில் அது நடந்ததா? என்று கூட யோசித்துப் பார்ப்பது இல்லை. மாறாக, அப்படி நடந்தால்தான் தேவ பக்தி என சுட்டிக் காட்டி குடும்பத்தினை கூறு போடுகிறார்கள்.

இது ஒரு புறமிருக்க, "ஏதோ ஒரு நபர் நமக்கு எந்த **வழியிலோ கொடுக்கப்பட்டுவிட்டார்; இவரோடு எப்படி ஜீவியத்தினை நிர்வாகம் செய்வது" என அறியாமல் வாழ்வது அநேகருடைய வாழ்வினை சீரழித்து விட்டது;** இந்திய சூழ்நிலையில் 90% க்கு மேற்பட்டோரின் வாழ்வு அப்படி அமைந்ததே. நன்றாக அறிந்து, காதலித்து, பின்னர் பழகி, ஊர் சுற்றி, பல மணி நேரங்கள் பல விஷயங்களை உட்கார்ந்து பேசி, புரிந்து கொண்ட சுபாவத்தோடு திருமணம் செய்தோம் என்பது அநேக திருமணங்களில் நடைபெற, இந்திய கலாச்சாரமும் வாழ்க்கை முறையும் இடம் தருவதில்லை. தற்போது அதில் மாற்றம் உண்டாகி, தொடர்பு (communication)

அதிகம் உண்டாகி திருமணத்திற்கு முன் பகிர்ந்து கொள்ளுதல் பெருகி வருவது காணப்பட்டாலும், **நேசிக்கும் அல்லது காதலிக்கும் நேரத்தில் எதிர்மறை காரியங்கள் (Negatives) அநேக நேரங்களில் மறைக்கப்பட்டுப் போகிறது.** எனவே, திருமணத்திற்குப் பின்னர் சுமூகமான வாழ்க்கை அமையும் என்பதற்கு எந்தவித உத்திரவாதமும் இல்லை.

அநேக நேரங்களில், தேவபக்தியுள்ள வாழ்வினைக் குறித்த வேறுபட்ட எண்ணங்கள் இணைந்துபோக தடையாகவே மாறிவிடுகின்றன. **வேறுபட்ட பின்னணியில் பிறந்து, வளர்ந்து, படித்து, பழகிய இரண்டு மனங்கள் இணைக்கப்பட்ட பின்னர், ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளப் போராடும் போராட்டத்தில் வெற்றி பெற்றவர்கள் ஒரு சிலரே.** "கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன்" என்ற காலம் மலையேறிப் போய்விட்டதினால் வேறுவழியின்றி தாம்பத்திய வாழ்வினை வாழ்வோர், தங்களின் பிள்ளைகளின் வாழ்வில் கூட அதிக பாதிப்பை (influence) ஏற்படுத்த முடியாமல் தத்தளிக்கின்றனர்.

இதற்கிடையே வந்துவிட்ட உலகளாவிய மாற்றம் (Globlisation) இன்று அநேக பிள்ளைகளை மூன்றாம் கலாச்சாரத்திற்குத் (தாய், தகப்பன் வெவ்வேறு கலாச்சாரத்திற்குரியவர்கள்) தள்ளிவிட்டுள்ளது. எதைப் பற்றிக் கொள்வது எதை விட்டுவிடுவது என்பதனை பிள்ளை தீர்மானிக்கும் முன் வாழ்க்கையே முடிந்து விடும் போல் தெரிகிறது. எது வேதம் காட்டும் முறை எது இடைச் சொறுகல் என்பதனை கணிக்கவும் கூடாதபடி ஏற்பட்டுள்ள சூழ்நிலை தடுமாற்றத்தினையும், குழப்பத்தினையுமே அதிகமாக்கியுள்ளது.

"வேத உண்மைகள்" முன்னமே தெரிந்திருந்தால் **இப்படிப்பட்ட ஒரு திருமணத்திற்கு நான் சம்மதித்திருக்க மாட்டேனே! என்று அங்கலாய்த்து இனி என்ன செய்வது? எப்படி மாற்றுவது அல்லது மாறுவது? என்ற கேள்வியோடு மனைவியையோ, கணவனையோ பாரக்கல்லாகப் பார்த்து வாழ்வினை வேண்டா வெறுப்போடு வாழ்பவரும் அநேகர்.**

மாறிவரும் "கலாச்சார சூழலில்" (Turbulance), திருமணத்திற்கு வெளியே உறவு (Extra marital affair) பெருக ஆரம்பித்துள்ளது. வேலை ஸ்தலங்களில் தங்கள் மேல் பரிவு

காட்டியவர்களோடு உள்ள நெருக்கம் அநேகரை இரட்டை வாழ்வு வாழ வழி வகுத்துவிட்டது (double life); அது தவறு அல்ல என்பது போன்ற தோற்றமும் உருவாக்கப்பட்டு விட்டது.

"திருமணம்" என்றால் அது ஒரு ஒப்பந்தம் (commitment)" பிள்ளை என்றால் அது பொறுப்பு (Responsibility) எனவே திருமணம் செய்யாமல் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளாமல், ஆயினும் இணைந்து வாழ்க்கை நடத்துவோம் (on contract) என்ற சிந்தனை மேலோங்கித் திருமணத்திற்கு முன்பே ஒரே வீட்டில் குடியிருக்க ஒத்துக் கொண்டோரின் எண்ணிக்கை மேல்நாட்டில் பெருக, அது இந்தியாவையும் பாதிக்க ஆரம்பித்துள்ளது.

இதன் மத்தியில் "தகாதது" என்றும் "கேடான சிந்தை" என்றும் "இழிவான இச்சைமோகம்" என்றும் தேவனே பெயரிட்டு அழைத்த ஆண் ஆணோடும், பெண் பெண்ணோடும் அவலட்சணத்தை நடப்பிக்க ஒப்புக்கொடுத்தோரின் குரல் பெருகி, வலுப்பெற்று அரசாங்கத்தின் அங்கிகரிப்பையும், நீதிதுறையின் அங்கிகாரத்தினையும் பெற்றதோடு சமுதாயத்தினையும் அங்கிகரிக்க வைக்கவும், திருச்சபைத் தலைவர்களின் தலையசைவையும் பெற்று வீறுநடை போட ஆரம்பித்துள்ளது (ரோமர் 1:26–28). இதன் விளைவாக ஏற்படும் பாலியல் ரோகங்களையும் (AIDS போன்றவை) கண்டும் காணாமல் இருக்க செய்து விடுகிறது பரிதாபமே.

"விவாகரத்து" என்ற சொல் ஆதியிலிருந்தே நமக்குத் தெரிந்திருந்தாலும் (மத் 19:7), இன்றைய நாட்களில் அது ஏற்றுக் கொள்ளப்பட்டாக வேண்டும் என்ற கட்டாய நிலைக்கு சமுதாயமும் ஏன் திருச்சபையும் தள்ளப்பட்டுள்ளது. அது அரச குடும்பங்களையும், ஆண்டி குடும்பத்தினையும் விட்டு வைக்கவில்லை.

எப்படி இவளோடு, இவரோடு இணைந்து வாழ்வது என்ற கேள்வி மேலோங்கி நிற்பதனை அறியாதோர் யார்? இணைக்கப்பட்டது எந்த வகையில் என்று திரும்பி பார்ப்பதற்குப்பதிலாக இணைந்து விட்டவர்கள் எப்படி வாழ வேண்டும் என்பதனைக் காட்டிக் கொடுக்க வேண்டியது அவசியமானபடியால், வேத வெளிச்சத்தில் சேர்ந்தவர்கள் எப்படி சேர்ந்து வாழ்ந்து தேவ நோக்கத்தினைப் புரிந்து கொண்டு

**இன்பமாக வாழலாம் என்பதனைக் காண்பிக்க வேண்டி இந்த புத்தகத்தை நான் எழுதுகிறேன்.**

தன் நிலையை புரிந்துகொண்டவர்கள்தான் தன்னை மாற்றிக்கொள்ளமுடியும். இளையகுமாரனைக் குறித்து, அவனுக்கு புத்தித் தெளிந்தபோது என்ற பதங்கள் அவன் தன்னை புரிந்து கொண்டபோது என்றே பொருள்பட வருகிறது **(He came to himself)**. நம்மைப் புரிந்து கொள்ள உதவுவது "மாறாத வேதமே", அது வெளிச்சம் காட்டும் வரை நாம் அந்தகாரத்தில் இருப்பவர்களே (நீதி 6:23). **வேதபுத்தகம் அநேகருடைய குடும்பவாழ்வுகளை இருப்பதனை இருக்கும் வண்ணமாகவே காண்பித்து நமக்கு எச்சரிப்பினைத் தருவதோடு வழிகாட்டவும் செய்கிறது.** எனவே அதன் அடிப்படையில் இப்புத்தகத்தை அனைவருக்கும் பிரயோஜனப்படும் வகையில் எழுத முயற்சி எடுத்தேன். தொடர்ந்து படியுங்கள் உங்கள் உதவி தேவைபடுவோர் சமுதாயத்திலும் திருச்சபைகளிலும் நிரம்பியுள்ளனர். நீங்கள் பயன் பெறுவதோடு, அவர்களுக்கும் உதவ இதனை தேவன் பயன்படுத்துவாராக.

# திருமணத்தின் போது...

திருமணத்தில் நடக்கும் வெளிப்படையான, உள்ளான இரண்டினையும் அறிந்தவர்கள் சிலரே. இன்றைய திருமணங்கள் பெரியவர்களால் அநேகமாக நிச்சயிக்கப்பட்டாலும், தேவனுக்கு ஒப்புக் கொடுத்த ஒருவரின் வாழ்வில் தேவகரம் இதனை நடத்த வல்லதாகவே இருக்கிறது. "இந்தக் காரியம் கர்த்தரால் வந்தது, (ஆதி 24:50) என்ற வார்த்தை தேவனை சரியாக அறியாத லாபான், பெத்துவேலின் வாயிலிருந்தே புறப்பட்டது. தன்னுடைய வழிகளைக் கர்த்தருக்கு ஒப்புவித்த ஒரு மனிதனை தேவன் சரியான வழியிலே நடத்துகிறார்(ஆதி 24:12,63).

இரண்டு வேற்று சூழ்நிலையில் வளரும் நபர்களை தேவன் இணைக்கிறார். இங்கே **தேவன் ஒரு (welder) வெல்டரைப் போலவே கிரியை செய்கிறார்.** இரண்டு இரும்பு துண்டுகளையோ அல்லது வேறு இரண்டு உலோகப் பொருட்களையோ சூடாக்கி, உருகும் நிலைக்குக் கொண்டுவந்து இணைப்பது போல தேவன் அவர்களை தம்முடைய பலத்தால் கிருபையால் இணைக்கிறார். இரண்டு பேரும் இணங்க வேண்டும் அதனைத் தேவன் செய்வதற்கு அதன் மூலம் இந்தக்காரியம் எளிதாகிறது. **பித்தளையும் செம்பும் வெவ்வேறு குணத்தினை உடையதாக இருந்தாலும் அது ஒன்றாக்கப்படும் போது வெண்கலம் போன்ற அதிக உறுதியான ஒரு உலோகம் உண்டாக்கப்படுகிறதே.** இதனைத்தான் ஆண்டவரும், ஒருவராய் ஆயிரம் பேரைத் துரத்துகிறவன் இரண்டுபேராய் பதினாயிரம் பேரைத்துரத்துவார்கள் என்கின்றாரே (உபா 32:30). திருமணத்தில் இணைகின்ற போது, நம்மை தேவன் இணைக்கிறார் என்ற நினைவில் இணைபவர்கள் தங்களின் பெலன் கூடுவதனை அறிய முடியும். கணவன் மனைவியைப் போல, இருவரும் ஒரு மனதோடு வேறுயாரோடும் இணைந்து வரமுடியாதே; அது அதிசயங்களை நடப்பிக்குமே (மத் 18:19). கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் மாத்திரமே ஒன்றும் வருவதில்லை; ஏன் ஒரு துணிகூட. தாய் தகப்பன், சகோதரன், சகோதரி, நண்பர்கள் இடையில் ஏதோ ஒன்று இடையில் வரலாம். ஆனால் அதற்கு முற்றிலும் கணவனும் மனைவியும் விலக்காகிறார்கள். இதனை அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள் என்றே வேதம் கூறுகிறது (ஆதி 2:24). ஆகையால் தான் திருமண ஆராதனையில் **தேவன் இணைத்ததை மனுஷன் எவனும், எக்காரணத்தைக் கொண்டும், எக்காலத்திலும் பிரிக்காதிருக்கக்கடவன்** என்ற கட்டளை

கொடுக்கப்படுகிறது. இதனைப் புரிந்து கொண்ட சமுதாயமும், குடும்பங்களும் கணவன் மனைவியைப் பிரிக்கும் என்ற முயற்சிக்குக் கை கொடுக்காதே.

**தானாக எரியும் ஹைட்ரஜனும், எரிவதனை துரிதப்படுத்தும் ஆக்ஸிஜனும் இணைந்து தண்ணீராக, அக்கினியை அணைக்கும், தாகம் தீர்க்கும் பொருளாக மாற்றப்படும் விந்தை ($H_2O$) திருமணத்தில் நடைபெறும் ரசாயணச் சேர்க்கையல்லவா!** அதனை அறிந்து இணைந்து செயல்படும் வாழ்க்கை அநேக ஆயிரங்களுக்கு ஆசீர்வாதத்தினைக் கொண்டுவரும் என்பதில் சற்றும் சந்தேகமில்லை.

இரண்டாவதாக, தேவன் திருமணத்தில் சாட்சியாகிறார் என்பதனை வேதம் அழுத்தமாகவே கூறுகிறது (Witness). மல்கியா 2:14-ல் கர்த்தர் உனக்கும் உன் இளவயதின் மனைவிக்கும் சாட்சியாயிருக்கிறார் என்று வேதம் கூறுகிறது, அந்த உடன்படிக்கையில் அவருடைய சாட்சி நிலையானது என்பதனை மறுக்கக்கூடாதே. திருமண வைபவத்தினை வெறும் கொண்டாட்டமாகவோ, சடங்காச்சாரமாகவோ, நடைமுறையாகவோ நடத்தும் போதகர்களைக் கண்டு நான் மனம் வெம்பியிருக்கிறேன்; அது எத்தனை அர்த்தமுள்ளது. தேவன் வந்து இணைப்பது மாத்திரமல்லாமல், அவரே சாட்சியாக நிற்கிறார் என்ற நினைவு எந்த கணவன் மனைவியையும் நடுங்கச் செய்திடுமே. **அந்த உடன்படிக்கைதனை முறிக்க முயலும் போது, யாருடைய பேச்சையோ கேட்டு, யாருடைய உறவையோ நாடி, யாருடைய உதவியையோ பெறுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது, அதில் இணைக்கப்பட்டவர் தேவனும் என்கிற நினைவு நம்மை எத்தனையாய் மாற்ற வல்லது.** இதனைத் தானே பிரசங்கி "முப்புரி நூல் சீக்கிரமாய் அறாது" (பிரசங்கி 4:12) என்கிறான்.

அந்த இருவர் கூடிவரும் போது நல்ல பலன் உண்டாகும் அவர்களுடைய பிரயாசத்தினால் (working); அவர்களுடைய நடையில் உதவி உண்டு (walking); அவர்களுடைய செய்கையில் சூடு உண்டாகும் (warming up); ஒருவரை ஒருவர் கவனித்துக் கொள்வதால் (watching over) வெற்றி பெற்று வீறுநடை போடலாம் என்பதனை எத்தனை அழகாக வேதம் வர்ணிக்கிறது (பிர 4:9-12).

நியாயப்பிரமாணமும் வழங்கப்படாத நாட்களில் வாழ்ந்த

யோபுவும் "என் கண்களோடே உடன்படிக்கை பண்ணின நான் ஒரு கன்னிகையின்மேல் நினைவாயிருப்பது எப்படி? அப்பொழுது உன்னதங்களிலிருந்து தேவன் அளிக்கும் பங்கும், உன்னதங்களிலிருந்து சர்வவல்லவர் கொடுக்கும் சுதந்திரமும் கிடைக்குமோ? என் மனம் யாதொரு ஸ்திரியின் மேல் மயங்கி, அயலானுடைய வாசலை நான் எட்டிப்பார்த்தது உண்டானால், அப்பொழுது என் மனைவி வேறொருவனுக்கு மாவரைப்பாளாக வேற்றுமனிதர் அவள் மேல் சாய்வார்களாக. அது தோஷம் அது நியாயாதிபதிகளால் விசாரிக்கப்படும் அக்கிரமமாமே. அது பாதாள பரியந்தம் பட்சிக்கும் அக்கினியாய் என் சம்பத்தையெல்லாம் நிர்மூலமாக்கும்" (யோபு 31:1-2;9-12) என்று நியாயத்தீர்ப்பினை ஞாபகமூட்டுகிறாரே. அதனை அறிந்த அவர் ஆசீர்வாதங்களையும் இழக்க ஆயத்தமாயில்லையே!

மூன்றாவதாக, தேவன் திருமணத்திலும் திருமணத்திற்குப் பின்னரும் வாழ்க்கைக்குக் கண்காணியாகிறார் (watch). "நாம் ஒருவரைவிட்டு ஒருவர் மறைந்த பின் நீ என் குமாரத்திகளைத் துயரப்படுத்தி அவர்களையல்லாமல் வேறே ஸ்திரிகளை விவாகம் பண்ணினாயாகில் கர்த்தர் எனக்கும் உனக்கும் நடுநின்று கண்காணிக்கக்கடவர்" என்று தேவனை அறியாமல் குறிப்பினால் (குறிசொல்லுவதனை நம்பி) மாத்திரம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டவனும் (ஆதி 30:27); என் தெய்வங்கள் என்று கூறி சுரூபங்களை உண்டாக்கி வணங்கி வந்தவனான லாபானே (ஆதி 31:30,34) கூறுகிறான். அந்த அறிவையும் இன்று அநேகர் இழந்து விட்டனரே.

ஒரே மாம்சமாக்கப்பட்டவர்கள் பாலுறவு கொள்வதில் மாத்திரம் அதனை நிறைவேற்றிவிடலாம். ஆனால் ஒரே மனதாக மாற வேண்டிய காரியம் படிப்படியாக புரிந்து கொள்ளுதலின் அடிப்படையில் உண்டாவது. இரண்டு பேரும் தங்களை உண்டாக்கிய ஆண்டவரின் நோக்கத்தினை திருமணத்திற்கு முன்னமே புரிந்து கொண்டிருந்தால், திருமணத்திற்கு முன்னர் அதனை உட்கார்ந்து பகிர்ந்து கொண்டிருந்தால், இரண்டு பேருடைய நோக்கமும் ஒரே காரியத்தினைச் சாதிக்கும் என்ற நிலையை அறிந்த பின்னர் திருமணத்திற்கு சம்மதித்திருந்தால் ஒரே மனதை உடையவர்களாக மாறுவது மிகவும் எளிதானதே. "இரண்டுபேர் ஒரு மனப்பட்டிருந்தாலொழிய ஒருமித்து நடந்து போவார்களோ? (ஆமோஸ் 3:3)

இதினிமித்தம் "நாங்கள் ஒரே ஆவியையுடையவர்களாய் ஒரே அடிச்சுவடுகளில் நடக்கிறவர்கள்" என்று எளிதாக பிரகடனப்படுத்தக் கூடுமே. (2 கொரி 12:18)

தீர்மானங்கள் வாழ்க்கையில் எடுக்கும் நேரங்கள் அனைத்திலும், வேலையைக் குறித்தோ, பிள்ளைகளைக் குறித்தோ, பெரிய வீடு வாங்குவதினைக்குறித்தோ மேற்சொல்லப்பட்டக் காரியங்கள் நினைவில் கொள்ளப்படும் போது, போராட்டத்தோடே அல்ல சந்தோஷத்தோடே கூட அதனை நிறைவேற்றக் கூடும்.

கூடவே **விட்டுக் கொடுத்தல் என்னும் மந்திரமும் வாழ்க்கையில் வளம் சேர்க்கிறது.** விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென கவலைப்படுகிறான்; அப்படியே விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென கவலைப்படுகிறாள் (1கொரி 7:33,34). திருமணத்திற்கு முன் தனக்காகவும் தன் பிரயோஜனத்திற்காகவும் வாழும் நபர், திருமணத்திற்கு பின் மற்றவரை சந்தோஷப்படுத்தவும், பின்னர் பிள்ளைகள் பிறக்கும் போது அவர்களை சந்தோஷப்படுத்தவும் வாழ ஆரம்பிப்பதினால் **அன்பு பகிர்வு அதனைப் பெருக்கவே செய்கிறதே ஒழிய குறைப்பதில்லை** 'இறைக்கிற கிணறு ஊறுகிறது" என்பது முற்றிலும் உண்மையாகிறது.

இதுனால், பலவீனபாண்டம் என்று **அழைக்கப்படும் மனைவியோடு விவேகமாய் வாழ, கணவனும் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தினை செய்து இணைந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்க வேண்டும் என்ற சிந்தையினாலும், ஜெபங்களுக்குத் தடைவந்து தேவ ஐக்கியத்தினை இழந்து விடக்கூடாது என்கிற கரிசனையினாலும் தங்களை விட்டுக் கொடுக்கும் காரியத்திற்கு மாற்றிக் கொள்கின்றனர்.** (1 பேது 3:7)

மனைவியும் புருஷனுக்குக் கீழ்படிந்து தங்களை அலங்கரித்து கொள்கிறாள் (1பேது 3:5); இவை அனைத்தும் திருமணத்தின் போது நடைபெறுகிறது. உள்ளும் புறமும் இதனை உணர்ந்த வாழ்க்கை இன்பகரமானதே.

# பாலுறவில்

இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்ற வார்த்தைகளில் தம்பதியரின் பாலுறவும் அடங்கும். இயற்கையில் சிலர் பாலுறவில் அதிகம் நாட்டம் உடையவராகவும், சிலர் அதனைக் குறித்து அத்தனை கவலை கொள்ளாதவர்களாகவும் உண்டாக்கப்பட்டுள்ளனர். இந்த ஏற்றத் தாழ்வினை இணைபவர்கள் புரிந்து கொள்ளாவிடில் எப்போதும் மற்றவரை குறைவாகவோ அல்லது ஒரு மிருகத்தைப் போன்றோ பார்க்கும் சூழ்நிலை உண்டாகி புயலை உண்டாக்க அதிக வாய்ப்புகள் உண்டு.

வாலிப நாட்களில் தேவையற்ற (Pronography) திரித்த வாழ்விற்கு (perverted life) ஒப்புக் கொடுத்தக் காரியங்களில் ஈடுபட்டதினால், மனைவியிடத்திலும் அல்லது கணவனிடத்திலும் இப்படிப்பட்டவைகளை எதிர்பார்த்துத் தங்களைக் காயப்படுத்திக் கொண்டோர் ஏராளம். சரீர பெலவீனங்கள் நிமித்தம், வியாதியின் நிமித்தம் இதற்கு ஈடுகொடுக்க முடியாமல் தவிப்போர் வாழ்வில் நித்தமும் போராட்டமே. தெளிவான எண்ணங்கள், அன்பைப் பகிர்ந்து கொள்வது வெறும் பாலுறவில் மாத்திரம் அல்ல என்ற நினைவுகள் இந்த போராட்டத்தினை மேற்கொள்ளப் போதுமான பெலனுள்ளவை.

பாலுறவு (sex) மிருகங்களுக்கு வெறும் இனப்பெருக்கத்திற்காகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் மனிதனுக்கோ மகிழ்ந்து இன்புறுவதற்கும் இணைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது (To enjoy & have pleasure). சினையான ஒரு ஆட்டையோ, பசுவையோ துணை மிருகம் தீண்டுவதில்லை; ஆனால் மனிதன் இதற்கு விதிவிலக்கு. ஒரு குறிப்பிட்ட வயதினைக் கடந்து விட்டால் மிருகங்கள் அதில் ஈடுபடுவதில்லை மாறாக மனிதன் இறுதி வரை இந்த உணர்வுகளினால் நிறைந்திருக்கிறான். இதனை விளக்கவே நீதிமொழி 5:18-20ல்,

"உன் இளவயதின் மனைவியோடு மகழ்ந்திரு அவளே நேசிக்கப்படத்தக்க பெண்மானும், அழகான வரையாடும் போலிருப்பாளாக. அவளுடைய ஸ்தனங்களே எப்போதும் உன்னைத் திருப்தி செய்வதாக. அவளுடைய நேசத்தால் நீ எப்போதும் மயங்கியிருப்பாயாக. என் மகனே, நீ பரஸ்திரியின் மேல் மயங்கித் திரிந்து அன்னிய ஸ்திரியின் மார்பைத் தழுவ

வேண்டியதென்ன" என்று காண்கிறோம். மார்பு குழந்தைக்கு அல்லது குட்டிக்குப் பாலூட்டி வளர்க்க மிருகங்களுக்கு தரப்பட்டது. **மனிதனுக்கோ கூடவே மகிழ்வுறவும் அருளப்பட்டுள்ளது** என்பது இந்த வசனங்களில் தெளிவாகிறது அல்லவா!

இதில் கவனிக்கப்படவேண்டியது, **உன் மனைவியை அல்லது கணவனைத் திருப்திப்படுத்த வேண்டியது கடமை ஆகிறது.** புருஷன் தன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யக்கடவன்; அப்படியே மனைவியும் தன் புருஷனுக்குச் செய்யக்கடவள். மனைவியானவள் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, புருஷனே அதற்கு அதிகாரி; அப்படியே புருஷனும் தன் சுய சரீரத்திற்கு அதிகாரியல்ல, மனைவியே அதற்கு அதிகாரி (1கொரி. 7:3,4) என்ற வார்த்தைகள் அர்த்தம் பொதிந்தவை. **மணவாளன் மணவாட்டியின் மேல் மகிழ்ச்சியாய் திருப்தியாய் இருப்பது தேவ சித்தம்** (ஏசா 62:5); இது செயல்படாத குடும்பத்தில் மற்றவர்களை நாடிச் செல்ல விழையும் நபர்களைப் பார்த்து ஆண்டவர் சொல்வதனைக் கேளுங்கள்.

விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாக மஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபச்சாரகாரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார் (எபி 13:4). **மனைவியோடு மாத்திரமே மகிழ்ந்திருக்க வேதம் அனுமதிக்கிறது மாற்றாரோடு அல்ல.**

**கணவனின் ஒரு அன்பு தொடுதல் (caressing) ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம். மனைவியின் ஒரு முத்தத்தில் ஆயிரம் ஆபத்தை அகற்றிவிட போதுமான பெலன் உள்ளது.** படுக்கைக்குச் செல்லுமுன் இருவரும் சமாதானத்தோடு செல்ல வேண்டும் என்பதனை விளக்கும் வேதம் "நீங்கள் கோபங்கொண்டாலும் பாவம் செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கும் முன்னமே உங்கள் எரிச்சல் தணியக்கடவது" (எபே 4:26) என்று கூறுகிறது. ஏனெனில், **உடலுறவில் ஆவியும் ஈடுபடுகிறது** என்பதனை நாம் மறக்கலாகாது (மல் 2:15; 1கொரி 6:16,17). இனப்பெருக்கத்தின் போது அல்லது பிள்ளை உண்டாகும் போது அது மூன்றுவிதத்தில் உருவாக வாய்ப்புண்டு என்பதனை வேதம் நமக்குக் காட்டுகிறது. இரத்தத்தினாலாவது, மாம்ச சித்தத்தினாலாவது, புருஷனுடைய சித்தத்தினாலாவது என்று அது வரையறுக்கிறது (யோவா 1:13).

அதன் பொருள் என்ன? இரத்தத்தினால் என்றால் **உணர்ச்சி**

பூர்வமான ஈடுபாட்டினால் பிறக்கும் குழந்தை. அது உணர்ச்சிகளை வெளிக்கொப்பளிக்கும் பிள்ளையாகவே காணப்படும் (by a casual relationship). புருஷசித்தத்தினால் என்றால் புருஷனுக்கு உடலுறவு கொள்ள வாஞ்சை மனைவிக்கோ அதில் விருப்பமில்லை; எனவே அது ஒரு கட்டாய உடலுறவு. மனைவிதான் என்றாலும் அதில் பிறக்கும் பிள்ளை கடினமஃதுடனேயே காணப்படும் (forced sex). மாம்ச சித்தத்தினால் பிறக்கும் குழந்தை இரண்டு பேரும் இசைந்து, தீர்மானித்து, திட்டமிட்டுக் கூடிவருவதால் உண்டான குழந்தை. அதில் இன்பம் இணைந்திருந்தாலும் நோக்கமும் இணைகிறது. இந்த குழந்தை மிருது சுபாவங்களோடு (gentle) பிறக்கிறது. எனவே பாலுறவு கொள்ளுமுன் மனைவியும் ஆவியில் ஏற்படும் காரியங்களும் மிகவும் முக்கியம். பயந்த ஆவியில் இணையும் பெற்றோருக்கு பிறக்கும் குழந்தை எதைக் கண்டாலும் பயப்படும். சந்தேக ஆவியில் இணையும் போது பிறக்கும் குழந்தை எதையுமே நம்பாது. எனவே ஏதோ உடலின் தூண்டுதலால் உடலுறவு கொள்வது அநேக நேரங்களில் பிற்கால சந்ததியைப் பாதித்து விட வாய்ப்புண்டு.

ஈசாக்கு ரெபேக்காளோடு தனக்கு பெரிய பிள்ளைகள் இருந்த போதிலும் விளையாடிக்கொண்டிருந்தான் (caressing, dallying) (ஆதி 26:8) என்பது ஒரு சுமூகமான திருமணத்தின் அடையாளம்.

விட்டுக்கொடுத்தல், திருப்தியாக்குதல் போன்றவை தாம்பத்திய உறவில் இந்நிலையில் முக்கியமானவை. பட்டணங்களில் வாழ்வோருக்கும், சிறிய வீட்டில் வாழ்பவருக்கும், கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் உள்ளவருக்கும் (Joint family) அதனால் அனேக நேரங்களில் போராட்டம் உண்டு.

அக்காவின் பேர்காலத்தில் உதவிசெய்யச் சென்ற சகோதரிகளுக்கும், தொடர் வியாதியின் நிமித்தம் படுக்கையில் உள்ள மனைவியை நெருங்கக் கூடாத கணவருக்கும், அந்நிய தேசத்தில் சம்பாத்தியம் செய்ய சென்ற கணவன் நிமித்தமும், படைகளத்தில் போர்புரியும் வீரர்களின் பிரிவின் நிமித்தமும், வியாதி நேரத்தில் அன்பு பாராட்டும் சிலரின் அலாதி பிரியத்தின் நிமித்தமும் அநேகருடைய குடும்ப வாழ்வில் புயல் வீசுவது உண்டு; அகப்பட்டு மாட்டிக் கொண்டோரும் உண்டு. எந்நிலையிலும் தேவ பார்வையைவிட்டு அகலாத வாழ்க்கையைத் தேவன் தருவாராக.

# இணைந்து விட்டதினால்...

அநேக நேரங்களில் இந்தியத் திருமணங்களில், தேவ நோக்கம் தனி வாழ்வில் என்ன என்பதினைக் கண்டு கொண்டோரின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே உள்ளபடியினால், அதனைக் குறித்த கவனம் அதிகம் செலுத்தப்படுவதில்லை. நம் குடும்பத்திற்கு ஒத்துப் போவார்களா? என்கிற கேள்விகள் கூட கேட்கப்படுவதில்லை. மாறாக மற்ற புறக்காரியங்கள் மேலோங்குவதினால் இணைக்கப்பட்டவர்கள் அநேகருடைய வாழ்க்கையில் அடிக்கடி “பூகம்பங்கள்” தான் ஏற்படுகின்றன. இதன் விளைவுகள் சுற்றத்தாரையும், பெற்றோரையும் சபைகளையும், சமுதாயத்தினையும் அதிகமாக பாதிக்கத் தொடங்கியுள்ளதனை அறிந்ததினால் இந்த புத்தகத்தை எழுத நேரிட்டது.

சாதாரணமாக நான் ஒரு நபரிடம் திருமணத்திற்கு முன் சில காரியங்களை தற்பரிசோதனைச் செய்ய சொல்லுவது வழக்கம். முதலாவது வாழ்க்கையில் **“தேவ நோக்கம்” என்ன என்பதனை அறியாமல் திருமண வாழ்க்கையில் ஈடுபடுவது சரியானது அல்ல.**

இரண்டாவது, அதனை நிறைவேற்ற வேண்டிய ஒப்புக்கொடுத்தலும், இணைவோரை அதற்குள்ளாக மாற்ற பலனும், பொருளாதாரமும் உனக்கு கிடைக்கும் வரை **காத்திரு.**

மூன்றாவது, யாரையாவது மனதில் வைத்துக்கொண்டு பின்னர் இந்த திருமணம் தேவ சித்தம் தானா என்பதனை அறிய முற்படுவதினால் ஒன்றும் நடக்கப்போவதில்லை. **முதலாவது அறிய வேண்டியவைகளை அறிந்து, ஆராயவேண்டியவைகளை ஆராய்ந்து, அனைத்தும் தெளிவான பின்னர் தேவ சமூகத்தில் போய் காத்திருந்து பதில் பெறுவது சிறந்தது.** பதில் தெளிவாக இல்லாவிடினும் மனதில் சமாதானம் இருக்கவேண்டும். அது தேவ நடத்துதலுக்கு நம்மை இயக்குவிக்கும் நல் ஆதாரம்.

ஆயினும், **பெற்றோரின் கட்டாயம், சூழ்நிலைகளின் கட்டாயம், அறியாமையின் ஆதிக்கம் போன்றவை அநேக ஒழுங்குபடுத்தப்பட்டத் திருமணங்களில் காணப்படுவதினால் எனக்கு ஏற்றவர் இவர்தானா? என்கிற கேள்விக்குப் பதில் காணும் முன்னரே அனைத்தும் முடிந்து விடுகிறது.** அதனால் வாழ்க்கையில் திக்குமுக்காடுவோரின் எண்ணிக்கை மிகவும் அதிகம். அவர்களுக்கு

உறுதுணையாக வேதம் காட்டும் பலவிதமான தம்பதியரை மையமாக வைத்து இப்புத்தகத்தில் அறிவுரைகள் தரப்பட்டுள்ளன. வேதம் காட்டும் தம்பதியரை நான்கு பிரிவாக பிரித்து அதினால் உண்டாகும் கஷ்ட, நஷ்டங்கள், நிலைகள், பாதிப்புகள் போன்றவைகளை எடுத்துக் காட்டாகவும் எச்சரிப்பாகவும் எழுதினால் கரைகாண முயற்சிப்போர்க்கு உதவ முடியுமே என்ற நோக்கில் இதனைப் படைக்கிறேன்.

உலகோரை இரண்டு பிரிவாக பிரிக்கிறேன். தேவபக்தியுள்ளோர் (Godly) தேவ பக்தியில்லாதோர் (Ungodly). இந்த இரண்டு தரப்பினர்கள் இணைய நேரிட்டால் கீழ்கண்ட முறையில் திருமண உறவுகள் ஏற்படலாம்.

தேவ பக்தியுள்ள கணவனும், பக்தியற்ற மனைவியும்
(Godly Husband & Ungodly Wife)

தேவ பக்தியுள்ள மனைவியும், பக்தியற்ற கணவனும்
(Godly Wife & Ungodly husband)

தேவபக்தியுள்ள கணவனும், பக்தியுள்ள மனைவியும்
(Godly husband & Godly wife)

தேவபக்தியற்ற கணவனும், பக்தியற்ற மனைவியும்
(Ungodly Husband & Ungodly Wife)

கிட்டத்தட்ட 32 தம்பதியரை கண்டுபிடித்து, அவர்களுடைய வாழ்க்கையினை ஆராயமுற்பட்டு, கற்றுக்கொள்ளக் கூடிய பாடங்களை வாழ்வின் படிப்பினையாக்க இதனை வரைகிறேன்.

இந்த உதாரணங்களில் சிலர் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் வாழ்ந்ததினால் இரண்டு மனைவிகளோடு வாழ்ந்தவர்கள். குறிப்பாக ஆபிரகாம் தேவனுக்குப் பயந்த சாராளோடும் (1பேது 3:5,6), தேவனை சந்தித்திருந்த போதிலும் தேவனை சாராமல் வாழ்ந்த ஆகாரோடும் வாழ்ந்தவர் (ஆதி 16:13; ஆதி 21:15,16)

தேவனுக்குப் பயந்து வாழ்ந்த எல்க்கானா, தேவ பக்தியுள்ள அன்னாளோடும் தேவனை புரிந்து கொள்ளாத பெனினாளோடும் வாழ்ந்தவர் (1 சாமு 1:2,6,7)

தேவ நோக்கத்தினை நிறைவேற்ற அழைக்கப்பட்ட

யாக்கோபு, தன் இம்மைக்குரிய வாழ்வினையே குறியாகக் கொண்டிருந்த லேயாள், ராகேல் என்ற மனைவிகளை உடையவர் (ஆதி 29,30 அதிகாரங்கள்).

"சத்திய வேதம்" அனைத்தையும் தெள்ளத்தெளிவாக பாரபட்சம் பாராட்டாமல் இருப்பதனை இருக்கிற வண்ணமாகவே காண்பித்து நமக்குத் தெரிவிக்கிறது. அது பரிசுத்த வேதாகமம் தான் ஆயினும் உள்ள பிழைகளை எந்த தேவ மனிதனில் கண்டாலும் சுட்டிக்காட்ட அது மறக்கவில்லை; மறைக்கவுமில்லை. இது **புராணங்களைப் போல** கட்டுக் கதையும் அல்ல. தேவனே சத்தியபரர் என்றும், எந்த மனுஷனும் பொய்யன் என்றும் அடித்துக் கூறி (ரோமர் 3:4); எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள். நன்மை செய்கிறவன் இல்லை ஒருவனாகிலும் இல்லை (ரோமர் 3:12) என்பதனை வெட்ட வெளிச்சமாக்கி, விழுந்து போனவர்களுக்கும் தடுமாறுகிறவர்களுக்கும் வாழ வழி காட்ட வெளிச்சமாய் அநேகருடைய வாழ்க்கையை வெட்டவெளிச்சமாக்கி, நம்மை எச்சரித்து கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியை படிப்பிக்குதலுக்கும், பிரயோஜனமுள்ளதாய் நம்மை தேறினவர்களாக (வாழ்க்கை பரீட்சையில் தேர்வு பெறச் செய்து) வாழத் தகுதியுடையவர்களாக மாற்றுகிறது. (2தீமோ 3:16,17). சத்திய வேதம் கண்களையும் தெளிவாக்கி விடுகிறது (சங் 19:8), பேதைகளை ஞானியுமாக்கி விடுகிறது (சங்19:7)

எனவே இந்த 32 தம்பதியினரின் வாழ்வில் காணப்படும் அன்றாடப் போராட்டங்கள், இந்த நவீன காலத்தில் வாழும் நமக்கும் (Modern life) உண்டு என்பதனையும், தொழில் நுட்பத்தின் விளைவினால் (Technology) நம் சிந்தைகள் மாற்றப்பட்ட சூழ்நிலையில், போராட்டத்தின் வர்ணம் (colour) மாறியிருந்தாலும், கருப்பொருள் அதுவாகவே இருப்பதினால் அவர்கள் மேற்கொண்ட முறைகள் நமக்கு நிச்சயமாகவே உதவும்.

**கலாச்சாரம் நம்மை அநேக நேரங்களில் நோவாவைப் போல தேவ வார்த்தைக்குச் செவி கொடுக்க தயங்கப்பண்ணுகிறது.** பேழையை உண்டாக்க கர்த்தர் கட்டளையிட்டபோது அதற்கு முற்றிலும் கேள்வியின்றி கீழ்படிந்த நோவா (ஆதி 6:22), ஆணும் பெண்ணுமாக பேழையில் பிரவேசிக்கச் சொன்ன போது, மிருகங்கள் ஆணும் பெண்ணுமாக பேழைக்குட்பட்டன (ஆதி 7:9) ஆனால் நோவா தன் குமாரரோடும், அவன் மனைவியும் மருமக்களோடு பிரவேசித்தனர் (ஆதி 7:13).

பேழையை விட்டு வெளியே வரும்போதும் தேவன் மீண்டும் கட்டளையிடுகிறார். "நீயும் உன்னோடே உன் மனைவியும் உன் குமாரரும் உன் குமாரரின் மனைவிகளும் பேழையை விட்டுப்புறப்படுங்கள்" என்று (ஆதி 8:16). ஆனால், நோவாவோ பழக்கதோஷம், பாரம்பரியம், கலாச்சாரம் என்கிற படியினால் தன் குமாரரோடும் பெண்கள் அனைவரும் தனியாகவும் புறப்பட்டனர். (ஆதி 8:18) விளைவு விபரீதமே. தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப்படுத்திருந்ததனை குமாரன் காம் கண்டு சபிக்கப்பட்டவன் ஆகிறதற்கு இதுவும் (கலாச்சாரம், பாரம்பரியம் போன்றவை) காரணமாகிற்று (ஆதி 9:21,25).

இணைந்து விட்ட நாம் எப்படி நம்மை மாற்றிக்கொள்ளவேண்டும் என்பதனை வேதம் காட்டும் தம்பதியரின் வாழ்வில் இருந்து கற்றுகொண்டு சீர்பெறுவோமாக.

மனைவியைக் கண்டடைகிறவன் நன்மையானதைக் கண்டடைகிறான். கர்த்தரால் தயையும் பெற்றுக் கொள்ளுகிறான் (நீதி 18:22). வீடும் ஆஸ்தியும் பிதாக்கள் வைக்கும் சுதந்தரம்; புத்தியுள்ள மனைவியோ கர்த்தர் அருளும் ஈவு (நீதி 19:14) என்ற மாறாத ஆசீர்வாதங்களை அனுபவிப்பவர்கள் வெகுசிலரே. அவள் வீட்டிற்குள் இருப்பவர்களுக்கும் வருபவர்களுக்கும் புத்துணர்ச்சி தரும் வீட்டோர கனிதரும் திராட்சக் கொடி (சங் 128:3); குடும்பத்திற்கு பெலன் சேர்க்கும் பிள்ளைகளை உருவாக்கித்தருபவள் (சங் 128:3; சக 4:12).

அவள் "ஆறை நூறாக மாற்றுபவள்" கணவனிடமிருந்து பெறும் ஒரு சிறு விந்தை பிள்ளையாக உருமாற்ற வல்லமையுள்ள கர்ப்பப்பையை உடையவள். ½கிலோ அரிசியை சமைத்து பாத்திரம் நிறைய சோறாக மாற்றுபவள். ருசியற்ற வாழ்விற்கு ருசி ஏற்றுபவள் என்பது எத்தனை உண்மையோ, அத்தனை உண்மை அவளுக்கு அழிக்கவும் வல்லமை உண்டு என்பது. புத்தியுள்ள ஸ்திரீ தன் வீட்டைக் கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரியோ தன் கையினால் அதை இடித்துப் போடுகிறாள் (நீதி 14:1)

தான் வேலை செய்வது மற்றவர்களுக்கு வாழ்வு கொடுக்கவே என்பதனை கற்றுக்கொண்ட குணசாலியானவள், முதலாவது தன் வேலையின் பலன் சிறுமையானவர்களுக்கும் ஏழைகளுக்கும் உதவவே என்பதனையும், பின்னர் தன் வீட்டார்

அனைவருக்கும் பாதுகாப்பளிக்கவும் எல்லாவற்றிற்கும் பின்னரே தன்னுடைய தேவைகளுக்கு என்பதனை விளங்கப்பண்ணுகிறாள்; (நீதி 31:19-22) அவள் பெருமை சேர்ப்பவள்.

ஆனால் அப்படிப்பட்டவளோடு விவேகமாக வாழக் கற்றுக்கொள்ளாதோர் நிலை பரிதாபமே. தான் ஆண் எனவே அவளை அடக்கி வாழ வேண்டும், அடிமையாய் நடத்த வேண்டும், பெண் புத்தி பின் புத்தி என்ற கொள்கையை தலையில் கொண்டு வாழ்வினைக் கெடுத்துப் போட்டவர்கள் எத்தனை பேர்! ஆனால் இடித்துப்போடும் குணம் கொண்டவளின் ஆலோசனைகள் ஏவாளைப் போல, சாராளைப் போல சில நேரங்களில் தவறான ஆலோசனைக்களை கணவனுக்கு தந்து காரியங்களைச் சீரழித்தும் போட்டுள்ளனவே. ஏவாள் கர்த்தரை நித்தம் தரிசித்தவள் (ஆதி 3:8). சாராள் கர்த்தரை நம்பி ஆபத்துக்குப் பயப்படாமல் எகிப்தில் பார்வோன் அரண்மனையில் புகுந்தவள் (1பேது 3:6); ஆயினும் சூழ்நிலைகள் அவர்களைத் தடுமாறச் செய்தபோது பெரும் ஆபத்தினை உலகிற்கு கொண்டு வரக் காரணமாகிவிட்டார்கள். எனவே "அவள் சொல்லுவது எல்லாம் எனக்கு ஏற்றது" என வாழும் கணவனும் மாட்டிக்கொள்கிறான். இதனைத்தான் விவேகமற்ற வாழ்வு என்று வேதம் சொல்லுகிறதோ…?

வேத வெளிச்சத்தில், தேவ சித்தத்தில் தேவ நோக்கத்தினைப் புரிந்து கொண்ட வாழ்வில் தன்னை வாழ ஒப்புக்கொடுத்தோர் வாழ்வில் காயங்கள் பட்டாலும் மடிந்து போக மாட்டார்; மாறாக நிமிர்ந்து வெற்றிப் புன்னகையோடு முன்னேறுவர்.

இப்புத்தகத்தினை வாசித்து முடிக்கும் போது அப்படிப்பட்ட இன்பகரமான, இணக்கமான, இல்லறவாழ்வு உங்களுக்காகும் என நான் நம்புகிறேன். செய்த தவறுகளைத் திரும்பச் செய்யாதபடிக் காத்துக் கொள்ளவும், விளைவுகளைக் கண்டு விலகியோட தேவ பலன் போதுமானதாக இருக்கும் என விசுவாசிக்கிறேன்.

"நீதிமான் ஏழுதரம் விழுந்தாலும் திரும்பவும் எழுந்திருப்பான்" (நீதி 24:16) எனவே வெற்றி வாழ்வை நாடுங்கள்; புன்னகை செய்து முன்னேறுங்கள்; புதியதாக மாறட்டும் எண்ணங்கள்; புதுப்பிக்கப்படட்டும் தீர்மானங்கள்; புத்துணர்ச்சி பெறட்டும் உடன்படிக்கை; புது சமுதாயம் படைப்போம்.

ஆதாம் மிகுந்த ஞானவானாக, அறிவுள்ளவனாக புத்தி

கூர்மையுள்ளவனாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தான். பாவம் அவனில் பிரவேசித்து அவனுடைய எண்ணங்களைக் கெடுக்கும் முன்னர் சகலவித பறவைகளுக்கும் மிருகங்களுக்கும் பேரிடத்தக்க வல்லவனாக இருந்தான் (ஆதி 2:19,20). ஆனால் அவனுடைய தனிமையைக் கண்ட ஆண்டவர் அவனுக்கு ஏற்ற துணையைத் தருவதற்கு அவனிடம் ஆலோசனைக் கேட்கவில்லை. எப்படிப்பட்ட பெண் உனக்கு வேண்டும்? என அவனிடம் கேட்கவில்லை. ஆனால் **அவனுக்கு ஏற்ற துணையைக் கொண்டுவந்து நிறுத்துகிறார். ஆதாமும் தேவன் எனக்கு நன்மையையே செய்கிறவர் என்பதனை அறிந்திருந்ததினால் (சங்119:68), அவளை அவர் தந்த வண்ணமாகவே ஏற்றுக்கொள்ளுகிறான்;** கூடவே அவளில் களிகூறுகிறான் (ஆதி 2:23)

அனேகருடைய ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்வில் தேவன் தருவதனை அப்படியே ஏற்றுக்கொள்ள மனமில்லாததினால் தான் போராட்டம் ஆரம்பிக்கிறது.

பின்னதாக ஈசாக்கும் அப்படியே எலியேசர் **கர்த்தர் நடத்தின விதத்தையும், ரெபேக்காளைத் தெரிந்தெடுத்த முறையினையும் கூறி விவரித்த போது அவளை அழைத்துக்கொண்டு போய் தனக்கு மனைவியாக்கிக் கொண்டு அவளை நேசித்தான்** (ஆதி 24:66,67). தன் தகப்பனாகிய ஆபிரகாம் விருப்பத்தினை வேலைக்காரன் மூலம் தேவன் நிறைவேற்றுவதனையும், வேலைக்காரன் தெரிந்து கொள்வதற்கு தேவ நடத்துதல் எப்படியிருந்தது என்பதனையும் கண்ட அவனுக்கு வாழ்க்கையில் போராட்டங்கள் வந்தபோது அதை தாண்டிச்செல்வது எளிதாக இருந்தது மாத்திரமல்லாமல், தனக்குப் பிள்ளைகள் பிறந்து, பெரியவர்களான பின்னரும் தன் மனைவியாகிய ரெபேக்காளோடு விளையாடிக்கொண்டிருக்கக் கூடியதான சூழ்நிலையில் காணப்படுகிறான் (ஆதி 26:8). அதனை ஜன்னல் வழியாகக் கண்ட அபிமெலேக்கு அவர்கள் கணவன் மனைவி என்பதனை அறியக் கூடிய விளையாட்டு அது; **அத்தனை இனிமையான வாழ்க்கை அது.** இறுதிவரை வேறொருவர் முகமும் அவன் பார்க்கவில்லை. இருபது வருடங்கள் பிள்ளையில்லாமல் இருந்தும் தன் தகப்பனைப் போலவோ அல்லது மற்ற ஜனத்தினைப் போலவோ அவன் வேறொருத்தியைத் தேட வில்லை (ஆதி 25:20,26).

ஆதியில் "ஏற்ற துணை"யை உண்டாக்கின ஆண்டவர் அவளை **துணையாள்** என்றே அழைக்கிறார் (**Help Meet**) "வாழ்வை

முழுதாக்கும்" பாகம் என்றே வேதம் குறிப்பிடுகிறது (compliment – Amplified Bible). இதே பொருளில் தான் நமக்கு பரிசுத்த ஆவியானவரும் தரப்பட்டிருக்கிறார். யோவான் 14:16-ஐ விளக்கும் (Amplified Bible) விரிவுரை வேதாகமம் தேற்றரவாளன், ஆலோசகர், உதவியாளர், பரிந்து பேசுபவர், வழக்குரைஞர், பலப்படுத்துபவர், கூட நிற்பவர், (Comforter, consoler, helper, intercenor, Advocate, Strengther and Stand by) என்ற பதங்களை உபயோகப்படுத்தி அதின் உள் அர்த்தந்தனை நமக்கு விளக்குகிறது.

எனவே, மனைவியும் நமக்குத் தரப்படும் போது, இதே நிலையில் இணைக்கப்படுகிறாள் என்கிற எண்ணம் நம்மை ஆக்கிரமித்தால், அவள் உயிரோடிருக்கும் நாளெல்லாம் எனக்கு தீமையையல்ல நன்மையையே செய்கிறாள் (நீதி 31:12) என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும். பரிபூரண ஒப்புக்கொடுத்தலின் விளைவாக தேவன் இதனை நடப்பிப்பார். அது வேலைக்காரன் தேடினதாக இருந்தாலும், கர்த்தரின் வழிநடத்துதலைப் புரிந்து கொண்டோர்க்கு அதனை அள்ளி அணைத்துக்கொள்வது மிகவும் எளிதானதே.

சூழ்நிலைகளினால், மற்றவர்களின் கட்டாயத்தினால், தேவையற்றவர்களின் குறுக்கீட்டினால், மாம்சத்துக்குரியவரின் பிடிவாதத்தினால் சில வேளைகளில் விரும்பப்படாத நபர் நமக்குக் கிடைத்துவிட்டால் என்ன செய்வது? என்கிற கேள்விக்கு பதில் கொடுக்க வேண்டிய அவசியம் உண்டாகிறபடியால், அதனை விளக்கும் வண்ணமே தேவ பக்தியற்ற நபரை மணந்தவர்கள் வாழ்வில் ஏற்படும் சூறாவளியினைக் கடந்து செல்ல உதவும் வண்ணம், வேதத்தின் வெளிச்சத்தில் மேற்சொல்லப்பட்ட தம்பதியினரின் வாழ்வினை நாம் அலசி ஆராய்வது நல்லது.

ஏனெனில் மனைவியைக் கண்டவன் வாழ்வில் காரியங்கள் வெகுவிரைவில் மாற்றப்படும் அபாயம் உண்டு. இராஜாவின் பந்திக்கு அழைக்கப்பட்டிருந்த ஒருவன் இடையில் திருமணம் செய்து கொண்டபோது, மனைவி அவனை மாற்றிவிட்ட விந்தையை இயேசு விளக்கும் போது, 'நான் பெண்ணை விவாகம் பண்ணினேன் அதினால் நான் வரக்கூடாது' என்று சொல்கிறான் (மத் 22:2; லூக் 14:20). திருமணத்திற்கு முன்பு "துரு துரு" என்று காணப்படும் அநேகர் திருமணத்திற்கு பின்பு "திரு திரு" என்று முழிப்பதனை நான்

கண்டிருக்கிறேன்.

எப்படியாயினும் இணைக்கப்பட்டிருக்கிற நபரில் இருந்து பிரிந்து போவதற்கு வேதம் அனுமதி வழங்கவில்லை. மாறாக மாற்றி வாழ்வதற்கான வழியை நமக்குக் காட்டிக்கொடுக்கிறது. "தவறான நபர் கிடைத்து விட்டார்" என்று அங்கலாய்க்கவோ, வாழ்நாள் எல்லாம் வருத்தப்படவோ தேவையில்லை.

'அந்நிய நுகத்தில் அவிசுவாசிகளுடனே பிணைக்கப் படாதிருப்பீர்களாக' (2கொரி 6:14) என்பது மாறாத பிரமாணம். ஆனால், திருமணத்தின் போது இரட்சிக்கப்படவில்லை, பின்னரே ஆண்டவரை அறிந்து கொண்டேன் என்பவர்கள் உண்டல்லவா! அப்படிப்பட்டவர்களைக் குறித்து வேதம் கூறும் தெளிவான அறிவுரை, "மனைவியானவள் தன் புருஷனை விட்டுப் பிரிந்து போகக்கூடாது; பிரிந்து போனால் அவள் விவாகமில்லா திருக்கக்கடவள்; அல்லது புருஷனோடே ஒப்புரவாகக்கடவள் புருஷனும் தன் மனைவியைத் தள்ளிவிடக் கூடாது. சகோதரனுடைய மனைவி அவிசுவாசியாயிருந்தும் அவனுடனே வாசமாயிருக்க அவளுக்குச் சம்மதமானால் அவன் அவளைத் தள்ளி விடாதிருக்கக்கடவன். அப்படியே, ஒரு ஸ்திரியினுடைய புருஷன் அவிசுவாசியாயிருந்தும், அவளுடனே வாசமாயிருக்க அவனுக்குச் சம்மதமிருந்தால் அவன் அவளைத் தள்ளிவிடாதிருக்கக்கடவன். ஏன்னத்தினாலெனில், அவிசுவாசியான புருஷன் தன் மனைவியால் பரிசுத்தமாக்கப்படுகிறான். அவிசுவாசியான மனைவி தன் புருஷனால் பரிசுத்தமாக்கப்படுகிறாள். இல்லாவிட்டால் உங்கள் பிள்ளைகள் அசுத்தமாயிருக்குமே; இப்பொழுதோ அவைகள் பரிசுத்தமா யிருக்கின்றன.

ஆகிலும், அவிசுவாசி பிரிந்து போனால் பிரிந்து போகட்டும். இப்படிப்பட்ட விஷயத்தில் சகோதரராவது சகோதரியாவது அடிமைப்பட்டவர்களல்ல. சமாதானமாயிருக்கும்படிக்கே தேவன் நம்மை அழைத்திருக்கிறார். மனைவியானவளே, நீ உன் புருஷனை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? புருஷனே, நீ உன் மனைவியை இரட்சிப்பாயோ அல்லவோ உனக்கு எப்படித் தெரியும்? (1 கொரி 7:10-16)

உங்கள் மனைவிகளைத் தள்ளிவிடலாமென்று உங்கள் இருதயக் கடினத்தினிமித்தமே மோசே உங்களுக்கு இடங்கொடுத்தார்; ஆதிமுதலாய் அப்படியிருக்கவில்லை. ஆதலால்

எவனாகிலும் தன் மனைவி வேசித்தனஞ் செய்ததினிமித்தமேயன்றி அவளைத் தள்ளிவிட்டு வேறொருத்தியை விவாகம் பண்ணினால் அவன் விபச்சாரஞ் செய்கிறவனாயிருப்பான். தள்ளிவிடப்பட்டவளை விவாகம் பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறவனாயிருப்பான் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் (மத்19:8,9).

ஆனாலும், உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் என்றும் (1கொரி 7:5), வேகிறதைப்பார்க்கிலும் விவாகம் பண்ணுகிறது நலம் என்றும் (1கொரி 7:9), வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்த புருஷனையும் உடையவர்களாயிருக்க வேண்டும் (1 கொரி 7:2) என்று சொல்லும் வசனங்களை அசட்டை பண்ணலாகாது.

ஏமாற்றப்பட்டு, திருமணத்திற்குத் தகுதியற்றவர்களைத் திருமணம் செய்து, அறிந்து கொண்ட பின்னர் (ஆண்மையோ, பெண்மையோ இல்லாதிருப்பவர்கள் - impotent) விலக நேரிடுகிற காரியங்களும் உலகில் மலிந்து வருகின்றது. அப்படிப்பட்டவர்கள் ஏமாற்றப்பட்ட உடன்படிக்கையில் ஈடுபடுத்தப்பட்டபடியால் அந்த உடன்படிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டதல்ல என்பது உண்மை. எனவே, அது முறிக்கப்பட அனுமதி வழங்கலாம் என்பது என்னுடைய கருத்து.

ஆனால், யோசுவாவின் காலத்தில் கர்த்தருடைய வாக்கைக் கேளாமல் கிபியோனியரோடு உடன்படிக்கை செய்து பின்னர் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று கண்டு கொண்ட பிரபுக்கள் அவர்களை அடிமைகளாக நடத்தி, அவர்களைக் கொன்று போடாதிருந்தார்கள். அந்த உடன்படிக்கை தேவன் பேரில் அவர்கள் செய்திருந்தபடியால் (யோசு 9:19) இதனைச் செய்தார்கள் என்று வேதம் கூறுகிறது.

இந்த உடன்படிக்கைதனை பின் காலத்தில் மீறின சவுலின் நாட்கள் நிமித்தம் இஸ்ரவேலில் பஞ்சம் ஏற்பட்டதினையும், அதற்கு பாவ நிவிர்த்தியாக தாவீது என்கிற தேவ மனுஷன் செய்தக் காரியங்களையும் தேவன் நமக்கு எழுதித் தந்துள்ளார் (2 சாமு 21:1-14).

மேற்கண்ட சம்பவம் உடன்படிக்கை மீறப்படுவதில் உள்ள ஆபத்துக்களைக் குறிப்பதினால், அநேகர் அப்படி ஏமாற்றப் பட்டிருந்து பிரிந்து போக மனதில்லாமல் வாழ்க்கை நடத்துவதனையும் நான் கண்டிருக்கிறேன். எது எப்படியிருந்தாலும்

உடன்படிக்கை (covenant) திருமணத்தில் நடைபெறுவதனை நாம் மறக்கவே கூடாது (மல் 2:14). உடன்படிக்கையை மீறுவது ஆவியில் உண்டாகும் அசுசி என்பதனை நாம் மறக்கலாகாது (மல் 2:16; 2கொரி 7:7)

**வேதத்தின் இரகசியங்களையும் உண்மைகளையும் சரியாக அறியும் முன்னர் ஏற்பட்ட கோளாறுகள், விபத்துக்கள், போராட்டங்கள், புயல்கள், சேதங்கள், விளைவுகள் அனைத்தையும் மனத்தாங்கல்களையும் மாற்ற வல்லது வேத தியானமும் தெளிந்த புத்தியுமே.** அதனை அறிய தேவன் நம் கண்களைத் திறப்பாராக. "உமது வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும் படிக்கு என் கண்களைத் திறந்தருளும்" (சங் 119:18) என்பது நம்முடைய ஜெபமாவதாக. அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன். அவைகளைக் கைக்கொள்ளுவதினால் மிகுந்த பலன் உண்டு (சங்19:11).

# வேதம் மறக்கப்பட்டால்...

"உன் தேவனாகிய கர்த்தரை மறவாதபடிக்கு எச்சரிக்கையாயிரு" என்ற கட்டளை மறுபடி மறுபடி இஸ்ரவேல் ஜனத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் (உபா 6:12;8:16), கானான் என்ற செழிப்பும் வனப்புமான தேசத்தில் அவர்கள் பிரவேசித்த போது தின்று, திருப்தியாகி, கொழுத்து (உபா32:15) **அவருடைய வேதத்தினை மறந்தார்கள். இதனால் இல்லற வாழ்க்கையில் ஏற்பட்ட தாக்கங்கள் ஏராளம்.** விளைவு, அவனவன் தன் தன் பார்வைக்கு நலமானதைச் செய்ய ஆரம்பித்தார்கள் (நியா21:25).

பரதேசியாய் வாழ்ந்த **லேவியன்** ஒருவன் (தேவ பணிக்கு என்று ஏற்படுத்தப்பட்டவன்) பெத்லகேம் ஊராளாகிய ஒரு ஸ்திரியை தனக்கு **மறுமனையாட்டியாகக்** கொண்டிருந்தான் (நியா 19:1); இது அவன் செய்த முதல் தவறு. அவளும் அவனுக்குத் துரோகமாய் விபசாரம் பண்ணி அவனைவிட்டு தன் தகப்பன் வீட்டுக்குப் போய் அங்கே நான்கு மாதம் வரைக்கும் இருந்தாள் (வச 2) இது அவள் செய்த பாதகம்.

ஆனால் **மன்னிப்பை நினைவு கூர்ந்த** அவன் அவளோடே நலவு சொல்லவும் அவளைத் திரும்ப அழைத்து வரவும் சென்றபோது, மாமனார் வீட்டில் சந்தோஷமாய் ஏற்றுக் கொள்ளப்படுகிறான் (வச 3). ஆனால், **மாமனின் மதியீனமும் குடிவெறியும்** அவனை சில நாட்கள் தாமதப்படுத்தி வந்த காரியத்தினை மறக்கச் செய்கிறது (வச 4-9). இறுதியாக அவன் ஒரு நாள் இரவு மனைவியை அழைத்துக்கொண்டு புறப்பட்டு வழியில் பேலியாளின் மக்களினால் பாதிக்கப்படுகிறான். ஆணோடு ஆண் அவலட்சமானதை நடப்பிக்க அவர்கள் கட்டாயப் படுத்தினதினால் (வச 22), காரியம் கை மிஞ்சிப்போக தன் மறுமனையாட்டியை பிடித்து காம வெறிப் பிடித்த அவர்களிடத்தில் கொண்டுவந்து விடுகிறான் (வச 25). அவளை அந்த வெறியர் கூட்டம் இலச்சையாய் நடத்தி கொன்றும் விட, அந்த லேவியன் தன் கையால் அவளை பன்னிரெண்டு துண்டங்களாக வெட்டி அனைத்து இஸ்ரவேலுக்கும் அனுப்பி வைக்கிறான் (வச 29). இது இஸ்ரவேலில் ஒரு உள் நாட்டுப் போரை உருவாக்கி, ஓர் இனத்தின் ஆண் மக்களையே அழிக்க ஏதுவாக்குகிறது (நியா 20 அதி), பட்டணங்களும் அழிக்கப்படுக்கின்றன.

அறிவற்ற ஒரு ஊழியகாரனின் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவம், தேசத்தையே பாழடித்து விட்டதனை தேவன் நமக்கு எழுதி வைத்திருக்கிறார். ஒரு குடும்பத்தின் ஒழுக்கக் கேடும், பெற்றோரின் அறிவு கெட்டச் செயலும், ஒரு சமுதாயத்தை பாதிக்க போதுமான பலம் உள்ளவை என்பதனை போதிக்கவே இவைகள் எழுதப்பட்டுள்ளன.

வேதத்தின் திட்டத்தினை மீறும் கணவன் (மத் 19:8; மல் 2:15), கணவனுக்குத் துரோகம் செய்யும் மனைவி, குடித்து, வெறித்து, வெறிக்கச் செய்வதினால் இருதயம் தேற்றப்படும் என்ற தப்புக் கணக்கு போடும் மாமனார், மாமிசத்திற்கு இடம் கொடுத்து வாழும் அயலகத்தார், முட்டாளைப் போல செயல்பட்டு பின்னர் மூர்க்கவெறி கொண்டு கொலை செய்து, கூறு போடவும் அஞ்சாத கணவன் இவர்கள் அனைத்து பேரும் சமுதாயத்திற்கு ஆபத்தானவர்களே. ஆனால் இவை அனைத்திற்கும் காரணம் என்ன? தேவன் தள்ளிவைக்கப்பட்டுவிட்டார், தேவ வார்த்தை மீறப்பட்டது என்பதே. இஸ்ரவேலின் குமாரத்திகளில் ஒருத்தியும் வேசியாயிருக்கக்கூடாது; இஸ்ரவேல் குமாரரில் ஒருவனும் ஆண்புணர்ச்சிக்காரனாயிருக்கக்கூடாது (உபா 23:17) என்ற கட்டளை முற்றிலும் மறக்கப்பட்டது. தன் மகள் பாவம் செய்திருக்க அவளை தன் வீட்டிலே 4 மாதங்கள் வைத்திருந்து தானாகவே அழைத்துக்கொண்டு போய், சமரசத்தை உண்டாக்க வேண்டிய அந்த பெத்லகேம் ஊரான், அதனை செய்யத் தவறினபோது நடந்த விபரீதம் அல்லவோ இது!

இன்றைக்கும் தன் மகளின் மேல் தவறியிருக்க (அது விபச்சாரப் பாவம் இல்லாமல் இருக்கலாம்), தன் வீட்டிலே அவளை அநேக நாட்கள் (ஏன் வருடங்கள் கூட) தங்க வைத்து வேடிக்கைப் பார்க்கும் பெற்றோர் எத்தனை பேர்? அந்தப் பிரிவை முடிவிற்கு கொண்டு வர தயக்கம் காட்டுவோரும், உல்லாசத்தில் தளைப்போரும் உண்டாக்கும் தீமைகள் எத்தனைப் பெரியது? கணவன் இறங்கி வரட்டுமே என காத்திருப்போர் எத்தனை பேர்? மன்னிக்க மனதிருந்தும் மகிழ்ச்சியைக் காணக்கூடாமல் இந்த லேவியன் கெட்டுப்போனானே! வேதம் மறக்கப்பட்டத்தினால் அல்லவோ...

# அத்தியாயம் 1

# தேவபக்தியுள்ள கணவனும் பக்தியற்ற மனைவியும்



# லோத்து

# 1. நீதிமானாயிருந்தும்...

வேதம் ஆபிரகாமோடு கடந்து சென்ற லோத்துவை நீதிமான் என்றும், நீதியுள்ள இருதயம் உள்ளவன் என்றும், அக்கிரமக்காரரின் நடக்கையைக் கண்டு இருதயத்தில் வாதிக்கப்பட்டவன் என்றுமே அழைக்கிறது (2பேது 2:7,8); அந்நியரை உபசரிக்கத் தவறாதவன் அவன். தான் உயர்ந்த ஸ்தானத்தில் இருந்த போதிலும் (ஆதி 19:1), அந்நியரை அறியாமல் இருந்த போதும், அவர்களை வருந்திக்கேட்டு வீட்டிற்குக் கொண்டு சென்று விசாரிப்பவன் அவன் (எபி 13:2). **தன் வீட்டின் நிழலில் வந்தவர்கள் சேதப்பட விரும்பாமல் அதனைத் தடுக்க எந்த விலைக்கிரயத்தினையும் செலுத்தத்** (தன் பிரிய குமாரத்திகளின் கற்பையும்) **தயங்காதவன்** (ஆதி 19:8).

ஆனால் அவனுக்கு கிடைத்த மனைவியைப் பாருங்கள். ஆபிரகாம் வீட்டிற்கு (அல்லது கூடாரத்திற்கு) இதே தூதர்கள் போன போது, ஆபிரகாம் சாராளிடத்திற்குப் போய் மூன்றுபடி மெல்லிய மாவை எடுத்து பிசைந்து அப்பம் சுடச் சொன்ன போது, 89 வயதான அவள் துரிதமாகச் செய்கிறாள். வீட்டிலே ஏராளமான வேலைக்காரர்கள் மற்றும் வேலைக்காரிகள் இருந்தபோதிலும் (318 பேர் ஆபிரகாம் வீட்டில் யுத்த வீரர்களான வாலிபர் - ஆதி14:14). லோத்தின் வீட்டில் விருந்தினர் கொண்டுவரப்பட்ட போது, லோத்தே புளிப்பில்லாத அப்பங்களைச் சுடும் பொல்லாத காட்சி காணக் கிடைக்கிறது (ஆதி 19:3). லோத்துவின் மனைவி வீட்டில் தான் இருந்தாள் (வச 16); வீட்டைச்சுற்றிலும் வாலிபர் முதல் கிழவர் வரை ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள் (வச 4); ஆனால் **தன் வீட்டிற்கு வரும் ஆபத்தினையும் அறியாதவள் அவள்.**

லோத்து தன் குமாரத்திகளை உலகின் காமப் பசிக்குத் தாரை வார்க்க முயற்சிக்கிறான் (வச 8), ஆனால் இவளுக்கு அதனைக் குறித்த ஒரு கவலையும் இல்லை; அக்கறையும் இல்லை. பிள்ளைகளை அதுவும் பெண் பிள்ளைகளைப் பாதுகாக்கவும் அவள் கற்றுக் கொள்ளவில்லை.

**பொருட்களின் மேலே உள்ள** பற்று, உலக சிநேகிதம் பின் திரும்பச் செய்து உப்புத்தூணாகவும் அவளை மாற்றிவிட்டது (ஆதி 19:26).

**குடும்பத்தினைக் குறித்தோ, பிள்ளைகளைக்குறித்தோ விருந்தினரைக் குறித்தோ, ஊரில் நடப்பதனைக் குறித்தோ, வரும்**

ஆபத்தினைக் குறித்தோ, ஏற்படப்போகும் அழிவினைக் குறித்தோ அவள் கவலை இல்லாதவள். தூதன் கையில் அவள் இருந்தாலும் (ஆதி 19:16), அவர்களுடைய வார்த்தை அவளில் கிரியை செய்யவில்லை (வச 17,26). தேவனோடு நடந்த ஆபிரகாமின் குடும்பத்தினரை அவள் தன் பிள்ளைகளுக்கு அறிமுகம் செய்து, பழகச் செய்து, அதனுடைய ஆசீர்வாதத்தினைப் பெற்றுக் கொள்ளவும் வழி செய்யவில்லை (ஆதி 18:19).

இவளுடைய வற்புறுத்துதலே லோத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக சோதோமுக்குள் இழுத்துச் சென்றிருக்கும் எனவும், உயர் பதவியில் அமர்த்தியிருக்கும் எனவும் நான் நம்புகிறேன். சோதோமுக்கு நேரே கூடாரம் போட்ட அவன் (ஆதி 13:12), தனியாக என்னால் இருக்கக் கூடாது என்று இவளுடைய ஆலோசனையைக் கேட்டு சோதோமுக்குள் குடியிருக்க ஏவியிருக்கும் என்பது (ஆதி 14:12) என்னுடைய அசையா நம்பிக்கை.

அடித் (Adith) என்று யூதபாரம்பரியம் இவள் பேரை கூறி அறிவிக்கிறது. இவள் சோதோம் பட்டணத்தைச் சேர்ந்தவள் என்றும் நம்புகிறவர்கள் உண்டு. எப்படியாயினும் இவள் ஒரு தேவபக்தியற்றப் பெண்ணுக்கு அடையாளம்.

தேவனுக்குப் பயப்பட்ட லோத்து, ஆபிரகாமைச் சார்ந்து கானானுக்குப் புறப்பட்டவன். பின்னர் சொத்து அதிகமானதினால் பலிபீடத்தினையோ, ஜெபத்தினையோ, கர்த்தரின் தரிசனத்தையோ கண்டறியாதவன். கூடவே, தேவனற்ற மனைவியும் அவன் வாழ்வினை பாழாக்கி விட்டாளே! அவன் இந்த உலகிற்கு வைத்துப் போனது எல்லாம் சாபம் மிகுந்த இரு சந்ததியாம் மோவாப் மற்றும் அம்மோனியரே (ஆதி 19:37,38) (உபா 23:3).

தரிசனம் இல்லாமல் வாழும் மனிதர்களின் முடிவு இதுவே. அவனால் தன் மனைவியையோ, மக்களையோ, மருமக்களையோ பாதிக்க முடியவில்லை. அவன் சாரத்தினை இழந்த உப்பே. இதனை இயேசுவும் நினைத்து எச்சரிப்படையச் சொல்கிறார் (லூக் 17:32).



# தாவீது - மீகாள்

## 2. தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் தான்....

ராஜாவுக்கு மருமகன் ஆவதற்கு ஆசை தாவீதுக்கு. ஆனால், அந்த நாட்களில் பரிசம் பெண்ணுக்குத் தரப்படவேண்டும். அதற்குரிய வசதியில்லாத தாவீது ஏக்கமுற்றான் (1சாமு 18:23). பெரிய வீட்டு சம்பந்தம் என்றால் அநேகர் ஏங்குகின்றனர் வாஞ்சிக்கின்றனர். மதிப்பு பெறுவது எப்படி என்ற ஏக்கம் எதையும் செய்ய அவர்களை விரட்டி விடுகிறது.

கோலியாத்தை வீழ்த்துபவனுக்குத் தம்முடைய குமாரத்தியைத் தருவேன் என்று சவுல் அறிவித்ததனைத் திரும்ப திரும்பச் சொல்லக் கேட்கிறான் (1சாமு 17:25-27). ஒரு பக்கம் இஸ்ரவேலுக்கு ஏற்பட்ட நிந்தையை நீக்க வேண்டும் என்ற விருப்பம்; இஸ்ரவேலின் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்து கொள்ளுவார்கள் என்ற ஆசை அவனை உந்தித் தள்ளுகிறது (1சாமு 17:26,46); ஆனால் வெற்றி பெற்ற தாவீதிற்கு சவுலின் மகள் அறிவிக்கப்பட்டபடித் தரபடவில்லை. அதற்குள் பொறாமையும், வண்கண்ணும், காய்மகாரமும் நுழைந்து விட்டது. சவுலின் இருதயத்தில் பொல்லாத ஆவியினால் நிரப்பட்ட அவன், மீண்டும் தாவீதிற்கு ஏற்பட்ட ஆசையைத் தூண்டிவிட்டு, அந்த ஆசையே அவனை அழிக்க வகை செய்கிறான். பெலிஸ்தரின் கை அவன் மேல் விழ வேண்டி யுத்தங்களுக்கு அனுப்புகிறான். தன் மகள் 'மேராப்'-ஐ தருவேன் என்று சொல்லுகிறான். ஆனால், காலம் வந்தபோது மீண்டும் சவுலால் தாவீது ஏமாற்றப்படுகிறான் (1சாமு 18:17-19).

இப்போது அவனுடைய குமாரத்தி மீகாள் தாவீதை நேசிக்கும் விஷயம் சவுலுக்குத் தெரிய, மீண்டும் ஒரு வலையை விரிக்கிறான். இது ஒரு தலைக் காதல் தான். ஆனாலும், ஆசை ராஜாவுக்கு மருமகனாகும் பெரிய இடத்து சம்பந்தம் என்ற காரியம் தாவீதுக்கு உள்ளக் கிளர்ச்சியை உண்டாக்குகிறது. மற்றவர்களை வைத்து வலையில் மாட்டவைக்க ஆசை வார்த்தைகளைப் பேச வைக்கிறான் சவுல் (1சாமு 18:22). மீண்டும் தன்னுடைய ஏழ்மை, இல்லாமை, குடும்பத்தில் இல்லாத மதிப்பு போன்றவை அவனைத் தயங்கப்பண்ணுகிறது (வச 23).

ஆனால் கண்ணிவைக்கும் சவுல் நூறு பெலிஸ்தரின் நுனித்தோல் கிடைக்கப் பெற்றால் போதும் எனக் கூறி எப்படியாவது

தாவீது அழிக்கப்பட வழி உண்டாக்குகிறான். தாவீதோ அந்த விஷப் பரீட்சையில் இருநூறு பேரைக் கொன்று மீகாளை மனைவியாகக் கொள்ளுகிறான்.

மீகாளுக்கு தேவனைக் குறித்த அறிவோ, வைராக்கியமோ, வாஞ்சையோ இருக்கவில்லை. அவள் ஆண்டவரை பாடுவதைக் கூட அற்பமாக என்னுபவள் (2சாமு 6:20; 1 நாளா 15:29). தகப்பன் எப்படித் தேவனைத் தேடவில்லையோ அப்படி ஆடம்பர மோகத்தில், அரண்மனை சுகத்தில், அதிகார போதையில் வாழ்ந்த அவள் தனக்கு ஏற்றவள் தானா என தாவீது பார்க்கவில்லை. காதலிக்கிறாள் எதற்காக? வீரன் என்பதினால், நல்ல சவுந்தரிய ரூபமான சிவந்த மேனியுள்ளவனாயிருந்தபடியால் (1சாமு 17:42), சுரமண்டலம் (இக்கால கிட்டார்) வாசிப்பதில் நிபுணர் என்பதினால். அவனோடு கர்த்தர் இருந்தது (1 சாமு 18:14) அவளுக்குத் தெரியவில்லை.

காதல், சில வேளைகளில் அவனைத் தப்புவிக்க தகப்பனிடத்தில் பொய்யையும் கூற பயப்படவில்லை (1சாமு 19:11-17). ஆனால் தேவ பயமோ, தேவனுக்கு ஆராதனை செய்யும் ஆவலோ இல்லாத மனைவி தேவ பக்தியற்றவள் தானே. பதவி, பணம், பகட்டு இவைகளைச் சார்ந்து வாழும் நபர் தன் கண்களுக்கு இனிமையாக, வீரனாக, மற்றவர்கள் பாராட்டி பாடல் இயற்றும் காவியமாக இருக்கும் ஒருவரை காதலிக்கலாம். கச்சேரியில் பாடும் நபரும் ஆலயத்தில் பாடகர் குழுவில் இசை வாசிக்கும் இளைஞனும் ஈர்க்கும் பொருள் ஆகலாம்.

பெரிய இடத்து சம்பந்தம் என்ற வலை அநேகரை இருதயத்தில் அவமதிக்கும் மனைவியை உடையவர்களாக மாற்றிவிடும் (1நாளா 15:29) ஜாக்கிரதை; ஆனால் ஆண்டவர் அவளுக்கு பிள்ளையில்லாமற் செய்துவிட்டாரே அது தேவ தண்டனையாய் மாறிப் போயிற்றே. அரசன் மகள், ஆனால் அரசாள பிள்ளையைப் பெறக் கூடாத நிலை; என்னே பரிதாபம்.

இதற்கிடையில் சவுல் மீண்டும் தாவீதை ஏமாற்ற மீகாளை வேறொருவனுக்கு மனைவியாக்கிவிடுகிறான் (1சாமு 25:44). தேவனற்ற மாமனார் எதை வேண்டுமானாலும் செய்வார் (2சாமு 3:14-16). ஆயினும் தாவீது அவளை வாஞ்சிக்கிறான் அவள் கொண்டு வரப்பட்டபோது தான் இந்த அவமதிப்பு உண்டாகிறது.

தேவனை நேசித்து, அதின் அடிப்படையில் என்னை நேசிக்க

**வேண்டும் என்ற அடிப்படையில் பெண் பார்க்கும் படலம் அமைந்தால் எத்தனை நலமாக இருக்கும்.** என் குடும்பத்திற்கு ஏற்ற, அதே நிலையில் உள்ளவளாக உள்ளவராக இருந்தால்தான் வாழ்க்கை சுமுகமாக அமையும் என்பதனை புரிந்தவர் எத்தனைபேர்?


**பணத்தையும், பதவியையும், ஆடம்பரத்தையும், அதிகாரத்தையுமே கொள்கையாகக் கொள்பவர், அகால பாதாளத்தில் விழுவர்** என்பது மாறாத பிரமாணம்; ஜாக்கிரதை.

மீகாளுக்கு இன்னும் ஒரு திருமணம் அக்காள் மாப்பிள்ளையோடே நடந்தது (2சாமு 21:8); அவனிடத்திலும் அவளுக்குப் பிள்ளை பிறக்கவில்லை. மீண்டும் தாவீதின் மனைவியானாள்; ஆனால் சரித்திரம் தேவனை அவமதித்த அவளை, தேவ ஆராதனைக்காரனை அவமதித்த அவளை பிள்ளையற்றவளாகவே பார்க்கிறது.

இன்பமான இசைபாடும் தாவீதுக்கா இப்படிப்பட்ட மனைவி (2சாமு 23:1); மேன்மையாய் உயர்த்தப்பட்டு, யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று நிச்சயமான உடன்படிக்கைகளைப் பெற்றவன்தானே (வச 3). உனக்கு வீட்டைக் கட்டுவேன் என்றவர் மீகாளைத் தாண்டியேச் செல்கிறார். ஒரு ஆசாரியனும் தீர்க்கனும் அவளோடு நின்றதில்லை. **தேவனை அறியாதவள், தேவபக்தியுள்ள கணவனை மதிக்காதவள் தேவ ஊழியரால் மதிக்கப்படுவது எப்படி?**

மீகாள் என்பதற்கு "யார் பூரணப்பட்டவர்? (who is perfect) என அர்த்தம். மற்றவர்களைப் பார்த்து இந்தக் கேள்வி கேட்பவர் ஒருவரும் ஆவிக்குரிய வாழ்வில் முன்னேறியவர் அல்ல!

தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவன் எனப்பட்ட தாவீதும், **பகட்டின் வாஞ்சையினால்** தவறான மனைவியை அடைந்து அவமதிக்கபட ஏதுவாகலாம். ஜாக்கிரதை. அப்படிப்பட்டவளைத் தவறாகப் பெற்றுவிட்டோர், அவளை தேவனுக்காக சம்பாதிக்க வகை தேடுவீர்; அது வாழ்க்கையை சீராக்கும்.



# யாக்கோபு - லேயாள் - ராகேல்

# 3. தேவன் சிநேகித்த மனிதன் தான்...(I)

முற்பிதாவாம் யாக்கோபின் வாழ்க்கை விசித்திரமானது! **அவனுடைய திருமணவாழ்வில் தெரிந்துகொண்ட ஒரு மனைவி, திணிக்கப்பட்ட ஒரு மனைவி இருந்தனர்;** கூடவே போடு கருப்பட்டியாக இரண்டு பேர் (இது இந்த நாட்களுக்கு உரியது அல்ல). ஆயினும் தனித்தனியே அவனுடைய குடித்தன வாழ்வை ஆராய்வது நமக்கு பலன் தரும்.

**ஆண்டவர் அவனைத் தேடிவந்தார்; ஆசீர்வாதங்களை வாக்களித்தார்.** அவனும் கர்த்தரை இந்த ஸ்தலத்தில் கண்டேன் என அறிக்கையிடுகிறான் (ஆதி 28:16). காலத்தின் கோலம், சூழ்நிலைகள் அவனை லாபான் வீட்டிற்குத் தள்ளிக்கொண்டு வந்திருந்தது. லாபான் வீட்டிற்கு அனுப்பும் போதே தாய் அங்கே போய் விவாகம் செய்துகொள் என்று கட்டளை கொடுத்தே அனுப்புகிறாள் (ஆதி 28:2). பெண் வேண்டும் என்ற நோக்கில் தான் யாக்கோபு மாமன் வீட்டில் அடி எடுத்து வைக்கிறான்; **ரூபவதியான ராகேலைக் கண்டவுடன் தன் வீரத்தினைக் காண்பித்து அவளை கவர்ந்து கொள்கிறான், காதலிக்கிறான் (ஆதி 29:10,17,18). காதல் கண்களை அடைக்க, "இஸ்ரவேல் ஒரு பெண்ணுக்காக ஆடு மேய்த்தான்" என்று தேவன் பின்னதாக கேலி செய்யும் அளவுக்கு அது முற்றிப் போயிற்று** (ஓசி 12:12). மாமன் நியமித்த 7 வருடங்கள் கொஞ்ச நாட்களாகத் தோன்றுகிறது (ஆதி 29:20).

ஆனால், இறுதியில் ஏமாற்றப்பட்டு கூச்சப் பார்வை கொண்ட, அலட்ச்சியமாக மற்றும் அற்பமாக எண்ணப்பட்ட லேயாள் மனைவியாகிறாள் (ஆதி 29:17,31); வேறு வழியின்றி வாழ்க்கை ஆரம்பிக்கிறது; பின்னும் 7 வருடம் ஆடு மேய்க்கிறான். தேவன் தன்னைச் சந்தித்த விதத்தினையும் பெற்றோரின் அனுபவத்தையும் தன் மனைவிகளோடு அவன் பகிர்ந்து கொண்டிருக்க வேண்டுமே. **ஆனால், அவர்களுக்கு தேவன் உலகத்தை ஆசீர்வதிக்க தங்கள் குடும்பத்தினைத் தெரிந்து கொண்டிருக்கிறார் என்ற எண்ணம் எந்த நேரத்திலும் தோன்றவில்லை (ஆதி 28:14). தங்களில் இருந்து பிறக்கப்போகும் சந்ததியே பூமியின் ஆசீர்வாதத்திற்குக் காரணமாகும் என்பதனைக் குறித்து அறிவும் இருந்ததில்லை.** மாறாக இருவரும் போட்டி, பொறாமைக் கொண்டே வாழ்கின்றனர்.

இந்தப் பின்னணியில் லேயாளோடு நடைபெறும் குடும்ப

வாழ்வினை குறித்து முதலாவது ஆராய்வோம். **தேவ தரிசனம் பெற்றவனும், தன்னுடைய தொழில் நடத்துவதற்கும் லாபம் சம்பாதிப்பதற்கும் தேவ ஆலோசனையைப் பெற்ற யாக்கோபைக் கணவராகக் கொண்டவள் லேயாள்.** தேவன் அவனை சந்திக்கும் தூரத்தில் மாத்திரம் அல்லாமல், தெளிவாகப் பேசும் நிலையில் இருந்து 'நான் நடந்து வந்த பாதையிலெல்லாம் என்னோடே கூட இருந்தவர்' என்று அவனே சாட்சி சொல்கிறான் (ஆதி 28:13; 31:11-13; 35:3). அப்படிப்பட்ட தேவ பக்தியுள்ள கணவன் (அநேக நேரங்களில் குடும்பப் பிரச்சனைகளால் நெருக்கப்பட்டிருந்தும், பணம் சம்பாதிப்பதனை குறியாகக் கொண்டிருந்தவன் - ஆதி 31:40) லேயாளுக்குக் கிடைத்திருந்த போதிலும்.....

**அவள் கவலையெல்லாம் புருஷன் என்னை நேசிக்க வேண்டும் என்பதிலேயே உள்ளது** (ஆதி 29:32). அதனால், முதல் பிள்ளைக்கு ரூபன் என்று பெயரிடுகிறாள். மூன்றாம் பிள்ளை பிறந்தபோது அதே நாட்டம் "இப்பொழுது என்னோடே என் புருஷன் சேர்ந்திருப்பார்" (ஆதி 29:34), ஆறாம் பிள்ளையை பெறும் போது "என் புருஷன் என்னோடே வாசம் பண்ணுவார்" (ஆதி 30:20) என்பதே அவளுடைய நாட்டம், பாட்டு என்னே பரிதாபம்! இதனையும் தாண்டி **அவள் வயிற்றில் பிறந்த லேவியையும், யூதாவையும் தானே தேவன் தமக்கு முன்பாக நிற்கத்தக்க ஆசாரியர்களாகவும் இராஜாக்களாகவும் ஏற்படுத்துகிறார்;** என்னே அவருடைய மாட்சிமை இரக்கம். **இதனை அவளால் காணக்கூடாமல் போயிற்றே.** என் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் ஜனத்தினை தேவனிடத்தில் சேர்க்கிறவர்களாகவும், ஜனத்தினை ஆளுபவர்களாகவும் மாற்றப்படுகின்றனரே என்ற தூரப் பார்வை அவளுக்கு இல்லை. புருஷனைக் குறித்து பைத்தியமானதற்குக் காரணம் என்ன? "உன் ஆசை புருஷனைப் பற்றியிருக்கும்" என்ற சாபத்தின் வார்த்தைகள் அன்று ஏவாளுக்கு அளிக்கப்பட்டது (ஆதி 3:16); அது இவளில் பூரணமாகக் கிரியை செய்கிறதே. **தேவ நோக்கத்தையோ, தேவ திட்டத்தையோ புரியாத, தேவனைத் தேடாத, தேவ பக்தியற்ற ஒரு மனைவி இப்படி புருஷன் பைத்தியமாகத்தான் இருப்பாள்.**

அதனால், அவள் செய்ய நேரிட்டது என்ன? தன் வேலைக்காரியை எடுத்து புருஷனுக்குத் தாரை வார்க்கிறாள்; சில்பாள் மூலம் பிறந்த குழந்தை **காத்.** இந்த வம்சத்தினரின் குணநலம் என்ன? தேவன் வாக்குத்தத்தம் பண்ணின கானான் மேல் விருப்பம் இல்லாமல் தங்களுக்கு வசதியான இடம் என

யோர்தானின் இப்புறத்திலே தங்கி தாபரிக்க விருப்பம் கொள்ளும் ஒரு சந்ததி. இதற்குக் காரணம் என்ன? லேயாளின் புருஷனைக் குறித்த பைத்தியம் (எண் 32:1). புருஷன் தன்னை நேசிக்கவேண்டும் என்றும் எண்ணுவது தவறல்ல; ஆனால், 7 பிள்ளைகளைப் பெற்றும் அது ஒன்றே வாழ்க்கையின் நோக்கமாக மாறிவிட்டதே இவளுக்கு. இவள் வாயினின்று அருள்வாக்கு ஒன்றும் அவளுடைய பிள்ளைகளுக்குக் கூட கிடைக்கவில்லை.

**இஸ்ரவேலில் மேலிருக்கும் கர்த்தருடைய கோபத்தினை, உக்கிரத்தை இன்னும் அதிகரிக்கப்பண்ணும்படி, பிதாக்களின் ஸ்தானத்தில் பாவமுள்ள பெருங்கூட்டமாய் எழும்பும் கூட்டத்தினைக் கொண்ட காத் வம்சம் (எண் 32:14) எழும்பக் காரணம் என்ன? புருஷனைக் குறித்த பைத்தியம் கொண்ட லேயாளே! சகோதரிகளே ஜாக்கிரதை.**

யாதொருவன் என்னிடத்தில் வந்து தன் தகப்பனையும் தாயையும், மனைவியையும், (கணவனையும்) பிள்ளைகளையும், சகோதரரையும், சகோதரிகளையும் தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் (என்னக் காட்டிலும் அதிகம் நேசித்தால்) எனக்குச் சீஷனாயிருக்க மாட்டான் (மத் 10:37; லூக் 14:26). இந்தக் காரியத்தில் லேயாள் தோற்றுப்போனாள். ஆனாலும், தேவன் தன் திட்டத்தினை நிறைவேற்ற அற்பமாக எண்ணப்பட்ட அவள் வயிற்றில் பிறந்தவர்களையே ஆசாரியர்களாக, இராஜாக்களாக மாற்றுகிறார்; அவருக்கே மகிமை. **அளவோடு நேசி, அவரோடு அன்பைத் தேடு, அதற்காக அரும் பொருட்களையும் இழந்து விட அவசரப்படாதே (ஆதி 30:14 -15) கணவனை விலைக்கு வாங்கவும் முயற்சிக்காதே.**

# 4. தேவன் சிநேகித்த மனிதன் தான்... (II)

யாக்கோபின் காதல் மனைவி ராகேல். கண்ணுக்கு நிறைந்தவள், அழகி, சுறுசுறுப்பானவள் (ஆதி 29:17,12), **யாக்கோபை சிறைப்பிடித்துக் கொண்டவள்** (ஆதி 30:15). அழகு உண்டு ஆனால் உள்ளத்தில் பொறாமையைக் குடி கொள்ள வைத்து, அதனால் **அனுதினமும் புருஷனை அலட்டி சாகடிப்பவள்** (ஆதி 30:1). **தன் இஷ்டம் நடக்காவிடில் செத்துப்போவேன் என்று மிரட்டல்களை அள்ளி வீசுபவள்.** காரியம் நடைபெறாத போது எதையும் செய்யத் துணிபவள்; பலன் என்ன?

தன் வேலைக்காரியான பில்காளை யாக்கோபுக்குத் தருகிறாள். அவள் மூலம் 'தாண்' என்ற கோத்திரம் பிறக்கக் காரணமாகிறாள். இந்த தாண் கோத்திரத்தில் தான் அந்திக்கிறிஸ்து தோன்றுவான் என்பது எனது நம்பிக்கை. எப்படி என்றுக் கேட்கிறீர்களா? கவனியுங்கள் வசனத்தினை. தன் மரண நேரத்தில் கடைசி நாட்களைக் குறித்தக் காரியங்களை தீர்க்கதரிசனமாக யாக்கோபு கூறுகிறான். ஒவ்வொரு பிள்ளையையும் குறித்து அவன் சொன்னக்காரியங்கள் கடைசி நாட்களுக்கு உரியவைகள்.

தாணைக்குறித்து சொல்லும் போது, "தாண் குதிரையின் மேல் ஏறியிருக்கிறவன் மல்லாந்து விழும்படியாய் அதின் குதிகாலைக் கடிக்கிறதற்கு வழியில் கிடக்கிற சர்ப்பத்தைப் போலவும், பாதையில் இருக்கிற விரியனைப் போலவும் இருப்பான் என்று அறிவித்தவுடன், "கர்த்தாவே உம்முடைய இரட்சிப்புக்கு காத்திருக்கிறேன்" (ஆதி 49:1,17,18) என்ற ஒரு ஜெபத்தையும் செய்கிறான்.

நம்முடைய இரட்சிப்பு முக்காலத்துக்குரியது; **பாவத்தின் தண்டனையை இயேசு கல்வாரியில் தீர்த்துவிட்டபடியால், அவரை ஏற்றுக்கொள்ளும் போது நாம் பாவத்தின் தண்டனையிலிருந்து விடுதலைப் பெற்று இரட்சிக்கப்படுகிறோம். பாவத்தின் வல்லமை நம்மில் கிரியை செய்யும் போது (மாம்சத்தின் மூலம், உலகத்தின் மூலம், சத்துருவாகிய சாத்தானின் மூலம்), அதனை மேற்கொள்ள நமக்குத் தந்தருளிய பரிசுத்தாவியின் வல்லமையினால் அதனை நாம் மேற்கொள்ளும் போது அனுதினமும் நாம் இரட்சிக்கப்படுகிறோம்.** ரோமர் 8:13-ன் படி ஆவியினால் மாம்சத்தின்

கிரியையை நாம் அழிக்க அழைக்கப்பட்டுள்ளோம்.

ஆனால் நம்முடைய சரீர மீட்பாகிய இரட்சிப்பு கிறிஸ்து வரும்போது நடைபெற்று, பாவத்தின் பிரசன்னத்திலிருந்து நாம் விடுதலையாகும் போது நடைபெறுகிறது (ரோம 8:23). கிறிஸ்து வெளிப்படுவதற்கு முன் இந்த அந்திக்கிறிஸ்து தோன்றுவான் என்பது வேதம் அருளும் போதனை.

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகையையும், நாம் அவரிடத்தில் சேர்க்கப்படுவதையும் குறித்து நாங்கள் உங்களை வேண்டிக் கொள்ளுகிறது என்னவென்றால், எவ்விதத்திலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்பட்டாலொழிய அந்த நாள் வராது (2 தெச 2 :1-3).

இதனை முன்னறிந்த தீர்க்கதரிசன பார்வை கொண்ட யாக்கோபு, கடைசி நாட்களைக் குறித்து கூறும் போது, தாண் கோத்திரத்திலிருந்து எழும்பும் அந்திக்கிறிஸ்துவின் வருகையில் இரட்சிப்பைக் குறித்து ஜெபித்தது எத்தனை அர்த்தமுள்ளது.

கூடவே வெளிப்படுத்தின விசேஷத்தில், இஸ்ரவேல் கோத்திரத்தார் முத்தரிக்கப்படும் போது, தாண் கோத்திரம் மாத்திரம் கணக்கில் வரவில்லை என்பதனை கவனிக்கவும் (வெளி 7:4-8).

இந்த தாண் கோத்திரம் வரக்காரணமாயிருந்தவர் யார்? சகோதரியின் மேல் பொறாமை கொண்டு, புருஷனை வாட்டி வதைத்த ராகேல் அல்லவா! தேவனை நோக்கிப்பார்க்கக் கற்றுக் கொள்ளாத அவள் புருஷனைச் சாடுகிறாள்.

பின்னதாகவே தேவன் தான் தனக்கு உதவி செய்ய முடியும் என்ற நிலை வந்த போது, அவரை நோக்கிப்பார்த்து "கனிதரும் திராட்சை செடியாம்" யோசேப்பு என்னும் பரிசுத்தவானைப் பெற்றெடுக்கிறாள் (ஆதி 30:24; 49:22). தேசங்களுக்கும், குடும்பத்திற்கும் ஆசீர்வாதமாக மாறின அன்பு மகனைப் பெற அவள் தேவனையே நோக்கிப்பார்க்க வேண்டியிருந்தது.


இன்னமும் ஒரு குமாரனைத் தருவார் என்ற தீர்க்க தரிசனப் பார்வையும் பெற்றுவிட்டாள். ஆனால் கஷ்டம் வந்தபோது புருஷனைப்போல கஷ்டத்தின் மத்தியில் கர்த்தரின் கரத்தை

**அவளால் காணமுடியவில்லை.** இரண்டாவது மகன் பிறந்த போது, "எனக்குக் கஷ்டத்தைக் கொண்டு வந்து விட்டாயே" என்று கூறி பெனொனி என்று பெயரிடுகிறாள். யாக்கோபோ அவன் என் வலதுகையின் பராக்கிரமபுத்திரன் என்று கூறி "பென்யமீன்" என்று பேரிடுகிறான்.

இதற்கிடையில், புருஷன் அறியாமல் அவள் மறைத்து வைத்த தன் தகப்பன் வீட்டின் சுரூபம் அவளுடைய மரணத்திற்குக் கண்ணி வைத்துவிட்டது. யாக்கோபு அவள் மறைத்து வைத்திருந்ததனை அறியாமல், "யாரிடத்தில் அது காணப்படுமோ அவன் அல்லது அவள் மரிக்க வேண்டும்" என்ற வார்த்தைகள் அறியாமையினால் சொல்லப்பட்டபோதிலும், **ராகேலுக்கு சாப வார்த்தைகளாக மாறி, பேர்காலத்தில் அவளை மரணத்துக்கும் தள்ளி விட்டுவிட்டது** (ஆதி 31:32; 35:17-29). **தன் குமாரன் யோசேப்பு எகிப்தில் அதிபதியாய்** (ஆதி 45:26) **உலகின் இரட்சகனாய்** (ஆதி 50:20) **உயர்த்தப்பட்டதனையும் கண்டு, ரசிக்க முடியாமற் போய் விட்டதற்குக் காரணம் நேசித்த புருஷனுக்குக் காரியத்தினை மறைத்ததே, மனைவிகளே ஜாக்கிரதை.**

பிள்ளை வேண்டும் என்ற பைத்தியத்தினால் அலறிக்கொண்டிருந்த ராகேலின் புலம்பலைத்தான், பின்னதாக பெத்லகேமில் இயேசுவின் நாட்களில் புலம்பினார்கள் என்பதனைக் குறிக்கும் வண்ணமே, எரேமியாவின் தீர்க்கத்தரிசன நிறைவேறுதல், ஏரோதுவினால் கொலை செய்ய இரண்டு வயதுக்குப்பட்ட தாயார்களிடமிருந்து கேட்டது (ஆதி 30:1; மத் 2:17,18).

இன்றைய உன் புலம்பல் தலைமுறை தலைமுறையாக கேட்க வழிசெய்துவிடக் கூடாது. ஒருத்தி புருஷன் பைத்தியம், மற்றவள் பிள்ளை பைத்தியம். தேவ பக்தி நிறைந்த யாக்கோபுக்கு, **தேவனால் சிநேகிக்கப்பட்டவனுக்கு** (மல் 1:2) **கிடைக்கப்பெற்ற இரண்டு பைத்தியங்களைக் கண்டீர்களா? நாங்கள் பைத்தியம் கொண்டவர்களென்றால் தேவனுக்காக அப்படியாவோம் என்று சொல்லுவோமாக** (2 கொரி 5:13).



# சூலமித்தி

# 5. சாரோனின் ரோஜாவுக்கா இப்படி ஒருத்தி...

உன்னதப்பாட்டு புத்தகத்தினைப் புரிந்து கொண்டவர்கள் சிலரே. அதில் காணப்படும் ஒரு உயர்த்தப்பட்ட மனைவியானவளை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன். இவள் தகப்பனற்ற அனாதை. தாய் வேறு திருமணம் செய்து கொண்டதின் விளைவாக, உடன் பிறந்த மாற்று தகப்பனுக்குப் பிறந்த சகோதரர்களால் வெறுக்கப்பட்டு, பெண் பிள்ளைக்குத் தகாத வேலையாம் திராட்சைத் தோட்டங்களுக்கு காவல்காரியாய் ஏற்படுத்தப்பட்டு நசுக்கப்படுகிறாள். பகலின் உஷ்ணம் இவளை கறுத்துப் போகச் செய்து "கருப்பாயி" ஆக மாற்றுகிறது (உன் 1:5,6). ஆனால், அரசன் என்று தெரியாமல் மாறு வேடத்தில் மந்தையின் மேய்ப்பனாய் வந்தவனின் காதல் வலையில் சிக்கி மயங்குகிறாள். காதல் கனிந்து கல்யாணத்தில் முடிகிறது. **அது அவளை அரண்மனை சுகத்தில் கொண்டு சேர்க்கிறது** (உன் 2:4; 3:7-10).

அனாதையாய் இருந்த அவள் உயர்த்தப்பட்ட போது, கைகளிலிருந்து வெள்ளைப்போளமும், விரல்களிலிருந்து வாசனையுள்ள வெள்ளைப் போளமும் வடியும் அளவுக்குச் சீராட்டப்பட்டு (உன் 3:5), தாலாட்டப்பட்டு மஞ்சத்தில் அமர்ந்த போது **தன்னுடைய பழைய காரியங்களை மறக்கிறாள். வசதிகள் பெருகும் போது, உயர்த்தப்படும்போது, உல்லாசம் மிஞ்சும் போது, ஆடம்பரம் பெருகும் போது அநேகருடைய நிலை இதுதான்.**

இப்போது நேசர் அவளைத்தேடி வருகிறார்; கதவைத்தட்டுகிறார். ஆனால் அவளோ, கதவைத்திறக்க மனமின்றி "என் வஸ்திரத்தைக் கழற்றிப் போட்டேன், நான் எப்படி அதைத் திரும்பவும் உடுப்பேன். என் பாதங்களைக் கழுவினேன். எப்படி அதனை அழுக்காக்குவேன்" என்று அங்கலாய்க்கிறாள். **உயர்த்தி மகிழ்ந்தவருக்கே (கணவனுக்கே) இப்போது இடமில்லை.** தட்டிக் கொண்டே நிற்கிறவர் காலதாமதத்தின் நிமித்தம் கடந்து செல்கிறார். பின்னர் அவரை தேடித்திரிய வேண்டிய அவல நிலை, தெருக்களில் ஓட வேண்டிய நிர்ப்பந்தம், காவற்காரர்களால் காயங்கள் (உன் 5:3-7).

**துன்பப் பாதையும் வரவழைத்துக் கொண்ட அடிகளும், மன்னவனின் தயையை மறந்ததால் உண்டான விளைவுகளுமே அவளை உணர்த்துவிக்கிறது.** நான் என் நேசருடையவள் (உன்

7:10); ஒருவன் திரளான ஐசுவரியத்தைக் கொடுத்தாலும் நேசமே பெரிது என பிரகடனப்படுத்துகிறது (உன் 8:7).

கர்த்தரின் ஆசீர்வாதங்களை அனுபவிக்கும் சிலர், அதனை சீக்கிரமாய் மறந்து சுக போகமே வாழ்வாகக் கொள்ள ஆரம்பித்து விடுகின்றனர்.

**தன்னை நேசிக்கும் நேசக் கணவனின் நேசத்தினை வாஞ்சிப்பதனைக் காட்டிலும், அவன் தந்த தங்க நகைகளின் மேலும். தரமான வாழ்க்கையின் மேலும் கண்களைப் பதிப்பவர் ஏராளம். தனக்கு ஆசீர்வாதங்கள் கொடுக்கப்பட்ட நோக்கம் தன்னைப்போல வளர இயலாமல் இருக்கும் சிறிய சகோதரிகளுக்கு உதவவே என்பதனை மறந்தோர் (உன் 8:6-10) நிறைந்தது இப்பூமி.**


அவனுடைய நேசத்தில், அரவணைப்பில் மயங்கினால், கிராமமும், வயல்வெளியும், வனாந்திரமும் (உன் 7:11; உன் 8:5) பஞ்சு மெத்தையின் சுகமே. அதனை அனுபவித்தவள் தன் சுகத்தில் மிதக்காமல் மற்றவர்களைக் குறித்து ஏங்க ஆரம்பித்து விடுகிறாள்.

என்னைப்போல ஒதுக்கப்பட்டு கிடப்போர், வேதனையில் வாழ்வோர், சகோதரர்களின் கோபத்தால் கறுத்துப்போய் இருப்போர் எத்தனைபேர்? என்ற ஏக்கம் மேலோங்குகிறது. பெற்ற சுகத்தினை பேணிக் காக்கமுடியாமல் காவற்காரர்களால் அடிக்கப்படுபவர்கள் எத்தனை பேர்? என்ற தாக்கம் செயல்படும் மனைவியாக மாற்றுகிறது.

**தங்களை அலங்கரிக்கவே, தங்க நகைகளை அள்ளி எடுத்து சப்பரங்களைப் போல திருமண வைபவங்களிலும் பண்டிகை நாட்களிலும் இல்லாதவர்களைக் கேலி செய்வது போல அலங்காரபவனி வருவோர் ஆண்டவரின் தயையை உணர்ந்தனரோ? அடுத்தவரைக் குறித்த கரிசனைக் கொண்டனரோ?** அள்ளிப் போடத்தெரியாவிடிலும், கிள்ளித்தரவும் மனதற்ற மனதையுடையவர்கள், சுக போகத்தில் மயங்கி திரிவதனைக் காணுங்கால் சாரோனின் ரோஜாவைப் போன்றவருக்கு இப்படி ஒரு மனைவியா? என்று தானே கேட்கத் தோன்றுகிறது.

"சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்பதனை புரிந்த வாழ்க்கையல்லவோ மேலானது (1தீமோ 5:6). சீயோன் குமாரத்திகள் அகந்தையாயிருந்து கழுத்தை நெறித்து நடந்து, கண்களால் மருட்டிப் பார்த்து ஒய்யாரமாய் நடந்து, தங்கள்

கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிகிறார்கள். ஆதலால். ஆண்டவர் சீயோன் குமாரத்தியின் உச்சந்தலையை மொட்டையாக்குவார். கர்த்தர் அவர்கள் மானத்தைக் குலைப்பார் (ஏசா 3:16-17) என்று நம்மைக் குறித்து சொல்லக்கூடாது.



# ஆபிரகாம் - ஆகார்

# 6. விசுவாசிகளின் தகப்பன் ஆனால்...

தன் வீட்டை எப்படியாவது கட்ட நினைத்த சாராளின் முடிவினால், ஆகார் என்ற அடிமைப்பெண், எகிப்திலே ஆபிரகாமுக்கு இலவசமாகக் கொடுக்கப்பட்ட பணிப்பெண் ஆபிரகாமின் மனைவியாகிறாள் (ஆதி 16:1;12:16). **தான் உயர்த்தப்பட்ட போது, உயர்வுக்குக் காரணமாயிருந்த எஜமாட்டியை அவள் அற்பமாக எண்ணியபோது வந்தது ஆபத்து.** சாராளின் அன்பு உபசாரம் இப்போது அடிக்கும் கரங்களாக மாறுகிறது; வீட்டை விட்டு துரத்துகிறது. ஓடிப்போனவளைத் தேவன் திசை திருப்புகிறார் (ஆதி 16:5-9).

இந்த இணைப்பினால் பிறக்கப்போகும் குழந்தை துஷ்டமனிதன்; எல்லோருக்கும் விரோதமானவன் (ஆதி 16:12). ஏனென்றால் நான் முன்னதாக குறிப்பிட்டதனைப் போன்று பயத்தில், பீதியில், நிலைக்குமா நிலைக்காதா, என்ற நிலையற்ற சூழ்நிலையில், ஆகார் ஆபிரகாமோடு உடலுறவு கொள்ளுகிறாள். அதன் பலன் பிள்ளையில் வெளிப்படுகிறது. ஆபிரகாமும் மாம்ச பெலத்தில் தான் இவளோடு சேர்கிறான். காட்டுக் கழுதை என்றே இஸ்மவேலை வேதம் அழைக்கிறது.

ஆனால் இவள் தன் பிள்ளையையும் சரியாக வளர்க்கவில்லை. ஆபிரகாம் இவளை நேசித்ததையும், இஸ்மவேல் என்ற இவளின் மகனை நேசித்ததையும் வேதம் விளக்காமல் இல்லை (ஆதி 21:11;17:18).

பதிமூன்று வயது இளையவனான ஈசாக்கை இஸ்மவேல் பரிகாசம் செய்து மகிழ்கிறான். இதனை கலாத்தியர் 4:29 துன்பப்படுத்தினான் என்றே கூறுகிறது; அல்லது பயமுறுத்தியிருக்கலாம் (Threatening); அல்லது கெடுத்துப்போடப்பார்த்தான் (Polluting the mind) என்றே யூத பரம்பரியம் கூறுகிறது. அல்லது விளையாட்டாகவே கொல்லவும் முயற்சி செய்தான் என்று சிலர் நம்புகின்றனர். இதற்குக் காரணம் யார்? **பிறப்பிலிருந்தே, பாலுண்ணக் கொடுக்கும் போது விஷவார்த்தைகள் கலந்து விட்ட ஆகார். எனவே ஆகாரின் அழுகையை அல்ல பிள்ளையின் சத்தத்தைத் தேவன் கேட்டார் என்று வேதம் கூறுகிறது** (ஆதி 21:17).

உயர்த்தப்பட்ட நிலையில் ஆபிரகாமுக்கு மனைவியாக்கப்பட்ட அவள், ஆபிரகாமின் தேவ பக்தியின் நிமித்தம் பிள்ளையின் மேலும் ஆசீர்வாதம் உண்டாகும் என்பதைக் காணக்கூடாத ஆகார் (ஆதி 21:13), வித்தியாசமான மனநிலையை பிள்ளையில் உருவாக்கிவிட்டாள்.

யாரோ ஒருவர்மேல் உள்ள கசப்பினை (அது ஒரு வேளை மாமியாரின் மீதாக இருக்கலாம், அவர்கள் தன் புருஷனை, பெற்று, வளர்த்து, படிக்கவைத்து, பேணிப் பாதுகாத்துத் தந்தார்கள் என்பதனை மறக்கும் மருமக்களுக்கு) வேறு வழியில் பழி தீர்க்க நினைக்கும் மனைவிமார் எத்தனை பேர்.

பிள்ளையைக் கொண்டே அதனைச் சாதிக்க நினைக்கும் நபர்கள் மலிந்தது இந்த உலகம். பிள்ளைகளின் உள்ளத்தினை பாழாக்கி தாத்தா, பாட்டி, சித்தி, சித்தப்பா, மாமா, அத்தை உறவினைக் கெடுத்துப்போட்டவர்கள் ஏராளம். கூடவே அதனைக் கடத்தி விட்டு, கோர்ட் கச்சேரி என்று அலையவைத்து நிரந்தர பகையை உருவாக்கியவர்களும் எண்ணிக்கையில் அடங்கார்.

"இனம் இனத்தோடு தான் சேரும்" என்பது போல் தன் மகனுக்கு எகிப்து தேசத்தவளையே மணம் முடித்துக் கொடுக்கிறாள் ஆகார் (ஆதி 21:21). உண்மையாய் தேவ மனிதன் ஆபிரகாமின் உறவை அவள் வாஞ்சித்திருந்தால் ஆபிரகாமின் வீட்டில் பிறந்து வளர்ந்தவர்களுடைய குடும்பத்தில் சம்பந்தம் எடுத்திருக்கலாமே (ஆதி 14:14); அவர்களில் தேவ பயம் காணப்பட்டிருக்குமே; அவர்களை ஆபிரகாம் கர்த்தர் பயத்தில் வழி நடத்தியிருப்பானே (ஆதி 18:19).

தேவ பயமற்ற எகிப்திற்கு (ஆதி 12:11-13) அல்லது தன்னுடைய ஜென்ம பூமிக்குத்தான் அவனை இணைத்துவிடுகிறாள். பெரிய ஜாதியாக்கப்பட்டாலும் (ஆதி 17:20), பிரபுக்களை உடையவனாக இருந்தாலும் (ஆதி 25:16), தன் சகோதரர் எல்லாருக்கும் எதிரானவனாகத்தானே மாறிவிட்டான். அதற்கு எகிப்தின் உறவும் உதவி செய்துவிட்டதே. மனைவிகளே ஜாக்கிரதை, உன் மனதில் காணப்படும் வெறுமை, வெறுப்பு, ஏமாற்றம் உன் பிள்ளைகளின் வாழ்வினையும் பாழாக்கிப் போட வகை செய்துவிடாதீர்கள். அதின் பலன் மிகவும் கொடியது; சமுதாயத்திற்கே கேடு என்பதனை மறக்காதீர்கள்.



# எல்கானா - பெனின்னாள்

# 7. பாரபட்சமற்றவனுக்கு...

தேவனைத் தேடுவதில் சளைக்காதவனும், முழுக் குடும்பத்தினையும் ஆண்டவரைத்தேட வழி செய்கிறவனும், குடும்பச் சச்சரவுகள் தேவ சமூகத்தில் தான் தீர்த்துவைக்கப்பட முடியும் என்பதனை நம்பினவனும், குடும்பச் சமாதானத்திற்காக பாரபட்சமற்றவனாய் காயப்பட்டோரை காயம் கட்டுபவனாக காட்சி அளிப்பவனுமான எல்க்கானா என்ற தேவ பக்தியுள்ள ஒரு மனிதனுக்கு பெனின்னாள் என்ற மனைவி (1 சாமு 1:3,8,23)

மற்றவரின் குறைகளைச் சொல்லிச் சொல்லி நோகடிப்பதில் அவளுக்கு நிகர் அவளே (1சாமு 1:6). அவளுடைய மேட்டிமையானப் பேச்சு அகந்தையான வார்த்தைகள் எவரையும் கொல்ல சக்தி வாய்ந்தவை (1சாமு 2:3). பெலத்தினால் யாரையும் மேற்கொண்டுவிடலாம் என்ற அகங்காரம் (1 சாமு 2:9), மனிதரோடு வழக்காடுவது கர்த்தரோடு வழக்காடுவதற்கு சமானம் (1சாமு 2:10) என்பதனை அறியாத அவளுடைய பெயரின் அர்த்தம் வைரக்கல். ஆனால் பட்டை தீட்டப்பட்டதாகவோ, பாலீஷ் செய்யப்பட்டதாகவோ தெரியவில்லை; எத்தனை முரட்டாட்டம் .

எத்தனை பிள்ளைகள் இருந்தாலும், ஒன்றையும் ஆண்டவருக்காக அர்ப்பணிக்க அவளுக்கு மனதில்லை. ஆராதனைக்கு வருவாள், பலியில் பங்குபெறுவாள், ஆசீர்வாதம் வேண்டும், ஆனால் ஆண்டவருக்குரியதைத் தர மனதில்லை (1சாமு 1:2,4 ; யாத் 34;19,20). ஆனால், அன்னாளை கவனியுங்கள் தேவன் ஒன்று தந்தாலும் அவருக்கே தருவேன் (1 சாமு 1:11) என்ற அர்ப்பணிப்பு.

கர்த்தர் இடைபட்டு, ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கும் ஒருவரின் வாழ்க்கையை அற்பமாக எண்ணி (1சாமு 1:5), அழ வைத்து மகிழும் சுபாவம் கொண்டவள் இவனின் மனைவி. அவன் ஆறுதல் செய்பவன், இவள் காயப்படுத்துபவள். வருடந்தோறும் செய்வாள், சொல்லி சொல்லிக் காண்பிப்பாள். அன்னாளுக்குப் பின்னர்தான் இவள் எல்க்கானாவுக்கு மனைவியானாள்.

ஆனால், அமைதியையோ பணிவையோ இவளில் காணமுடியாது; தேவ சமூக பழக்கமும் இல்லை. ஆலயம் செல்வாள் பணிந்துகொள்வாள் (worship) (1சாமு 1:19); ஆனால் அர்ப்பணம் என்பதோ, மற்றவரை ஆற்றவும் தேற்றவும் தூக்கிவிடவும்

வேண்டும் என்ற எந்த எண்ணமும் கிடையாது. இன்று நம்முடைய சபைகளில், குடும்பங்களில் இவளைப் போன்ற மனைவிமார் எத்தனைபேர் உண்டு.

அநேகம் பிள்ளைகளைப் பெற்றவள் பலட்சயமானாள் (1சாமு 2:5) என்ற வார்த்தைகள் எழுதப்பட்டக் காரணத்தை கூறும் யூத பாரம்பரியம், சாமுவேல் பிறந்த போது பெனின்னாள் இரண்டு பிள்ளைகளை இழந்தாள் என்றும், அன்னாளுக்கு மீண்டும் ஐந்து பிள்ளைகள் பிறந்தபோது (1சாமு 2:21) பென்னினாள் தன் பத்துப் பிள்ளைகளையும் இழந்தாள் என்றும் கூறுகிறது. கூடவே பெனின்னாள் பிள்ளை பெறும் வல்லமைமையும் இழந்தாள் என்கிறது என்னே பரிதாபம்!

கூடவே, தேவனைத் தேடி ஆராதனை செய்பவர், அவர்களையும் அவர்களுடையதையும் அர்ப்பணிக்காமலேயே ஆராதனை செய்யக்கூடும் என்பதனை பெனின்னாளின் வாழ்வின் மூலம் வேதம் விளக்கிச் சொல்கிறது. அப்படி வாழ்பவர் வாழ்ந்து என்ன பயன்? இழப்புதானே அதிகம். அன்னாளின் ஒரு மகன் இராஜாக்களை அபிஷேகம் செய்பவர் (King maker), இஸ்ரவேலின் தீர்க்கதரிசி, தேவனுடைய மனுஷன் (1சாமு 3:20), பட்டணத்தில் பெரியவர் (1சாமு 9:6), ஜெப வீரன் (சங் 99:6), ஆனால் பெனின்னாளின் பிள்ளைகளோ பிணமானார்கள்.

மற்றவர்களை உன் ஆசீர்வாதங்களைக் காட்டி நோகப் பண்ணுகிறாயோ! உன்னை நிரப்பியுள்ளவர் அவர்களை வெறுமையாய் வைத்திருப்பதனைக் கண்டு மனமடிவாக்குகிறாயோ! அழுது புலம்பியும் நீ ஒன்றையும் பெற்றுக் கொள்ளவில்லை என்று கூறி வதைக்கிறாயோ! ஆண்டவர் சமூகத்தில் ஆனந்த படவேண்டிய நீ, மற்றவர்களோடு உன்னை ஒப்பிட்டுப் பார்த்து பரிசேயனைப் போல, பெனின்னாளைப் போல மேன்மை பாராட்டுகிறாயோ? (லூக் 18: 10-14) நினைத்துப் பார் முடிவினை.

இல்லாதவர்களை இகழ்ந்து விடாதே (நீதி 17:5;21:13; 23:10,11) ஒலிமுகவாசலில் எனக்குச் செல்வாக்கு உண்டு என்று நான் கண்டு, திக்கற்றவனுக்கு விரோதமாய் என் கையை நீட்டினதும் உண்டானால் என் கைப்பட்டை தோளிலிருந்து சரிந்து என் புயத்து எலும்பு முறிந்து போவதாக என்பது யோபுவின் தீர்க்க முடிவு (யோபு 31:21,22).

நம் துவக்கம் அற்பமாயிருந்தாலும், நம்முடைய முடிவு

**சம்பூரணமாயிருப்பதே நமக்கு அழகு** (யோபு 8:7) எச்சரிப்பைப் பெறுவோம். சீர்படுவோம், சிறந்து வாழ்வோம் அவர் சிறந்ததனைத் தருவார்.



# யோபு

# 8. பொல்லாப்புக்கு விலகுகிறவனின் பொல்லாத மனைவி...

தேவனே சாட்சி கொடுக்கும் ஒரு மனிதன் அவன். "உத்தமன், சன்மார்க்கன், தேவனுக்குப் பயப்படுகிறவன், பொல்லாப்புக்கு விலகுகிறவன், என் தாசன்" (யோபு 1:8) இதுதான் யோபுவைக்குறித்த தேவ எண்ணம். சத்துருவாகிய சாத்தான் தேவ அனுமதியோடு அவனுடைய வாழ்க்கையைச் சோதிக்க நேர்ந்த போது, ஒரே நாளில் 10 பிள்ளைகளின் மரணம் மற்றும் அனைத்துச் சொத்துக்களையும் இழந்த அவல நிலை (யோபு 1:13-19). வீட்டையும், பிள்ளைகளையும், சொத்துக்களையும் ஒரே நாளில் இழந்தவளின் நிலையில் எந்தப் பெண்ணையும் வைத்துப் பார்க்கக் கூடாது தான்.

தொடர்ச்சியாக சாத்தானின் கை அவனைத் தொட, உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலைமட்டும் கொடிய பருக்களால் வாதிக்கப்பட்ட அவனைக் குறித்து அவனே சொல்லும் காரியங்கள் மிகுந்த வேதனையையே கொண்டுவரும்.

1. இராக்காலத்தில் எலும்புகள் துளைக்கப்பட்ட நிலை (யோபு 30:17)
2. தோல் கறுத்துப் போயிற்று (யோபு 30:30)
3. எலும்புகள் உஷ்ணத்தினால் காய்ந்து போயிற்று (யோபு 30:30)
4. மாம்சம் பூச்சிகளினாலும், அடைபற்றின புழுதியினாலும் மூடப்பட்டிருக்கிறது (யோபு 7:5)
5. எலும்புகள் தோலோடு ஒட்டிக்கொண்டிருக்கிறது (யோபு 19:20)
6. பற்களை மூட கொஞ்சம் தோல் மாத்திரம் தப்பியுள்ளது (யோபு 19:20)
7. காய்ச்சல் (யோபு 30:30)
8. மனஉளைச்சல் (Depression) யோபு 7:15)
9. அழுகை (யோபு 16:16)
10. தூக்கமின்மை (யோபு 7:4)
11. பாதிக்கும் சொப்பனங்கள் (யோபு 7:14)
12. நாற்றமிகும் துர்நாற்றமெடுக்கும் சுவாசம் (யோபு 19:17)
13. குருட்டாட்டம் (யோபு 16:16)
14. கெட்டுப்போன பற்கள் (யோபு 19:20)
15. உருமாறிப்போன உடல் (யோபு 2:12)
16. ஓட்டை எடுத்து சுரண்டச் செய்யும் ஊரல் (யோபு 2:8)
17. கொடிய பருக்கையால் உண்டாகும் வாதை (யோபு 2:7)

18. அநேக நாட்களாக தொடரும் வியாதி (யோபு 29:2)
19. சீழ் பிடித்ததனை மறைக்க சாம்பல் (யோபு 2:8)
20. நரம்புகளுக்கு இளைப்பாறுதல் இல்லை (யோபு 30:17)

அவனுடைய மனைவிக்கு யோபுவின் சுவாசம் வேறுபட்டிருக்க காரணங்கள் உண்டே (யோபு 19:17). இழப்பு, இழிவு, கணவனின் வியாதியின் கொடுமை, நீண்ட நாட்களின் பாடுகள் எந்த மனைவியையும் வருத்தப்படுத்துமே. அவள் இடத்தில் நாம் இருந்தால் எப்படி இருந்திருப்போம்? நண்பர்களே அவனுடைய நிலையைப் பார்த்து ஏழு நாட்கள் பேசக் கூடாதபடி மாற்றப்பட்டிருந்தனரே (யோபு 2:13).

இவளை யூத பாரம்பரியம் யாக்கோபின் குமாரத்தி "தீனாள்" என்றே சொல்லுகிறது. யோபு யாக்கோபின் காலத்தில் வாழ்ந்தவன் என்பதும் கருத்து. யோபு நன்றாக, சுகத்தோடு, வசதியோடு, செல்வத்தோடு வாழ்ந்த போது சுற்றி சுற்றி வந்து பத்து பிள்ளைகளைப் பெற்றெடுத்தவள். அவள் ஆரம்பத்திலேயே ஆடம்பரப் பிரியை தானே (ஆதி 34:1,2). ஒருவன் பார்த்த மாத்திரத்திலே கற்பழிக்கும் அளவுக்கு அவளுடைய ஆடம்பரம் இருந்திருக்க வாய்ப்புண்டு.

புருஷனை சீக்கிரம் சாகும் என்று கூறும் அவள், தான் அதனால் பிள்ளைகள் இழந்த நேரத்தில் விதவையாகவும் ஆயத்தம் என்று வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பப் புயலில் அடிபட்ட அவள் புலம்புகிறாள் (யோபு 2:9).

ஆனால் துன்ப சூழ்நிலை அவளை சாத்தானின் கைப்பொம்மை ஆக்கின பரிதாபம் தான் பெரிது. சாத்தான் தேவனிடத்தில் சவால் விட்டது "யோபுவை தேவனை தூஷிக்கவைத்துவிடுவேன் என்பதே" (யோபு 1:11); அதே வார்த்தையைத் தானே இவளும் சொல்கிறாள் (யோபு 2:9). அன்று பேதுரு சாத்தானால் நிரப்பப்பட்டு, மனுஷீக சிந்தையால் நிறைந்து, இயேசுவுக்கு ஆலோசனை தந்ததைப் போலவே (மத் 16:23), இவளும் யோபுவை இடறப்பண்ணுகிறாள். இடறல் உண்டாக்குகிறவனுக்கு ஐயோ! அல்லவா (மத் 18:7). பக்கத்தில் வரவும் விடக்கூடாத வியாதி பிடித்து, மற்றவர்களால் ஏளனமாய் பேசப்பட்ட நிலைக்குத் தள்ளப்பட்டு நொந்து போயிருக்கும் அவனை "வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல" பேசுகிறாள். "இப்பொழுதோ என்னிலும் இளவயதானவர்கள் என்னைப் பரியாசம்

பண்ணுகிறார்கள். இவர்களுடைய பிதாக்களை நான் என் மந்தையைக் காக்கும் நாய்களோடே வைக்கவும் வெட்கப்பட்டிருப்பேனே" (யோபு 30:1).

**அரவணைத்து, ஆறுதல் சொல்லி, தேற்ற வேண்டிய அவள், சேவை செய்து வேதனையை மறக்கச் செய்ய வேண்டிய அவள், தேவன் கடந்த நாட்களில் செய்த நன்மைகளை ஞாபகப்படுத்தி துதிக்கக் கற்றுக்கொடுக்க வேண்டிய அவள், சுகத்திலும், துக்கத்திலும் கூட நிற்பேன் என்று வாக்குக் கொடுத்த அவளின் வார்த்தைகள் அவனைத் துளைத்திருக்க வேண்டும்.** ஆதலால்தான் அவன் அவளைப் "பைத்தியகாரியைப் போல பேசுகிறாய்" என்கிறான் (யோபு 2:10).

துன்பம் அடுக்கடுக்காக வரும்வேளையில் தளர்ந்து போனவர்கள் கணவனை எப்படி நடத்துகின்றனர். அதுவும் தேவபக்தியுள்ளவனை எப்படி நடத்துகின்றனர் என்பதனை ஆராயும் போது, நமக்குத் தைரியம் வந்திருக்க வேண்டும். ஆனால் இவளோ நமக்கும் மன உளைச்சலையே கொண்டு வருகிறாள்.

**ஆனால், திரும்ப தேவன் நினைவு கூர்ந்து, சிறையிருப்பை மாற்றி இரட்டைத்தனையாய் திரும்பத் தந்து, முன்னிலையைப் பார்க்கிலும் பின் நிலைமையை அதிகம் ஆசீர்வதித்தபோது, இதே தீனாள் (மனைவி) மீண்டும் பத்து பிள்ளைகளுக்கு தாயாகிறாள் அழகான பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாள்** (யோபு 42:10-15). எத்தனையான சந்தர்ப்பவாதி; நலமாய், சுகமாய், வசதியாய் ஐசுவரியமாய் இருந்தால் அவர் வேண்டும், இல்லையென்றால் **"செத்து மடியுமே" என்று தற்கொலைக்குத் தூண்டும் ஆலோசனை.**

அவனைப் பாவத்தில் விழப்பண்ணும் அவளுடைய முயற்சியில் (யோபு 1:22;2:10) அவள் தோல்வியுற்றாள்.

**என்ன வந்தாலும் நம்புவேன், என் புருஷனை நேசிப்பேன், அவருடைய தேவபக்தியைப் பாராட்டுவேன் என்று கூறுவோம்.** அது தேவனற்ற கணவனுக்கும், பக்தியுள்ள மனைவிக்கும் பொருந்தும். பரீட்சையில் வெற்றிப் பெற்றவர்களாய் நிற்போம்.



# ஓசியா - கோமர்

# 9. தீர்க்கனுக்கு ஒரு கிறுக்கு மனைவியா?

தேவன் சொன்னதினால் தேவக் கட்டளைக்கு செவி கொடுத்து, சோர வாழ்க்கை வாழ்ந்த ஒருத்தியைத் தான் ஓசியா தீர்க்கதரிசி மணந்து கொள்கிறார். அவள் சோர வாழ்க்கை வாழ்ந்ததும் போதாது என்று, பிள்ளைகளைப் பெற்றவள்; அப்பிள்ளைகளையும் சேர்த்து காப்பாற்றுகிறார். அவனோடு வாழ்க்கை நடத்தி மூன்று பிள்ளைகளைப் பெற்ற பின்னர், மீண்டும் அவள் தன் பழைய நாயகர்களை (திருமணத்திற்கு முன் காதலித்தவர்களை) நாடி ஓடி விடுகிறாள். கணவன் கொடுத்த வெகுமதிகளையும், பொருட்களையும் கொடுத்து, அவர்களோடு ஓடிப் போகிறாள் (ஓசி 1:2-3,6,9; 2:5-8).

ஆனால் அன்பினிமித்தமும், மன்னிப்பை அருளும் சுபாவத்தின் நிமித்தம், மீண்டும் பணயம் கொடுத்து எனக்காக காத்திரு, வேசித்தனம் பண்ணாதே என்று கேட்டுக் கொண்டு, தானும் காத்திருப்பேன் என்று சொல்கிற கணவன் தான் ஓசியா (ஓசி 3:2,3). ஆனால் உள்ளத்தில் வேசித்தன ஆவி உள்ள அவளோ... (ஓசி 5:4)

கர்த்தரின் அன்பை வாழ்வில் வெளிப்படுத்தி மற்றவர்களுக்கு மாதிரியாக வாழ நினைத்த அவன் வாழ்வில் மீண்டும் மீண்டும் மண்ணைப் போட்டாலும், "உனக்கு என்னிடத்தில் சகாயம் உண்டு (ஓசி 13:9), நித்திய விவாகத்துக்கென்று உன்னை எனக்கு நியமித்துக் கொள்ளுவேன் (ஓசி 2:19), மனப்பூர்வமாய்ச் சிநேகிப்பேன்" (ஓசி 14:4) என்று கூறும் கணவன் இன்றைய சமுதாயத்திற்கு ஓர் பெரும் சவால்; சிறிய காரணங்களையும் காட்டி விவாகரத்துக் கோரும் நாட்கள் இவைகள். "தள்ளிவிடுதலை நான் வெறுக்கிறேன்" என்று தேவன் கூறினாலும் (மல் 2:16), அற்பக் காரியங்களுக்கும் கோர்ட்டில் போய் நிற்கும் தம்பதியர் கிறிஸ்துவின் அன்பினால் நிரப்பப்பட்டால் எத்தனை நலமாயிருக்கும். கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டது போல நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள் (ரோமர் 15:7) என்பதே மன்னிப்பின் மகுடம்.

## அத்தியாயம் 2

# தேவபக்தியுள்ள மனைவியும் பக்தியற்ற கணவனும்



# நாபால் - அபிகாயில்

# 10. புத்திசாலிக்கு ஒரு பைத்தியக்காரன்

பணக்காரன் என்பதினால் தன் மகளை பைத்தியமும், முரடனுமான ஒரு மனிதனுக்கு திருமணம் செய்து வைத்து விட்டனர் அபிகாயிலின் பெற்றோர்; அவளோ புத்திசாலியும், ரூபவதியுமானவள் (1சாமு 25:3,25). ஒருவரும் அவளிடத்தில் பேசவும் கூடாது (1சாமு 25:17), தன்னுடையது தனக்கே என்பதில் கவனமாகயிருக்கும் அவன், என்னுடையது என்னுடையது என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளுகிறவன் (1சாமு 25:11). மற்றவர்கள் செய்யும் மறைமுக உதவியினைக் காணக் கூடாதபடிக்கு அவனுடைய தன்னயம் அவன் கண்களை மறைத்திருந்தது (1சாமு 25:15,16). தன் ஜனத்திற்காக யுத்தங்களை நடப்பித்து, தன் உயிரை கையில் வைத்து தேசத்தினை எதிரியின் கையிலிருந்து தப்புவித்தவனை அடையாளம் கண்டு கொள்ளவோ (1சாமு 25:28), இனிவரும் நாட்களில் அவனை ஆண்டவர் ஜனத்தின் அதிபதியாக உயர்த்த இருப்பதனையோ புரியவும் அவனுடைய கடின இருதயம் இடம் தரவில்லை (1சாமு 25:30).

கரம் கூப்பி தன் தேவைகளைக் கூறுபவர்க்கு இரங்கவும் அறியாதவன் அவன் (வச 5-8). தானே குடித்து வெறித்து ராஜவிருந்துக்கு ஒப்பாய் விருந்து சாப்பிட்டு வெறி கொள்ளுகிறவன் (வச 36), சம்பூரணமாய் வாழ்ந்த அந்த ஐசுவரியவானைப் போன்றவன் (லூக் 16:19). மற்றவர்களுக்கு ஏற்படும் ஆபத்தைக் காணக் கூடாதவன். நன்மைசெய்யும் படிக்கு உனக்குத் திராணியிருக்கையில் அதை செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே (நீதி 3:27) என்கிற நல் வார்த்தைகளை அறியாதவன்.


கூடவே, தனக்குத் தெரியாமல் நன்மை செய்யப்படுமானால் அதனைப் பொறுக்க கூடாமல் இருதயம் கல்லாக மாற்றப்படும் அளவுக்குப் பாதிக்கப்படுபவன் (1சாமு 25:37); இதினிமித்தம் தன் குடும்பத்திற்கும் தனக்கும் வரும் ஆபத்தினைக் காணக்கூடாதபடிக்கு மாற்றப்பட்டிருந்த அவனைக் காப்பாற்ற துரிதமாய்ச் செயல்படும் தேவபக்தியுள்ள ஒரு மனைவி அவனுக்கு உண்டு.

அவள் தாழ்மையை அணிகலனாக உடையவள் (வச 23), ஞானமாய் பேசுபவள், புருஷனின் குற்றத்தைத் தன் குற்றமாக சுமக்க ஆயத்தமானவள் (வச 24), தனக்குத் தெரிந்திருந்தால் நடக்கவிடாமல் தடுத்திருப்பேனே (வச 25) என புலம்புபவள்,

தேசத்தில் அதிபதியாய் உயர்த்தப்படப்போகும் தேவ மனிதன் குற்றமற்றவனாகவும், நல்மனசாட்சியை உடையவராகவும் இருக்கவேண்டும் என்பதில் கவனம் உள்ளவள் (வச 30,31), கர்த்தர் தான் பழிவாங்குகிறவர் என்பதனை நினைப்பூட்டுபவள் (வச 29), சமயம் அறிந்து சங்கதிகளை புருஷனுக்குச் சொல்லுபவள் (வச 37), தன்னுடைய நன்மைகள் பிறர் குறைவில் உதவ வேண்டும் என்பதில் கவனமாய் இருப்பவள் (வச 18), பிறர் கோபத்தினை தன் சாகசப் பேச்சினால் குளிரப்பண்ணுபவள் (வச 35) மகா புத்திசாலி.

தன் குலத்துக்கு வரும் அழிவு எப்படி வருகிறது என்பதனைக் கண்டு கொண்ட பெண்கள் எத்தனை பேர்? அதனைத் தடுக்க அவர்கள் செய்வது என்ன? ஜென்ம குணத்தோடு வாழும் முரடனை திருமணம் செய்து வைத்து விட்டார்களே என்று தன்னைக் குறித்து ஏங்கி வாழ அவளுக்கு தெரியாது. நடந்தது நடந்துவிட்டது ஆனால், நான் அவனையும் அவன் உடமைகளையும் காக்கக் கடமைப்பட்டவள் என்பதனை அவள் நன்கு அறிவாள். அவளுடைய வீட்டு வேலைக்காரர்கள் இவளைக் குறித்து நன்கு அறிந்து வைத்திருந்தனர் (வச 14). தங்களுக்குப் மதிலாக இருந்து உதவினவர்களை காக்கும் கடமை தனக்கு உண்டு என்பதனை புருஷன் அறியவில்லை; மாறாக புத்திசாலி மனைவி அறிந்து துரிதமாய்ச் செயல்பட்டாள்.

பின்னர், விதவையானதினால் (நாபாலை கர்த்தர் அடித்து செத்துப் போனான்), தாவீதுக்கு மனைவியாக உயர்த்தப்பட்டாள். உயர்த்தப்பட்டபோது, தான் பணிவிடை செய்யத்தான் உயர்த்தப்படுகிறேன் என்ற பக்குவமும், பண்பும், தாழ்மையும் கொண்ட தேவ பார்வையில் விலையேறப்பெற்ற குணங்களைக்கொண்டவள் அவள் (1சாமு 25:3; 1பேது 3:4). தனக்கு கிடைத்திருந்த அருமை மனைவியை அடையாளம் கண்டுக் கொள்ளத் தெரியாத புருஷர்கள் எத்தனை பேர்? அவளுடைய விலை முத்துக்களைப் பார்க்கிலும் உயர்ந்தது (நீதி 31:10). அவள் சிறுமையானவர்களுக்குத் தன் கையைத் திறந்து ஏழைகளுக்குத் தன் கரங்களை நீட்டுகிறாள் (நீதி 31:20). தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள், தயையுள்ள போதகம் அவள் நாவின் மேல் இருக்கிறது (நீதி 31:26). தன் நிலையை மாத்திரம் கண்டு அழுது கொண்டிருப்போர், தன் குடும்பத்தினருக்கும் வரும் அழிவைக் காக்க தன்னால் இயன்ற அத்தனையையும் செய்தால் இவளைப் போல் மாறிவிடலாமே.



# சூனேமியாள்

# 11. தேவனுடைய மனுஷனை அடையாளம் கண்ட தேவ பிள்ளை

தனக்குக் கனமும் ஐசுவரியமும் இருந்தாலும் அதனை பெருமையாக எண்ணாமல், தேவ மனிதர்களுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவள் சூனேமியாள் (2 இரா4:8). சரியான வழியில் எலிசாவை அவள் பரிசுத்தவான் என்று அடையாளம் கண்டு கொண்டதினால், தன் புருஷனையும் எலிசா தங்கிச் செல்ல அறையைக் கட்ட வைத்துவிடுகிறாள் (வச 9,10). தான் செய்த நன்மைக்குப் பதில் கிடைக்க வேண்டும். தேவ மனிதன் தன்னை ஆசீர்வதிக்கவேண்டும் என்று வாஞ்சித்து, எதிர்பார்த்து, இராஜாவினிடத்திலும், சேனாபதியினிடத்திலும், அதன் மூலம் செல்வாக்கைத் தேடிக்கொள்ள வேண்டுமென்ற விருப்பமும் இல்லாமல் (வச 13), தனக்கு ஒரு பெரிய பிள்ளையற்ற குறையிருந்ததையும் வெளிப்படுத்தி லாபம் சேர்க்க நினைக்காமல், தன் கணவன் வயதானவன் என்பதனையும் கருதாமல் வாழ்ந்தவள் அந்த தேவ பிள்ளை (வச 14,16).

அவளுடைய கணவன், காரியங்களில் அவள் சொல்வதனை ஏற்றுக்கொள்ளுவான்; ஆனால், அதிகம் அக்கறை கொள்ளாதவன். பிரச்சனைகளை மனைவியிடத்தில் தள்ளிவிட்டு விடுவான் (வச 18,19); அவளோ பிரச்சனைகளைத் தேவனுக்குத் தெரியப்படுத்தி தேவ மனிதனின் உதவியை நாடுகிறவள் (வச 22). வீட்டிலே அருமை மகனின் மரணத்தையும் அவள் புருஷனுக்கும் சொல்லவில்லை; மாறாக மரித்தவனை தேவன் உயிர்ப்பிப்பார் என்ற அசைக்க முடியாத விசுவாசம் அவளுக்கு இருந்தது (வச 30).

இன்றைக்கு எத்தனைப் பெண்கள் கஷ்டங்கள், பாடுகள், துன்பங்கள் வந்தால் ஐயோ, குய்யோ என அலறி புருஷனை அலட்டி, ஊராரைக் கூப்பிட்டு காரியத்தினைப் பெரிதாக்கிவிடுகிறார்கள். கண்டவர்களிடத்திலும் தன் காரியங்களைச் சொல்லி சுய பரிதாபத்தினை சம்பாதிக்க அவளுக்குத் தெரியாது (வச 26). விசுவாசத்தினால் ஸ்திரீகள் தாங்கள் சாகக் கொடுத்தவர்களை உயிரோடத் திரும்ப பெற்றார்கள் என்பது இவளைக் குறித்து தானோ (எபி 11:35). என் கடமையை நான் செய்தால், ஏற்றவேளையில் எனக்குக் கர்த்தரும் உதவுவார் என்பது இவளின் அசைக்க முடியா நம்பிக்கை. தேவ தீர்க்கத்தரிசியியையும், தீர்க்க தரிசனத்தையும் சார்ந்து வாழ்ந்ததால் பஞ்சத்திற்கும் அவள் தப்பிவிட்டாள் (2இரா 8:1,2). கைமாறு கருதாமல் கர்த்தரின் ஊழியரைத் தாங்குவோர் எப்போதும் வெட்கப்பட்டுப் போகார் என்பதற்கு இவள் ஒரு எடுத்துக்காட்டு.



# பினெகாஸ்

# 12. ஆகாமியம் கொண்ட ஆசாரியனின் மனைவி

ஆசாரியனின் மனைவி; அவனோ பேலியாளின் குமாரன் (1சாமு 2:12), தேவனை அறியாதவன், ஜனங்கள் காணிக்கையை அருவருப்பாய் நினைக்கும் அளவுக்கு வாலிபனான அவளின் புருஷன், வலுக்கட்டாயமாய் ஜனத்தினை நச்சரிப்பவன் (வச 13-17). கூடவே, ஆராதனைக்கு வரும் பெண்களையும் கெடுத்துப்போடுகிறவன் (வச 22). தன் தகப்பனின் எச்சரிப்பையோ, தீர்க்கதரிசிகளின் எச்சரிப்பையோ கேட்க விரும்பாதவன் (வச 25, 27-36). அவனுடைய கெட்ட நடக்கையே மரணநாளையும் குறித்து விட்டது (1சாமு 2:34); சந்ததிக்கும் சாபத்தை சம்பாதித்தவன் அவன் (1சாமு 2:33).

தேவ பெட்டி கூட இருந்தால் நம்மை அது பாதுகாக்கும் என்று குருட்டு நம்பிக்கை, தேவனுக்குப் பிரியமாய் வாழ்வதனைக் குறித்தோ ஒரு கவலையும் இல்லாதவன் (1சாமு 4:4). ஆரவாரமும் ஆர்ப்பரிப்பும் வெற்றியைக் கொண்டு வந்துவிடும், எதிரியின் மேல் வெற்றியை பெற்றிடமுடியும் என்ற அபத்த நம்பிக்கைக்கு ஜனங்களை ஏவிவிட்டவன் (வச 5). ஆனால் போர் முகத்தில் பரிசுத்தமே பாதுகாக்கும் என்பதனை உணர்த்துவிக்கும் வண்ணம் தோல்வி அவனையும் அவனுடையவர்களையும் கவ்விற்று (1சாமு 4:11).

தொண்ணூற்றெட்டு வயது கொண்ட மாமனார் உண்டு அவளுக்கு. ஆனால் முதுகெலும்பு இல்லாதவர். தேவ வார்த்தை அவர் வாயில் உண்டு (1சாமு 1:17) தீர்க்கதரினமும் உரைப்பார்; ஆனால், மக்களின் அங்கலாய்ப்பை புரிந்து கொள்ளும் திறன் அற்றவர் (1சாமு 1:12,13). தேவ சத்தம் கேட்க சிறுபிள்ளையாண்டான் சாமுவேலை தெளிவாக நடத்தத் தெரியும். ஆனால் தேவன் சொல்லிக் காண்பிப்பதனைத் திருத்தத் திராணியற்றவன் (1சாமு 3:9,18).

ஆனால், பினகாஸின் மனைவிக்கோ கர்த்தரின் பெட்டியைக்குறித்தும், கர்த்தரின் மகிமை தன் ஜனத்தை விட்டுப் போய் விடக்கூடாது என்பதிலேயே கவலை. அவளுடைய வேதனை பிரசவிக்கவும் செய்துவிட்டது. ஆனால், தனக்கு ஆண்மகன் கிடைத்தது அவளுக்கு ஆறுதலைத் தரவில்லை. குடும்பத்தில் ஏற்பட்ட நஷ்டத்திற்குக் காரணம் தேவ மகிமை தேவமக்களை

விட்டுப் போய்விட காரணமாயிருந்த தன் குடும்பத்தினாலேயே என்ற அங்கலாய்ப்பு அவளை உயிரை விடவும் செய்துவிட்டது. (1சாமு 4:19-22). தேவபக்தி, வைராக்கியம் அவளை மேற்கொள்ள தன் புருஷனுக்குப் பதிலாக பிள்ளை வந்து விட்டானே என்று திருப்தி கொள்ளவிடவில்லை; அதனைக் கண்டு கொள்ளவுமில்லை (வச 20), திரும்பிப்பார்க்கவுமில்லை; இப்படி ஏங்குபவர் யார்? இன்று.



# எஸ்தர் - அகாஸ்வேரு

# 13. எதிரியை மடங்கடிக்கும் எஸ்தர்...

அனாதைக்கு அரசு வாழ்வு, அரண்மனை சுகம், பட்டத்தரசி அவள். ஆண்டவரையோ, ஆண்டவரின் ஜனத்தையோ அறியாத கணவனுக்கு அவள் மனைவி (எஸ் 2:7,17). குடித்து, வெறித்து மனைவியை மற்றவர்கள் பார்த்து மகிழவேண்டும் என்பதனை விரும்பும் அப்படிப்பட்ட கணவன் (எஸ் 1:10,11) தான் விரும்பாதது நடக்கும் போது மூர்க்க வெறி கொள்பவன் (எஸ் 1:12), பின்னர் கோபம் தணிந்தால் கஷ்டப்படுபவன் (எஸ் 2:1). ராஜ ஸ்திரீ என்றாலும் அழைக்காமல் அறைக்குள் நுழைந்தால் அடுத்த நிமிடமே கொலை செய்யப்படுவாள் என்ற கட்டளையை பிறப்பித்தவன் (எஸ் 4:11). ஒருமாதமளவும் அரண்மனையிலேயே இருந்தும், அலுவல் நிமித்தம் அல்லது ஆட்டம் பாட்டத்தில் மனதினைப்பறிகொடுத்ததின் நிமித்தம் மனைவியின் முகத்தைக் கூடப்பார்க்காதவன் (வச 11).

இங்கிதமாய் பேசி, இப்படிப்பட்ட அதிகாரப் பெருமை வாய்ந்த அகங்கார கணவனை தன் வழியில் கொண்டு வந்து தன் ஜனத்தினை அழிவுக்குத் தப்புவித்தவள்தான் எஸ்தர் (எஸ் 5:8). தன் ஜீவனைப் பார்க்கிலும் தன் ஜனத்தின் அழிவைக் தாங்கிக்கொள்ள முடியாமற் போய் விட்ட அவளின் மனநிலை (எஸ் 4:16), சட்டத்தினையும் மீறச் செய்துவிட்டது.

பெருமை பேசுவோரை (எஸ் 5:10-12), துர்க்குணம் கொண்டோரை (எஸ் 7:6), துல்லியமாகக் காட்டிக் கொடுத்து, தேவ பெலத்தினால் அழித்துப்போட்ட அவள் தேவமனிதன் மொர்தேக்காயின் சொல் கேட்டபடியினால் தான் நடந்தது. தேவ ஜனத்திற்கு, தன் குலத்திற்கு வெளிச்சத்தையும், மகிழ்ச்சியையும், களிப்பையும் கனத்தையும் கொண்டு வந்துவிட்டாள் அவள் (எஸ் 8:16). அழிவுக்கு ஏதுவான ஜனம் அவளுடைய அர்ப்பணத்தினால் ஆர்ப்பரித்து மகிழும் ஜனமாக மாற்றப்பட்டுவிட்டது (எஸ் 7:4; 8:15; 9:19).

திருவசனத்திற்குக் கீழ்படியாத கணவன்மாரை, பயபக்தியோடு கூடிய கற்புள்ள நடக்கையினால், போதனையின்றி ஆதாயப்படுத்தக்கூடும், ஆசீர்வாதமாக மாற்றமுடியும் என்பதனை (1பேரு 3:1,2) நிரூபித்து விட்டாள் எஸ்தர்; அவளைப்போன்றோர் எழும்பட்டும்.



# யூதா - தாமார்

# 14. மதிக்கப்படத்தக்க மருமகள்

மத்தேயு எழுதின சுவிசேஷத்தின் முதல் அதிகாரத்திலேயே ஐந்து பெண்களின் பெயர்களை மத்தேயு குறிப்பிடுகிறார். வழக்கமாக தங்கள் ஜென்ம அட்டவணையில் பெண்களின் பெயர்களைக் குறிப்பிடுவது யூதர்களுக்கு வழக்கமில்லை. ஏனெனில், யூதன் ஒருவன் மூன்று தடவை தேவனை ஒரு நாளில் மூன்று காரியங்களுக்காக ஸ்தோத்தரிப்பான். முதலாவது தான் ஆபிரகாமின் வித்து என்பதினாலும், இரண்டாவதாக சுதந்தரமாய் பிறந்திருக்கிறேன் அடிமையில்லை எனவும், மூன்றாவதாக பெண்ணாக பிறக்காமல் ஆணாக பிறந்ததற்காகவும். ஆனால் யூதர்களுக்காக எழுதப்பட்ட இந்த சுவிசேஷத்தின் ஆரம்ப அத்தியாயத்திலேயே மத்தேயு தாமார் (வச 3) ராகாப் (வச 5) ரூத் (வச5) பத்சேபாள் (வச 6) மரியாள் (வச 16) என்ற ஐந்து பெண்களைக் குறிப்பிடுகிறார்.

**இந்த ஐந்து பெண்களின் மத்தியில் காணப்படும் பொதுவான குணம், "அவமானம் ஆனாலும் ஆண்டவரின் ஆசீர்வாதந்தனை பூமிக்கு வழங்க வேண்டும்" என்ற நோக்கமே.** ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட ஆசீர்வாதம் "உன் சந்ததிகளினால் இந்த பூமி ஆசீர்வதிக்கப்படும் என்பதே" (ஆதி 12:3; 22:18); இதனை அவர்கள் பரிபூரணமாக நம்பினார்கள் வாஞ்சித்தார்கள். **உலகின் ஆசீர்வாதத்திற்காகவே தங்களை தேவன் தெரிந்து கொண்டிருக்கிறார் என்பதனை அறிந்திருந்த குலம், அதற்காக எதையும் செய்ய ஆயத்தம்.**

ஆதி 38-வது அதிகாரத்தில், தாமார் யூதாவின் குடும்பத்தில் இணைந்து, அந்த சந்ததியில் தனக்குப்பிள்ளை வேண்டும் என்பதினால் மாமனோடு இணைந்து (ஏமாற்றி) கர்ப்பவதியானதை வேதம் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது. எரிகோவாசியான ராகாப், தன் ஜனத்தினை விட்டு இவர்களோடு இணைந்து பின்னர் சல்மோனை திருமணம் செய்கிறாள் (மத் 1:5). ரூத் என்னும் தள்ளப்பட்ட சாப சந்ததியான மோவாபில் பிறந்திருந்தாலும், உறுதியான தீர்மானத்தின்படி (ரூத் 1:16) போவாஸை மணக்கிறாள் (ரூத் 4:10). பத்சேபாளும் தாவீதின் இராஜ குலத்தில் தான் மீட்பர் தோன்றுவார் என்பதனை அறிந்திருந்ததினால் (ஆதி 49:10), வழியில் தனக்கு ஒரு சந்ததி உண்டாகட்டுமே என்றதினால் தான் அவனோடு உறங்க

சம்மதித்தாள் (2சாமு 11:4); பின்னதாக உன் சந்ததி தான் சிங்காசனத்தில் அமருவான் என்ற உறுதி மொழியினையும் பெற்றுக்கொண்டாள் (1இராஜா1:29). மாற்றான் மனைவி என்ற போதிலும் அவள் தாவீதுக்குக் கர்ப்பந்தரிக்கிறாள். மரியாளும் கன்னிப் பெண் கர்ப்பவதியானால் என்ன சொல்வார்கள் என்பதனை விட்டுக்கொடுத்து, தேவ தூதன் வாக்குக்கு செவிகொடுக்கிறாள். தன் சரீரத்தினால் தேவன் மகிமைப்பட ஒப்புக்கொடுக்கிறாள் (லூக் 1:3, 38).

இந்த உண்மைகளைப் புரிந்து கொண்டால், ஆதி 38-ம் அதிகாரம் நமக்கு மன உளச்சலை ஏற்படுத்தாது. யூதா கானானியப் பெண்ணாம் சூவாவிடத்தில் 'ஏர்' என்ற குமாரனைப் பெற்ற போது $13_{1/2}$ வயதுடையவனாகத் தான் இருந்தான். "ஓனான்" பிறக்கும் போது அவனுக்கு $14_{1/2}$ வயது; சேலா பிறக்கும் போது அவனுக்கு $15_{1/4}$ வயது; தாமரிடத்தில் பேரேஸ் பிறந்த போது $28_{3/4}$ வயது.

எனவே "பேரேஸ்" பிறந்த போது தாமார் 25 வயது நிரம்பிய ஓர் பெண்ணாய் தான் இருந்திருக்க வேண்டும். தன்னுடைய முந்திய கணவர்கள் இரண்டு பேரும் கர்த்தரின் பார்வையில் பொல்லாப்பை செய்து மரணத்தைச் சந்தித்த காரியம் அவளை வாட்டியிருந்தாலும் (ஆதி 38:7,10), மூன்றாம் மகன் அவளுக்குக் கணவனாய் மாறுவான் என்று காத்திருந்தாள். ஆனால் யூதா பயத்தின் நிமித்தம் அவனைத் தரவில்லை (வச 11). எனவே தனக்கு வரவிருந்த பாக்கியம் இல்லாமல் போகுமோ என்று பயந்து, தன் மனதைக் கடினமாக்கிக்கொண்டு, நாடகமாடி யூதாவுக்கு ஒரு குமாரனைப் பெறுகிறாள். பின்னதாக யூதா அவளைக் குறித்து, "என்னிலும் அவள் நீதியுள்ளவள்" என்கிறான் (வச 26).

அவமானம் வந்தாலும், அது தேவ ஆசீர்வாதத்தைக் கொண்டுவர தன்னை வாய்க்காலாக மாற்றுவதிலிருந்து தடுத்து நிறுத்தக் கூடாது என்பதனை உணர்ந்து தன் சரீரத்தை ஒப்புக்கொடுக்கிறாள். பின்னர் யூதா வம்சத்திலும் திருமண விழாக்களில் ஆசீர்வதிக்கும்போது "தாமார் வீட்டைப்போல" என்று இவள் செய்ததை ஞாபகப்படுத்தி ஆசீர்வதிப்பது வழக்கமாயிற்று (ரூத் 4:12).

ஏமாற்றப்பட்டு விட்டேனே என்று ஏங்காமல், எப்படியாகிலும் பூமியின் குடிகளுக்கு ஆசீர்வாதமாக என் குடும்பம் ஆக வேண்டும்

என ஏங்குவோர்க்கு இவள் எடுத்துக்காட்டு. காரியத்தினைக் கண்டால் காரி உமிழச்செய்யும் செயல் போலக் காணப்பட்டாலும், உள் நோக்கத்தினை அறிந்த ஆண்டவரும் இதனை அங்கீகரித்து விட்டாரே.

திருமண வாழ்வில் எதை நோக்கிச் செயல்படுகிறோம் என்பது மிகவும் முக்கியம். உள் நோக்கம் என்ன? என்ற கேள்வி அடிக்கடி கேட்கப்படுவது நல்லது. இன்றைய சூழ்நிலையில் இது ஏற்புடையதாய் காணப்படுகிறது இல்லை; ஆனால், ஆண்டவரை தன் இரட்சகராக ஏற்றுக்கொண்ட மாற்று மதத்தினர் குடும்பத்தினை அள்ளி அணைப்பவர் யார்? கீழ் ஜாதி என்று தள்ளி விட்டு அடைக்கலம் தர மறுப்பவர் எத்தனை பேர் யோசிப்போம்.



# மனோவா

# 15. பயந்தவனுக்கு பராக்கிரமசாலியைத் தந்தவள்

ஜெபிக்காத தம்பதியருக்கு ஒரு சிறப்புச் செய்தி வருகிறது. வேண்டிக்கொள்ளாமல் சத்துருவின் பிடியில் சமாதானமாக வாழ்ந்து கொண்டிருந்த இஸ்ரவேலுக்கு, விடுதலையை தேவன் வாக்குப் பண்ணுகிறார் (நியா 13:1,3 ; 15:11). கணவன் விசுவாசத்தில் அத்தனைத் தேறினவன் இல்லை (நியா 13:22) பயந்து சாகிறவன். **வாக்குத் தந்தவருக்கு பலி செலுத்தவேண்டும் என்பதனை அறிவான்; ஆனால், அவர் பலியை ஏற்றுக்கொண்டதினால் என்னையும் ஏற்றுக்கொண்டார் என்பதனை அறிய மாட்டான் (நியா 13:15,23) (ஆதி 4:4). அதிசயம் கண்டான் ஆனால் அது தன்னில் நிறைவேறும் என்பதனை விசுவாசிக்க பெலன் இல்லை.** (நியா 13:19,20)

ஆனால், மனைவி உறுதியானவள்; எனவேதான் அவள் பிள்ளைக்காக ஏங்கி, தவித்து வேண்டுதல் கூட செய்யாத போது (லூக் 1:13), தேவன் அவளைத் தேடித் தந்த ஆசீர்வாதத்தினைப் பெற்றுக்கொள்ளும் செய்தியினைப்பெற தகுதியுள்ளவளாகிறாள். முதல் தூதனானவன் இரண்டு முறையும் அவளுக்கே தரிசனமாகிறதைக் கவனியுங்கள் (நியா 13:3,7). கணவன் தான் "நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒரு விசை எங்களிடத்தில் வந்து பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்ய வேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக" என்று வேண்டிக்கொண்டான். ஆனால், அவனுடைய பலவீனத்தை அறிந்த கர்த்தர் அவளுக்கே காட்சியளிக்கிறார்.

பயந்து நடுங்கி "செத்துப்போவோம்" என்று கலங்கும் அவனை, அவளுடைய விசுவாசமே தூக்கி நிறுத்துகிறது. **விசுவாசத்தில் தளர்ந்து காரியங்களை கர்த்தரின் கண்ணோட்டத்தில் காணத்தவறும் அவனை, அவள்தான் கட்டிப்பிடித்து "கலங்காதீர்" என்கிறாள். "விசுவாசத்தில் பலவீனமுள்ளவர்களைச் சேர்ந்துக்கொள்ளுங்கள். ஆனாலும், அவர்களுடைய மன ஐயங்களைக் குற்றமாக நிர்ணயிக்காதிருங்கள் (ரோ 14:1) என்ற அறிவுரை இவள் வாழ்க்கையின் மூலம் தான் நமக்குத் தரப்படுகிறதோ? கணவனின் பக்தியை எள்ளி நகையாடுவோரும், விசுவாசத்தைச் சேதப்படுத்துவோரும், பயத்தினை பலமடங்காக மாற்றுவோரும் நிறைந்த மனைவிகளைக் கொண்ட இவ்வுலகில், இவள் ஒரு மாற்று மருந்து! தேவ நோக்கினை அவள் நிறைவேற்ற பராக்கிரமசாலி ஒருவனைப்பெற்றுத் தர காரணமாகிவிட்டாளே! (எபி 11:32)**



# பிலாத்து

# 16. நீதிமன்றம் வரை சென்ற மனைவி

"கனநித்திரை மனுஷர் மேல் இறங்குகையில் அவர்கள் படுக்கையின் மேல் அமர்ந்திருக்கையில், அவர் இராக்காலத்துத் தரிசனமான சொப்பனத்திலே மனுஷனுடைய செவிக்குத் தாம் செய்யும் காரியத்தை வெளிப்படுத்தி, அதை அவர்களுக்கு வரும் தண்டனையினால் முத்திரைப் போட்டு, மனுஷன் தன் செய்கையை விட்டு நீங்கவும் மனுஷருடைய பெருமை அடங்கவும் செய்கிறார். இவ்விதமாய் அவன் ஆத்துமாவைப் படுகுழிக்கும் அவன் ஜீவனை பட்டய வெட்டுக்கும் தப்புவிக்கிறார்" (யோபு 33:15-18) என்பது நியாயப்பிரமாணமும் அறியப்படும் முன்னர் மனிதர்கள் கண்டிருந்த உண்மை. தேவ பிரமாணங்களை அறியாத ஒரு புறஜாதிப் பெண், தேசாதிபதியான பிலாத்துவின் மனைவிக்கு வந்த சொப்பனங்கள் பிலாத்துவை எச்சரிப்பதற்கு ஆளை அனுப்பிவைக்கிறது (மத் 27:19). அந்த வார்த்தைகள் பிலாத்துவையும் இயேசு நீதிமான் என்றே கூற வைக்கிறது (மத் 27:24).

கணவன் தவறு செய்து தன் குடும்பத்திற்கும் சந்ததிக்கும் அழிவைக் கொண்டு வந்து விடக்கூடாது என்று கலங்கும் இந்த மனைவி, நியாயஸ்தலத்தில் உட்கார்ந்திருக்கும் தன் கணவனை எச்சரிக்கிறாள். தேவனுக்கும், தேவ நியாயத்தீர்ப்புக்கும் பயப்படுகிற அவள், தேவனை அறிய வேண்டிய விதம் அறிய வாய்ப்பற்றிருந்தும் (அரண்மனையில், ரோமர் அரியாசனையில் வீற்றிருக்கும் கணவனின் அன்பு மனைவியாக வாழ்ந்ததால்) எச்சரிப்பைத் துணிந்து தருகிறாள்.

இன்றும் பாதாளத்தில் பிலாத்து தன் கைகளைக் கைகழுவிக்கொண்டே "இந்த நீதிமானின் இரத்தப்பழிக்கு நான் பங்காளியல்ல" என்று சொல்லிக்கொண்டிருப்பதாக சிலர் கூறுவர்; அத்தனைப் பெரிய தாக்கத்தைச் செய்து விட்டாள் அவள்.

ஒருவேளை அவளுடைய சொப்பனங்கள் "இயேசுவை பாவமற்றவர்" என்பதனை நிரூபிக்க மற்றொரு உபகரணமாக இருந்தாலும், **அதிகாரப் பெருமை, தன் கணவனை கூக்குரல் செய்யும் ஜனத்தின் நெருக்கம் (Peer presure) கெடுத்து விடக் கூடாது என்பதில் கவனம் செலுத்துகிறாள். இன்றைக்கும், அரசு பணியில், நீதி துறையில் உள்ளவர்களின் பக்தியுள்ள மனைவிகள்**

இதனை நிறைவேற்றக் கூடுமே. தன் கணவன் அதிகராத்தினை துர் பிரயோகம் செய்து விடாதபடியும், சுற்றியுள்ளோரின் அழுத்தத்தினால் அநீதி செய்து லஞ்சம் வாங்கி குடும்பத்திற்குச் சாபத்தினைக் கொண்டு வந்துவிடக்கூடாதே என்பதில் கவனமாக இருந்து எச்சரிப்பைத் தரமுடியுமே; தேவன் அப்படிப்பட்ட மனைவிகளை எழுப்புவாராக.

# கிடைத்துவிட்டதை மாற்ற நினைக்காதீர்கள்

மேலே குறிப்பிட்ட இரண்டு வகையான தம்பதிகளும் (தேவபக்தி கொண்ட கணவன் பக்தி அற்ற மனைவி, தேவ பக்தி கொண்ட மனைவி பக்தி அற்ற கணவன்) உடையவர், மற்றக் குடும்பங்களைப் பார்த்து, எனக்கு அப்படிப்பட்ட கணவர் கிடைத்திருந்தால் அல்லது அப்படிப்பட்ட மனைவி கிடைத்திருந்தால் நலமாயிருந்திருக்குமே என எண்ணி எண்ணி ஏங்கி **தன் மனைவியின் அல்லது கணவனிடத்தில் மற்றவர்களை வைத்து கற்பனைசெய்து கலங்கித் தவித்து தம்முடைய வாழ்க்கையை சீரழித்துக் கொண்டவர்களும் உண்டு.** நீ மனைவியோடே கட்டப்பட்டிருந்தால் அவிழ்க்கப்பட வகை தேடாதே (1கொரி 7:27).

**மாறாக, உடன் எவ்விதத்திலேயோ இணைக்கப்பட்ட அவர்கள் கிறிஸ்துவைத் தேடவும் தேவபக்தியில் நடக்கவும்** உதவி செய்து, இரண்டுபேரும் தேவபக்தியாய் நடக்கவும் இருவரும் கர்த்தரிட்ட சகல கற்பனைகளின்படியேயும் நியமங்களின்படியேயும் குற்றமற்றவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ளவர்களாக (லூக் 1:6) மாறினால், கிறிஸ்துவின் முதல் வருகைக்கு ஜனத்தை ஆயத்தம் செய்ய அனுப்பப்பட்ட யோவான் ஸ்நானகனின் பெற்றோரைப் போல **இரண்டாம் வருகைக்கு ஜனத்தை ஆயத்தப்படுத்த வழி உண்டாக்க முடியுமே.** தேவனுடைய செயலைக் கவனித்துப்பார் அவர் கோணலாக்கினதை நேர்மையாக்கத்தக்கவன் யார் (பிர 7:13).

நாம் உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் அவருக்கு முன்பாகப் பரிசுத்ததோடும், நீதியோடும் ஊழியஞ் செய்யத்தானே நமக்கு கிறிஸ்துவின் அன்பு அருளப்பட்டிருக்கிறது (லூக் 1:71). அந்தகாரத்திலும் மரண இருளிலும் உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தர, நம் குடும்பத்தினையும் தேவன் தெரிந்து கொண்டுள்ளார் என்கிற நினைவு நம்மை ஆட்கொள்ள, **நானும் என் வீட்டாருமோவெனில் கர்த்தரையே சேவிப்போம் என்று முழக்கமிடச் செய்யுமே (யோசு 24:15).** அது நம்மைச் **சுற்றியிருக்கிறவர்களையும் அயலகத்தாரையும் சுற்றத்தாரையும் ஆண்டவரைச் சேவிக்கத் தூண்டும் சக்தியாய் மாறிவிடுமே.** கிடைத்த மனைவியை அல்லது கணவனை தேவனுக்குரியவர்களாய் மாற்றும் பணியினை செய்ய தூய ஆவியானவர் உதவுவார். நீயும் உன் வீட்டாரும் என்பது அவருடைய வாக்குத்தத்தம் (அப் 16:31) ஒரு குளம்பும் பின்வைக்கப்படுவதில்லை (யாத் 10:26).

# அத்தியாயம் 3

# பக்தி நிறைந்த கணவனும் மனைவியும்

## ஒருமனமாகிய இருமனம்

இணைக்கப்பட்ட இருவரும் தங்களை தேவன் இணைத்த நோக்கத்தினையும், அதை நிறைவேற்ற வேண்டிய புரிந்து கொள்ளுதலையும் அறிந்து, இணைந்து வாழ ஆரம்பித்தால் அக்குடும்பம் ஒரு குட்டிப் பரலோகமே. அதில் இடர்கள் வரலாம், பிரச்சனைகள் எழலாம், போராட்டங்களைச் சந்திக்க நேரிடலாம், சத்துருவை முகமுகமாய் சந்திக்க நேரிடலாம், இல்லாமை, ஏழ்மை என்கிற மலைகளைத் தாண்டிச் செல்ல நேரிடலாம்; என்றபோதிலும், அது அவர்கள் உறவையோ, தேவ நோக்க நிறைவேறுதலையோ பாதிக்கப் பலனற்றவை.

ஆண்டவர் அவர்களோடு இணைந்து செயல்படுவதால் ஆறுதலும், தேறுதலும் நிறைந்த ஒரு பூங்காவாக அது காட்சியளிக்கும். மற்றவரின் பழிச்சொற்கள் பாதகத்தைக் கொண்டு வராமல் இருவரையும் தேவ சமூகத்திற்கே அடிக்கடிக் கூட்டிச்சேர்க்கும்.

சில நேரங்களில் வாக்கு வாதங்கள் உண்டாகலாம்; ஆனால், அவை தேவ பலத்தால் மேற்கொள்ளப்படும்; தவறாகப் புரிந்து கொள்ளுதல் உண்டாகும் வாய்ப்புகளும் வரலாம், ஆனால் இருவரும் வெளிச்சத்தின் பிள்ளைகள் ஆனதால் சீக்கிரத்தில் அந்த திரை அகற்றப்படும். முடிவுகள் ஒருவரையொருவர் சில காலம் வரை பாதிக்கலாம். ஆனால் இறுதி வெற்றி இருவருக்குமே உரியதாக மாறிவிடும்.

தேவபயம், தேவ பக்தி அக்கம் பக்கத்தவரையும் பாதிக்கும். சந்ததி சந்ததியாய் ஆசீர்வாதம் பெறும். இருவரும் இணைந்து இல்லறத்தினைக் கட்டுவதால், விட்டுக்கொடுத்தல், இசைந்து போகுதல், தியாக சிந்தை, நேசப்பெருக்கம், மன்னிக்கும் சுபாவம், ஒருவருக்காக ஒருவர் கவலை கொள்ளுதல் மற்றும் நற்கனிகளால் நிறைந்திருக்கும் சாந்தமே தாராளமாகக் காணப்படும். களிப்பின் சத்தமும் மகிழ்ச்சியின் சத்தம் ஆடல் பாடலின் சத்தமும் அறைகளில் நிறைந்து காணப்படும். அலங்கத்திற்குள்ளே சமாதானமும் அரண்மனைக்குள்ளே சுகமும் தங்கும் (சங் 122:7).

எதிர்காலத்தினைக் குறித்த பயமில்லாமல், என் ஆண்டவர் எங்களில் கிரியை செய்து, எங்களைக்கொண்டு செய்ய வேண்டியவைகளை செய்து முடிப்பார் என்ற தரிசன

நிறைவேறுதலைக் காண வாஞ்சிக்கும் வாஞ்சை மிஞ்சுவதினால், திருப்தியான வாழ்வும், தீங்கற்ற நினைவுகளும், திக்கற்று திரியும் நிலையும் இல்லா நிம்மதியும் நிறைந்த வாழ்வாகும்; அப்படி வாழ்ந்தவர்களை சற்று கவனிப்போம்.



# நோவா

# 17. சீர்கெட்ட பூமியில் சீரான குடும்பம்

நோவாவைக் குறித்து நமக்கு பல தகவல்களைத் தரும் வேதம், அவனுடைய இணைந்து போகும் மனைவியைக் குறித்து அதிகம் பேசவில்லை. ஆயினும், 950 வருடம் வாழ்ந்த நீதிமானாகிய மனிதன் ஒருவனோடு இவளும் நீண்ட காலம் வாழ்ந்திருக்க வேண்டும் (ஆதி 9:29; ஆதி 6:9). **அவன் தேவனோடு சஞ்சரித்து வந்ததற்கு இவளுடைய ஒத்துழைப்பு எத்தனையாய் இருந்திருக்க வேண்டும். தேவக் கட்டளையைத் தலைமேல் கொண்டு (ஆதி 6:22) கிட்டத்தட்ட 1,35,560 ஆடுகளை ஏற்றிச்செல்லக்கூடிய பெரிய பேழையை இயந்திரங்கள் இல்லாத நாட்களில் உருவாக்கின அவனுக்கு அவள் எத்தனையாய் துணை நின்றிருக்கவேண்டும்.**

கூடவே, மூன்று கீழ்ப்படியக் கூடியவர்களும், தகப்பனுடைய தரிசனத்தை நிறைவேற்ற இணைந்து செயல்பட்ட குமாரர்களை அவள் எத்தனை கரிசனையாய் வளர்த்திருக்கவேண்டும். அவர்கள் திருமணம் செய்த பெண்களிடத்தில் எத்தனை அன்பாய் நடந்துகொண்டு, குடும்ப ஒற்றுமைக்காய், இணைக்கும் பாலமாய் செயல்பட்டிருக்க வேண்டும் என்பதனை நினைக்குங்கால் இவளின் மாபெரும் சாதனை தெளிவாகத் தெரியும்.

தன் புருஷனுக்குத் தேவன் தந்த பணியினையோ கட்டளைகளையோ அவள் கேள்வி கேட்டதேயில்லை. மாறாக தேவமனிதன் இவர் தேவ ஆலோசனையை நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை அவளுக்கு இருந்தது. நிரம்பி வழியும் பூமியில் (ஆதி 6:1) தேவனுக்குப் பிரியமற்ற இனச்சேர்க்கையினாலும், பொல்லாத ஆவிகளின் ஈடுபாடுகளினாலும் தங்களைக் கெடுத்துக்கொண்ட பெண்கள் நிறைந்த உலகில் (ஆதி 6:2,4), இராட்சதர்களை உருவாக்கி **உலகுக்கு அழிவைக் கொண்டு வரக்காரணமாயிருந்த பெண்களைக் கொண்ட பூமியில்,** தொடர்ச்சியாக இருதயத்தின் நினைவுகளில் பொல்லாதவைகளை நினைக்கும் பூமியில் (வச 5), தேவனே மனம் சலித்துப்போய் இருந்தவேளையில் (வச 6), கொடுமையினால் (வச 11) நிறைந்த உலகில், தங்களை **தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளக் கூடியப் பாத்திரங்களாக குடும்பமாக தங்களைக் காத்துக்கொண்ட இந்த தம்பதியர் எத்தனை விசேஷமானவர்கள்.** தேவனே அவர்களோடு ஒரு உடன்படிக்கை செய்ய வாஞ்சிக்கும் அளவுக்கு பயபக்தியுள்ள குடும்பமாகத் தன்னைக் காத்துக்கொண்டவர்கள் இவர்கள் (வச 18).

அவபக்தியுள்ளவர்கள் நிறைந்த உலகில் (2பேது 2:5) நீதியைப் பிரசங்கித்த ஊழியக்காரனின் மனைவியின் பங்கையும் மறக்கமுடியாது.


இத்தனைப்பெரிய வேலையைச் செய்வதற்கு தங்களுக்கு பெலன் உண்டா? என்ற கேள்வி எழவில்லை. விசுவாசம் மேலோங்கி நிற்கும் வாழ்வில் இது இலகுவானதே (எபி 11:7). **அத்தனை மிருகங்களோடு கூட, பறவைகளோடு கூட, ஒரு வருடம் பேழைக்குள் வாழ்வதற்கு அக்குடும்பத்திற்கு எத்தனை பொறுமை, தாங்கும் சக்தி இருந்திருக்கவேண்டும். எத்தனை விதவிதமான பறவை மிருகங்களை கண்காணிக்க அவர்களுக்கு எத்தனை கஷ்டமாய் இருந்திருக்க வேண்டும். ஆனால் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறோம் என்ற நினைவு அத்தனையையும் மாற்ற வலியது** அல்லவா!

**குடும்பக் கட்டுபாடு, கர்த்தருடைய வேலையில் முனைந்து நின்ற அவர்களுடைய குமாரருக்கும் மருமக்களுக்கும் 120 வருடம் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளக் கூட மனதற்றவர்களாக மாற்றியிருந்ததனைக் கண்டு நான் வியப்படைகிறேன்** (ஆதி 10:1).

**தன் நீதியுள்ள வாழ்க்கை, அது நீண்டவாழ்க்கை ஆயினும் தன் குடும்பத்தாரை நீதிக்குள் வழிநடத்திய வாழ்க்கை** (எசே 14:14). **தீர்க்க தரிசியான நோவா** (எபி 11:7) **வருங்காலத்தினை நன்கு அறிந்தவன். 120 வருட ஊழியத்தில் ஒருவரையும் ஆதாயம் செய்ய கூடாமற் போனாலும், சோர்ந்து போகாமல் நீதியைப் பிரசங்கிக்க அவனுக்கு பெலன் இருந்ததற்கு, அவன் பயபக்தியுள்ள மனைவியும் மக்களும், மருமக்களும் காரணமாயிருந்திருக்க வேண்டும்** (2 பேது 2:5). **ஆபேலுக்குப் பதிலாக ஆதாமுக்கு பிறந்த சேத் -ஐ** (ஆதி 4:25) **கண்டவன் நோவா; அப்போது அவனுக்கு வயது 14 தான். தேவனோடு நடந்த பின்னர் கானாமற் போன ஏனோக்கையும் அவன் நன்கு அறிவான். அவன்தானே வரும் நியாயத்தீர்ப்பைக் கூறி அறிவிக்கும் வண்ணம் தன் மகனுக்கு மெத்தூசலா என்று பெயரிட்டான் (ஆதி 5:21) மெத்தூசலா என்பதற்கு "இவன் மரிக்கும் போது அது வரும்" என்று அர்த்தம்.**

தன்னையும், மனைவி பிள்ளைகளையும் அவர்கள் காத்துக்கொண்டதற்கும் கர்த்தருடைய கட்டளைகளைக் காத்துக்கொண்டதற்கும் காரணம் **"கர்த்தருடைய கண்களில் கிருபை பெற்றதினால்"** அல்லவோ (ஆதி 6:8). கர்த்தருடைய கிருபையைப்

பெற்றக் குடும்பமாக மாற கணவனும் மனைவியும் தேவபக்தியுள்ளவர்களாய் நடக்க வேண்டிய அவசியத்தினை உணருவோம். **மிருகங்களும் பறவைகளும் தாங்களாகவே புறப்பட்டு, ஜோடி ஜோடியாக இவர்களைத் தேடி வந்ததே.** மனிதர் செய்ய மறுத்ததனை, மிருகங்களும் பறவைகளும் செய்து தண்டனையிலிருந்து தப்பிக்கொண்டனவே. இன்று பூமியில் விதைப்பும், அறுப்பும், சீதனமும், உஷ்ணமும், கோடை காலமும், மாரிகாலமும், பகலும், இரவும், ஒழியாமல் இருப்பதற்குக் காரணமான இந்த பக்தியுள்ள குடும்பம் வாழ்க.



# ஆபிரகாம் - சாராள்

# 18. ஆபத்துக்கஞ்சாத ஆதிப்பெற்றோர்

இணைந்து போகும் பெண், தைரியசாலியாக இருந்தால் தானே அந்நிய தேசத்திலும் ஆபத்திற்குப் பயப்படாமல் செயலாற்ற முடியும் (1பேது 3:6). உன் தகப்பனாகிய ஆபிரகாமையும் சாராளையும் நோக்கிப்பாருங்கள் என்று நீதியைப் பின்பற்ற வாஞ்சிக்கிறவர்களையும், கர்த்தரைத் தேடுகிறவர்களையும், ஆண்டவரே அறை கூவி அழைக்கிறாரே (ஏசா 51:1,2). தன் தகப்பனுக்கு பிறந்த ஒன்று விட்ட தாயின் மகளைத் தான் ஆபிரகாம் திருமணம் செய்திருந்தான் அந்த நாட்களில் அது பொதுவாகக் காணப்பட்டது (ஆதி 20:12). **தன் புருஷன் உயிரோடு இருப்பதுதான் தனக்கு மேன்மை என்பதனை அறிந்திருந்த சாராள், தனக்கு ஆபத்து என்றாலும் பார்வோனின் அரண்மனையிலும், அபிமெலேக்கின் அரண்மனையிலும் தேவ பாதுகாப்பையே தன் பாதுகாப்பாகக் கொண்டு நுழைகிறதை நாம் காண்கிறோம்;** அதினிமித்தம் தேவனும் பெலனற்ற ஆபிரகாமுக்கு உதவும் வண்ணம் (ஆதி 12:17;ஆதி 20:17) இறங்கி வந்து கிரியை நடப்பிக்கிறார்.

"எப்படியாவது தன் வீடு கட்டப்படட்டும்" என்ற நோக்கில்தான் சாராள் ஆகாரை ஆபிரகாமுக்கு தருகிறாள் (ஆதி 16:2); ஆயினும், ஆபிரகாமும் இணைந்தே இதில் செவி கொடுக்கிறான். குடும்பச் சமாதானமே முக்கியம் என்பதில் ஆபிரகாம் கவனமாயிருக்கிறான் (ஆதி 16:6;ஆதி 21:14). "தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின் வரும் தன் வீட்டாருக்கும் நீதி நியாயத்தைச் செய்யக் கற்றுக்கொடுக்க கவனமாயிருப்பான்" என்று தேவனே நம்பக்கூடியவன் ஆபிரகாம் (ஆதி 18:19).

**எத்தனை வயதாயினும், எவ்வளவு வேலையாட்கள் வீட்டில் இருந்தாலும், (ஆதி 18:12 ஆதி 14:14) தன் புருஷன் கொடுக்கும் பெரிய வேலையை (மூன்று படி மாவை அப்பமாக்கும் அவசரவேலையை) மனதார ஏற்றுக்கொண்டு செய்து முடிக்கும் கீழ்ப்படிதல் கொண்டவள் சாராள்** (ஆதி 18:6). வீட்டில் அடிமைப் பெண் ஆகார் உண்டு என்பதனை நினைவு கூறுங்கால், கணவனுக்குக் கீழ்ப்படியக் கற்றுக்கொண்டிருந்த சாராளுக்கு அடிமையை இந்த சமயத்தில் உபயோகிக்கத்தானும் விருப்பமில்லை.


கர்த்தர் உமக்குத் தரினமாகிக் காண்பிக்கிற தேசத்தின் ஆபத்துக்களை நானும் சந்திக்க ஆயத்தம் என்பதே சாராளின் ஒப்புக்கொடுத்தல் (ஆதி 12:4,5). வயதானபோதும் அழகு குறையாதவள் அவள்; வெளியில் மாத்திரம் அல்ல உள்ளேயும் தான்.

அயல்நாடுகளில் சுற்றித்திரியும் போது தேவன் தன்னைக் காக்க வல்லவர் என்பதனை விசுவாச வீரனாகிய ஆபிரகாம் நம்ப முடியவில்லை; **அந்த நேரத்தில் அவன் விசுவாசம் பெலவீனப்படுகிறது. தனக்குப்பிள்ளைத் தரமுடியும் என்கிற காரியத்தில் சாராள் விசுவாசத்தில் பெலவீனப்பட்டதினால்தான் ஆகாரை ஆபிரகாமுக்குத் தருகிறாள். ஆக மொத்தத்தில் ஒருவர் பெலவீனப்படும் போது மற்றவரின் பெலன் அதனைப் பூர்த்தி செய்வதனை இந்த தேவ பக்தியுள்ள தம்பதியில் நாம் காணமுடியும் அப்படித்தானே, அதற்காகத்தானே தேவன் தம்பதியரை இணைத்திருக்கிறார்; ஒருவர் குறைவில் மற்றவரின் நிறைவு பூர்த்தி செய்யப் போதுமானது அல்லவா!**

ஆபிரகாம் தன் மகன் ஈசாக்கைப் பலி செலுத்தச் சென்றபோது, அவர்களைத் தேடி சாராள் எபிரோனுக்கு வந்தாள் என்றும், வந்த இடத்தில் சாத்தான் கொடுத்த ஒரு தரிசனத்தில் தன் மகன் பலியாக்கப்பட்டுவிட்டான் என்பதனைக் கேட்ட அவள் வேதனையுற்று, பின்னர் தேவ தரிசனத்தினால் தேற்றப்பட்டு சந்தோஷத்தின் மிகுதியினால் இறந்து போனாள் என்றும் பாரம்பரியக் கதைகள் கூறுகிறது (யாசேர் புத்தகத்தில் காணப்படுகிறது. யோசு 10:13; 2 சாமு 1:18). எனவேதான், ஆபிரகாம் அவள் இறந்தபோது கேள்விப்பட்டு எபிரோனுக்கு வந்தான் (ஆதி 23:2); இதனை வேதம் நமக்குச்சொல்லவில்லை. ஆயினும், மனம் பொருந்தி அந்நிய தேசத்தில் வாழ்ந்த இந்த தம்பதியர் பூமிக்கு ஆசீர்வாதத்தினைக் கொண்டு வந்தவர்கள்.

**விக்கிரகக்காரர்களாக இருந்தவர்கள், ஜீவ தேவனைக் கண்டு கொண்டது மல்லாமல், அவரைத் தொழுது சேவிக்கும் பெரும் கூட்டத்தை எழுப்பக் காரணமாக அமைந்துவிட்டனரே.** தேவனுடைய இஸ்ரவேலர் என்றும் (கலா 6:16), ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம்தானே கிறிஸ்து இயேசுவினால் புறஜாதியான நமக்கு உண்டாயிற்று (கலா 3:14,29), சுயாதீனமுள்ளவளுக்கே நாம் பிள்ளைகள் என்று சாராளையும் உள்ளடக்கிற்று சுவிசேஷம் (கலா 4:31).

இப்படி அறியாத நம்மையும் ஆசீர்வாதத்திற்கு உரியவர்களாக மாற்ற தேவன் பயன்படுத்திய இவர்களின் குடும்ப வாழ்வும் ஆவிக்குரிய வாழ்வும் நமக்கு எத்தனை சவால் (எபி 11:11,18). இந்த இணைந்த வாழ்வும், ஒருவர் குறைவில் ஒருவரின் உதவியும் நம்மை உந்திச் செல்லும் சக்தியாக மாறுவதாக. கீழ்படிய தயங்கவில்லை, சோதிக்கப்படும் போது தேவனுக்குப் பயந்தவர்கள் என்பதனை விளங்கப்பண்ணினார்கள் (ஆதி 22:12,18) இவர்கள். இதுவே நம்மையும் இயக்குவிக்கட்டும்.



# ஈசாக்கு - ரெபேக்காள்

# 19. கர்த்தரை மையமாகக் கொண்ட கணவன் மனைவி

திருமணங்களில் ஈசாக்கு ரெபெக்காளைப் போல வாழுங்கள் என்று வாழ்த்துவது வழக்கம். தேவபக்தியுள்ளவன் அவன் (ஆதி 24:63); தியான வாழ்க்கையைக் கொண்டதினால் தேவன் தனக்குச் சரியான மனைவியைத் தருவார் என்ற உறுதியான நம்பிக்கை இருந்ததோடு, தேவ வழி நடத்துதலை நன்றாகப் புரிந்து கொண்டு ரெபெக்காளை எலியேசர் கூட்டி வந்த போது மனைவியாக ஏற்றுக்கொண்டு நேசித்தவன் (ஆதி 24:67). தேவ தரிசனமும் வழி நடத்துதலும் இவனுக்குக் கிடைத்ததுமாத்திரமல்லாமல் (ஆதி 26:2-5; 24,25), **கர்த்தர் அவனோடு இருப்பதனை சத்துருக்களும் அயலகத்தாரும் கண்கூடாகக் கண்டனர்.** மற்றவர்களிடத்தில் சண்டையிடத் தெரியாதவன், உபத்திரவம் தருபவர்களை தவிர்ப்பவன் (ஆதி 26:18-22), ஆனால் ருசியான சாப்பாடு என்றால் உயிர். தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கொண்ட ஆசீர்வாதம் கூற வல்லவன் (ஆதி 27:7), மருமக்களால் அவதிப்பட்டவன் (ஆதி 26:35), மனைவியை வயதானக்காலத்திலும் நேசிக்கக் கற்றுக்கொண்டவன் (ஆதி 26:8), அலட்டாத வாழ்வு. தன்மனைவிக்கு 20 ஆண்டுகள் குழந்தைகள் இல்லாதிருந்த போதிலும் வேறொரு மனைவியைத் தேடாமல், தேவனிடத்தில் விண்ணப்பம் செய்து பதில் பெற்றுக்கொண்டவன் (ஆதி 25:21).

**மனைவி ரெபெக்காளோ பயங்கர சுறுசுறுப்பானவள்,** தனக்குத் தண்ணீர் கேட்ட எலியேசரிடத்தில் "உமக்கும் உம் ஒட்டகங்களுக்கும் தண்ணீர் வார்ப்பேன்" என்று கூறி பதிலுக்குக் கூடக் காத்திராமல் ஒட்டகங்களுக்குத் தண்ணீர் வார்த்தவள். ஒரு ஒட்டகம் 100 லிட்டர் தண்ணீர் குடிக்க வல்லது எலியேசரின் 10 ஒட்டகங்களுக்கு அதாவது 1000 லிட்டர் **தண்ணீர் மொண்டு ஊற்றுகிறாள். அவளுக்கு அப்போது வயது 13 அல்லது 14 என்றுதான் பாரம்பரியம் கூறுகிறது** (ஆதி 24:20).

கர்த்தரின் வழி நடத்துதலை எலியேசர் சொல்லக் கேட்டபோது, அவரோடு புறப்பட அறியாத தேசத்திற்குப் போக ஆயத்தமாகிவிட்டாள். கர்த்தரால் வந்தது என்ற வார்த்தைகளே இவளை இயக்கி விடுகிறது (ஆதி 24:50). கணவன் துக்கத்தை எளிதாக மாற்றி விடுவாள் அவள் (ஆதி 24:67).

கர்ப்பத்தில் போராட்டம் வந்தபோது கர்த்தரிடத்தில் விசாரிக்கவே போகிறாள். வளர்ந்தது விக்கிரக ஆராதனை செய்வோர் மத்தியில். ஆனால் வாழ்க்கையில் கர்த்தரைக் கண்டு கொண்டபோது அவரையே சார்ந்திருக்கக் கற்றுக்கொண்டாள் (ஆதி 25:22).

இரண்டு பேருக்கும் இரண்டு பிள்ளைகளின் மேலும் தனித்தனிப் பிரியம். அதினிமித்தம் சில வேளைகளில் பாரபட்சம் காட்டுகின்றனர் (ஆதி 25:28; ஆதி 27:6-11). நன்றாக மேக்அப் செய்யக் கற்றிருந்தாள் ரெபெக்காள். சமையலில் கில்லாடி, கணவனை வசீகரிக்க அவளுக்குத் தெரியும் (ஆதி 27:9), குறுக்கு வழியில் வந்த ஆசீர்வாதம் நீண்ட நாட்களுக்குச் செல்லாது என்பதை சீக்கிரத்திலேயே கண்டுகொண்ட ரெபெக்காள் உடனடியாக அதற்கு நிவாரணத்தையும் செய்யத் துரிதமாக செயல்படுகிறாள் (ஆதி 27:42-2). யாக்கோபு அழைத்து வந்த குடும்பத்தினரை இவள் கண்டதாகத் தெரியவில்லை; ஆனால் நிம்மதியிருந்தது. அவளின் அவசரம் பிரியமான மகனைப் பிரிய நேரிட்டது; அது துக்கத்தை வரவழைத்துத் தந்திருக்க வேண்டும். **ஆனால் தேவனை நம்பி அவனை அனுப்பித்தருகிறாள்** (ஆதி 28:3,7).

“சகோதரியே நீ கோடாகோடியாய்ப் பெருகுவாயாக. உன் சந்ததியார் தங்கள் பகைஞருடைய வாசல்களைச் சுதந்தரித்து கொள்வார்களாக” என்று தேவனையும் தேவ திட்டத்தினையும் சரியாக புரிந்துகொள்ளாத லாபான் குடும்பத்தார் வாழ்த்தின வாழ்த்தினை வழிவழியாய் வாய்க்கப்பண்ணின கர்த்தரைப் பற்றிக்கொண்டவர்கள் இந்தத் தம்பதியர் (ஆதி 25:21,22). பின்னர் மோசேயும் கூட “உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களைப் பெருகப்பண்ணினார். இதோ இந்நாளில் நீங்கள் வானத்து நட்சத்திரங்களைப்போலத் திரளாயிருக்கிறீர்கள். நீங்கள் இப்போது இருக்கிறதைப் பார்க்கிலும் ஆயிரமடங்கு அதிகமாகும்படி உங்கள் பிதாக்களின் தேவனாகிய கர்த்தர் உங்களுக்குச் சொல்லியபடியே உங்களை ஆசீர்வதிப்பாராக” என்றான் (உபா 1:10,11). **கர்த்தரில் நம்பிக்கை வைத்து அவரையே சார்ந்து வாழ்வோரின் வாழ்க்கை சமாதானமே. போராட்டங்கள் இல்லை, புரிந்து கொள்ளுதல் மிகுதியாய் உண்டு.**



மோசே - சிப்போராள்

# 20. ஆபத்தை முன்னறிந்த ஆத்துக்காரி

தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு தெளிவாகப் பாதுக்காக்கப்பட்ட மோசே அவசரப்பட்டதின் நிமித்தம் தன் உயிரைக்காக்க ஓட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. ஆபிரகாமிடத்தில் ஆண்டவர் 400 வருடங்கள் என்று கூறினார் (ஆதி 15:13). ஆனால், அவனோ அதனை 430 வருடங்களாக மாற்றிவிட்டான் (யாத் 12:41). இதனை 100 வருடங்கள் 130 வருடங்கள் என்று கணக்கிடுகிறவர்களும் உண்டு; கலா 3:17-ஐ மையமாகக் கொண்டு பேசும் இவர்கள், அது இரண்டு வாக்குத்தத்தத்திற்கும் இடைப்பட்ட வருடங்கள் என்று வாதிடுவார்கள். காரியங்கள் எப்படி இருந்தாலும் 30 ஆண்டுகள் மோசே ஓடிப்போனபடியினால் ஏற்பட்ட தாமதமே.

ஆனால், தேவன் விடுவதாக இல்லை, தேடிவந்தார்; மோசேயின் வறட்டு வாக்குவாதங்கள் ஆண்டவரின் அழைப்பின் முன் நிற்க முடியவில்லை (யாத் 3:4-10, 11,13; 4:1,10); தேவனே அதில் வெற்றிப் பெற்றார். இடைப்பட்ட காலத்திலும் நடந்த திருமணத்தில் இணைக்கப்பட்டிருந்த அமைதிப்பெண் சிப்போராள் (யாத் 2:21), தங்களுக்கு உதவினவனை தகப்பன் உத்தரவு இல்லாமல் வீட்டிற்குக் கூட வரவழைக்க விரும்பாத பெண்களைக் கொண்டக் குடும்பத்தில் பிறந்த மீதியான் தேசத்து ஆசாரியனின் மகள் அவள். மோசே தன்னோடு தங்கியிருந்த நாட்களில் தன் குமாரத்திகளில் ஒருத்தியை அவன் மனைவியாகக் கொடுத்தான். மோசே அவளைத் திருமணம் செய்தபோது மீதியான் தேசத்தில் 37 வருடங்கள் சேவித்து விட்டான் எனவும், மோசே எகிப்துக்குத் திரும்பிபோகும் போது அவனுடைய இரண்டு குமாரர்களும் மிகவும் சிறியவர்கள் என்று நம்புவோரும் உண்டு. அங்கே அவனுக்கு “கெர்சோம்” மற்றும் “எலியேசர்” என்ற இரண்டு குமாரர்கள் பிறந்திருந்தார்கள் (யாத் 18:3,4). சின்னஞ்சிறுக் குடும்பமாய், சமாதானமாய் திருப்தியோடு வாழ்ந்த அவனைத்தான் தேவன் திரும்பவும் அழைத்து ஜனத்தின் வேதனையின் துயர் தீர்க்க தீவிரம் காட்டும் கர்த்தர் (யாத் 3:7) இழுத்து வருகிறார். இணக்கத்தோடு தான் மோசே பிரயாணத்தினை மேற்கொள்கிறான் (யாத் 4:18)

ஆனால், “வழியில் தங்கும் இடத்தில் கர்த்தர் அவனுக்கு எதிர்ப்பட்டு அவனைக் கொல்லப் பார்த்தார்” என்ற அதிர்ச்சித் தரும் வசனத்தை வாசிக்க நேரிடுகிறது (யாத் 4:24).

ஊழியத்திற்குப் புறப்பட்டவன், தான் செய்ய வேண்டிய கடமைதனைச் செய்யாதவனாய், தான் விருத்தசேதனம் செய்திருக்கவேண்டிய மகனை (உடன்படிக்கைக்கு உட்படுத்தியிருக்க வேண்டும்) உதாசீனப்படுத்தியவனைத் தேவன் இடை மறிக்கிறார் (யாத் 4:26). இதுவரை அப்படிப்பட்டக் காரியத்தினைச் செய்ய மீதியான் தேசத்துப் பெண் ஒருவேளை ஒத்துக்கொள்ளாமல் இருந்திருக்கலாம். (மீதியானியர்கள் தேவனை ஆராதிக்கிறவர்களாய் இருந்த போதிலும் தேவ உடன்படிக்கைக்கு உட்பட்டதில்லை என்பதனை கவனியுங்கள்; அவர்கள் ஆபிரகாமின் மறுமனையாட்டியாகிய கேத்தூராளின் வழியில் வந்தவர்கள் தான் ஆதி25:2,4). இதைப்பற்றி மோசேயின் கவனக்குறைவோ, சிப்போராளின் உடன்பாடு இல்லா நிலையோ தடுத்திருக்கலாம்.

ஆனால், மோசேயை தேவன் கொல்லப் பார்க்கும் சூழ்நிலையில் சிப்போராளுக்கு அது தெளிவாகத் தெரிகிறது. உடனே அவள் தன் மகனின் நுனித்தோலை எடுத்து எறிந்து மோசேயைக் காப்பாற்றுகிறாள் (யாத் 4:25,26). அவளுடைய இந்த சமயோகித புத்தி அவனை மாத்திரமல்ல தேவ நோக்கத்தினை நிறைவேற்ற போதுமானதாக உள்ளது.

இந்த சம்பவத்தினால் மிகவும் பயந்து போய்விட்ட மோசே, சிப்போராளை தன் தகப்பன் வீட்டிற்குத் திரும்ப அனுப்பினான் என்று நம்புகிறவர்கள் உண்டு (யாத் 18:1,2). இல்லை, எகிப்திலே தேவ கோபம் இறங்கினபோது அந்த ஆபத்து தன் குடும்பத்தினரை பார்வோன் குறிவைக்க ஏதுவாகிவிடலாம் என்று கூறி அவர்களை திரும்ப அனுப்பிவைத்தான் என நம்புவோரும் உண்டு. எப்படியாயினும் உரிய நேரத்தில் வரும் ஆபத்தினைக் காணும் கண்களை கொண்ட இந்த சிப்போராளைப் போல கணவனைப் பேணி பாதுகாக்க இணைந்து போகும் பெண்களை நம்முடைய உள்ளம் நாடுகிறது. ஊழிய அழைப்புப் பெற்றவனை அனைத்து விதத்திலும் அரவணைக்கவும், இணைந்து இணங்கி கருத்து வேற்றுமைகளை மாற்றிக் கொள்ளவும் அறிந்திருக்க வேண்டும்; அனுசரித்துப் போகவும் கற்றிருக்கவேண்டும். அது குடும்பத்தையும் தேவ நோக்கத்தினையும் காக்குமல்லவா!



# ரூத் - போவாஸ்

## 21. பிந்தின நற்குணமும் நிறைவான பலனும்

ஆகாது என்று தள்ளப்பட்டக் குடும்ப பின்னணியைக் கொண்ட ரூத் (ரூத்1:4; உபா 23:3), எதிர்காலத்தைக் கையாளும் தேவனை உறுதியாய் பிடித்துக் கொண்டபடியினாலும் (ரூத் 2:12; 1:16), தனக்கு நம்புவதற்கு ஏதுவற்ற சூழ்நிலை காணப்பட்ட போதிலும் (ரூத் 1:2,12), உடன் இருந்தவள் முன்னோடியாய் வேறுவழியைக் காண்பித்த போதிலும் (ரூத் 1:15), விதவை என்பதனை மறந்து அநேகரை தொடர்ச்சியாக சாகக் கொடுத்தக் குடும்பத்தின் சூழ்நிலை (ரூத் 1:5) அவளை அசைக்கவில்லை.

கர்த்தரின் அடைக்கலத்தில் வந்து விட்ட அவளை கர்த்தர் நடத்தின விதமே அலாதி. தற்செயலான சம்பவங்களும் சாதகமாகிறது (ரூத் 2:2,22;3:2)

அன்பும் பாசமும் நிறைந்தவனும், வேலைக்காரரையும் பேணிப் பாதுகாக்கிறவனும் (ரூத் 2:13,14), அனாதைகளை ஆதரிக்கும் நல் உள்ளம் கொண்டவனுமாகிய போவாஸ் (ரூத் 2:14), தேவ நியமம் கட்டளைகளை நன்கு அறிந்தவன் மாத்திரம் அல்ல கைக்கொள்ளவும் கவனமாயிருப்பவன் (ரூத் 3:12-13; 4:4). அவசரமாய் தனக்கு ஓர் சந்தர்ப்பம் கிடைத்துவிட்டது. தன் காலடியில் தன்னைத் தேடி தானாகவே ஒரு பெண் இருண்ட வேளையில் கிடைத்திருக்கிறாள். உபயோகித்துக்கொள்வோமே என்ற நினைவற்றவன் (ரூத் 3:7,8,13). கூடவே அவளுக்குக் கெட்ட பெயர் வரக்கூடாது. தன்னுடைய சாட்சி கெட்டுவிடக்கூடாது என்பதில் அத்தனை சிரத்தைக் கொண்டவன் அவன் (ரூத் 3:14). தனக்கு ஒப்புவிக்கப்பட்டப் பொறுப்பை அல்லது தான் எடுத்துக்கொண்ட கடமையை செய்துமுடிப்பதில் அவன் கவனம் செலுத்துபவன் (ரூத் 3:18).

பெரியவர்களைக் கலந்தாலோசிக்காமல், சம்மதம் பெறாமல், வழி முறைகளை மீறாமல், நேர்த்தியாய் செய்து முடிக்கவேண்டும் என்ற தீவிரம் உண்டு (ரூத் 4:1-10). இப்படி இரண்டு தேவனை நம்பும் சாட்சிதனைக் காத்துக்கொள்ளத் துடிப்போரை இணைத்த தேவன். அவர்கள் மூலம் இயேசு இந்த உலகில் வெளிப்படக் காரணமான ஒரு குடும்பத்தைத் தந்து விட்டாரே. பெத்லேகேமில் புகழ்ச்சிப் பெற்றவராக மாற்றி விட்டாரே (ரூத் 4:11); கர்த்தரும் ஆண் மகனைத் தந்துவிட்டாரே (ரூத் 4:12).

சாட்சியைக் காப்பாற்றிக்கொள்ளக் கவனம் கொண்டோர் தேவை. சந்தர்ப்பங்களைத் தனக்குச் சாதகமாக்கிக் கொள்வதை விட சந்தர்ப்பங்களை தரும் தேவனை அண்டி வாழ்வது எத்தனை பாக்கியம்.

ரூத் வாலிபர்களையோ, ஐசுவரியவான்களையோ பின்பற்றிப் போகவில்லை; மாறாக வேதம் காட்டும் மனிதன், சுதந்தரவாளியைத்தான் நாடுகிறாள். அதுவே அவளுடைய பிந்திய நற்குணம் பெரிதாவதற்கு வழி வகுக்கிறது. முந்திய நற்குணம் (ரூத் 1:11) அபலைகளாக்கப்பட்டவர்களுக்கு ஆதரவாக மாற்றியிருந்தது. பிந்திய நற்குணம் வேதத்தின் வழியைப் பின்பற்றியதினால் உண்டானது.

அப்படியே போவாசும் வாய்ப்பு கிடைத்துவிட்டது என்றும் என் காலடியில் அழகான பெண் என்றும் எண்ணி அவள் பின் சென்றுவிடவில்லை. மாறாக வேத பிரமாணத்தின்படி எனக்கு முன் ஒரு சுதந்தரவாளி உண்டு. அவன் மாட்டேன் என்றால், நான் உதவுகிறேன் என்று வேதத்தின் வழியைத்தான் பின்பற்றுகிறான். வேத வசனத்திற்கேற்ப நடந்தால் அது பூமிக்கு ஆசீர்வாதத்தினைக் கொண்டுவரக்கூடிய குடும்பங்களை உலகுக்குத் தந்துவிடுமே.



எல்கானா - அன்னாள்

## 22. அந்தகார வேளையில் ஒளியேற்றின தம்பதியர்

ஆராதனை உண்டு ஆனால் ஆண்டவரின் வார்த்தை அங்கு இல்லை. ஆசாரியர்கள் உண்டு ஆனால் அவர்கள் ஆண்டவரை அறிந்தவர்கள் அல்ல (1சாமு 3:1 ; 1சாமு 2:12). ஆண்டவருக்கென தருபவற்றை தன்னைக் கொழுக்க வைக்கவே உபயோகிக்கும், தேவனை அசட்டைப் பண்ணும் தேவ பயமற்ற குடும்பமே ஆலயத்தில் பிரதானமாகக் காணப்பட்ட அந்த நாட்களில் (1சாமு 2:29,30;1:9), ஆண்டவரின் வார்த்தையை ஜனத்திற்கு சொல்லக்கூடியவனும் (1சாமு 3:20), உண்மையான ஆசாரியனும் (1சாமு 2:35), பட்டணத்தில் வாழும் பெரியவரும் தேவ மனிதனும் என்று அழைக்கப்பட்டவனும் (1சாமு 9:6), யாருடைய எருதையும், கழுதையையும் அநியாயஞ் செய்யவேண்டி அபகரித்துக் கொள்ளாமல், பரிதானம் வாங்கி கண்சாடையாய் இராமல் இடுக்கண் செய்யாத நல்ல நியாயாதிபதி என்று பெயரெடுத்தவனும் (1சாமு 12:3,4), ஜனத்தின் மீறுதலுக்காக தேவ சந்நிதியில் நின்று முறையிட்டு ஜெபிக்காவிட்டால் அது பாவம் என்று கருதுகிறவனும் (1சாமு 12:23), நன்மையும் செம்மையுமான வழியை ஜனங்களுக்குப் போதிப்பவனும் (1சாமு 12:23), கர்த்தரின் தண்டனையை பெற்ற தலைவனுக்காகத் துக்கித்து புலம்பித் தவிப்பவனும் (1சாமு 16:1), இஸ்ரவேலில் இராஜாக்களை அபிஷேகம் செய்ய அதிகாரம் பெற்றவனுமாகிய சாமுவேலை தேவன் தோன்றப்பண்ணத் தெரிந்துக் கொள்ளப்பட்ட பாத்திரங்கள் அன்னாள் எல்க்கானா என்ற அன்பு தம்பதியரே.

மனைவியை அழவிடாமல் பார்த்துக் கொள்வதில் எல்க்கானா செலுத்திய கவனம் தான் எத்தனை (1சாமு 1:5,23). குடும்பத்தினரைத் தேவனைத் தேட வைத்துவிட வேண்டும் என்பதில் சிரத்தைக் கொண்டவன் (1சாமு 1:3;21). தேவனுக்குப் பலியை மாத்திரமல்ல (பலி செலுத்துவது பாவ நிவாரணத்திற்கு) ஆனால், பொருத்தனையையும் செலுத்த அவன் தவறுவதில்லை. "நீ தேவனுக்கு ஸ்தோத்திர பலியிட்டு உன்னதமானவருக்கு உன் பொருத்தனைகளைச் செலுத்தி ஆபத்துக்காலத்தில் அவரை நோக்கிக் கூப்பிட்டால் அவர் உன்னை விடுவிப்பார். நீயும் தேவனை மகிமைப்படுத்துவாய்" (சங் 50:14,15) என்பதனை நன்கு அறிந்து செயல்படுபவன் அவன்.

அன்னாளும் அழுது ஜெபிக்கக் கற்றுக் கொண்டவள் (1சாமு

1:10). **தன்னை அலட்சியமாய் நினைக்கும் ஆசாரியனையும் ஆண்டவனே என்று அழைப்பவள் (1சாமு 1:14,15). தன்னை இப்படி தவறாக எடை போடுபவர் ஜனத்தில் பிரதானமாய், ஆசாரியராய், நியாயாதிபதியாய் வைக்கப்பட்டுள்ளாரே என்று அவள் எண்ணவில்லை (1சாமு 1:9,13). தன்மேல் இல்லாதக் குற்றத்தைப் போடுகிறாரே என்று முறுமுறுக்கவுமில்லை.** மாறாகத் தன் நிலையை எடுத்துக் கூறி தன் மனக்கிலேசத்தினைச் சொல்லி தான் தன் இருதயத்தை தேவ சமூகத்தில் ஊற்றிவிட்டதனை விளக்குகிறாள் (1சாமு 1:15,16); விளைவு வாக்குத்தத்தம் ஒன்றையும் ஆசீர்வாதத்தினையும் பெற்றுக் கொண்டாள்; **தேவ பக்தியின் அடையாளங்கள் அல்லவா! இவைகள்.**

ஏற்றவேளையில் இருவரும் பிள்ளையைக் கொண்டு வந்து அர்ப்பணிக்கும் காட்சி கண் கொள்ளாதது (1சாமு 1:25). இதனைக் கண்ட ஏலியும் அவர்கள் இருவரையும் ஆசீர்வதித்து கர்த்தருக்கென்று ஒப்புக்கொடுத்ததற்குப் பதிலாக அநேக ஆசீர்வாதங்களைத்தருவார் எனக் கூறியதனை தேவனும் கவனமாகக் கேட்டு மீண்டும் ஐந்து பிள்ளைகளைத் தந்து ஆசீர்வதிக்கிறார் (1 சாமு 3:20,21).

இந்தத் தம்பதியின் குடும்ப வாழ்வினைக் கொஞ்சம் கவனித்துப் பாருங்கள். எத்தனை ஒருமனம், உடன்பாடு கர்த்தரை முன்னிட்டே சகலத்தையும் நடப்பிப்பவர் யாவரும் இப்படியேத்தானே செயல்படுவார்கள்.

தன்னை நடத்தவல்ல ஆசாரியர்களின் கெட்ட வாழ்க்கை. சாட்சியற்ற ஜீவியம், கர்த்தருக்குப் பயப்படாத கிரியைகள் இவர்களைப் பாதிக்கவேயில்லை. இன்றைக்கு அநேகர் ஆலயத்தில் ஆண்டவரைத் தேடாமல் ஆசாரியர்களைப் (ஊழியரையே) பார்த்து இடறியிருக்கிறார்கள் என்றால் மிகையாகாது; அதனால் பெற வேண்டிய ஆசீர்வாதங்களையும் இழந்திருக்கின்றனர். இயேசு இதனைக் குறிக்கும் போது வேதபாரகரும் பரிசேயரும் மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். ஆகையால் "நீங்கள் கைக் கொள்ளும்படி அவர்கள் உங்களுக்குச் சொல்லுகிற யாவையும் கைக்கொண்டு செய்யுங்கள். அவர்கள் செய்கையின்படியோ செய்யாதிருங்கள். ஏனெனில், அவர்கள் சொல்கிறார்கள் சொல்லியும் செய்யாதிருக்கிறார்கள்" என்றார் (மத் 23:2,3). கவனமாக செயல்படுவோம் ஆண்டவருக்கேற்ற உண்மை ஊழியரை உலகத்துக்குப் பெற்றுத் தருவோம்.




ஏசாயா

# 23. அழுகும் உலகில் ஆச்சரியக் குடும்பம்

வேசியாய் போய்விட்ட உண்மை நகரம் அது. நீதிபுரமாயிருந்து இப்போது கொலைபாதகரால் நிறைந்துள்ளது. திராட்சைத் தோட்டத்திலுள்ள ஒரு குச்சி போலவும், வெள்ளரித் தோட்டத்திலுள்ள ஒரு குடிசையைப் போல மாற்றப்பட்டுள்ளது (ஏசா 1:21,8). அதில் வாசம்பண்ணும் குடிகள் ஒவ்வொருவனும் பரிதானத்தை விரும்பி, கைக்கூலியை நாடித்திரிந்து, திக்கற்றவர்களை வதைக்கிறவர்கள் (ஏசா 1:21), முரடராய் திருடராய்ப் போனவர்கள் அதின் அதிகாரிகள். **இது தான் சீயோன் (தேவன் வாசம் பண்ணும் நகரம் என்று அழைக்கப்பட்ட நகரம்)** சியோனிலிருந்து வேதம் வெளிப்படும் என்றுக் கூறப்பட்டது (ஏசா 2:3). ஆனால் அதின் குமாரத்திகள் (Product) அகந்தையாய், கழுத்தை நெறித்து நடந்து, கண்களால் மருட்டிப் பார்த்து, ஒய்யாரமாய் நடந்து, தங்கள் கால்களில் சிலம்பு ஒலிக்கத் திரிபவர்கள் (ஏசா 3:16). பிள்ளைகளே தன் வீட்டாரை விரட்டி ஆள்பவர்கள் (ஏசா 3:4;12). **ஒரு புருஷனை ஏழு பெண்கள் திருமணம் செய்யத் தீவிரம் காட்டுபவர்கள்** (ஏசா 4:1). கசப்பான கனிகளையே தரும் அந்த சீயோனில் (ஏசா 5:2), தாங்கள் மாத்திரம் தேசத்தின் நடுவில் வாசமாயிருக்கும் படி மற்றவர்களுக்கு இடமில்லாமல் போகும்மட்டும் வீட்டோடு வீட்டையும் வயலோடு வயலையும் கூட்டுகிற சுயநலக்காரர்கள் நிறைந்த பட்டணத்தில் (ஏசா 5:5) கண்ணிருந்தும் காணமுடியாமலும், காதிருந்தும் கேட்கக் கூடாமலும், குணப்படக் கூடாதபடி கொழுத்த இருதயமுள்ள ஜனம் நிறைந்த இந்த பட்டணத்தில் (ஏசா 6:10) **ஆச்சரியமான ஒரு குடும்பம்.**

**தீர்க்கன் ஏசாயாவின் குடும்பம் அது. அவனும் கர்த்தர் அவனுக்குத் தந்த பிள்ளைகளும் கர்த்தரின் பலத்தினால் இந்த பட்டணத்தில் அடையாளங்களும் அற்புதங்களுமாக காட்சியளிக்கின்றனர்** (ஏசா 8:18). இதனை உயிர்வாழும் செய்திகள் (living Messages) என்று (message) எனும் ஆங்கில வேதாகமம் மொழி பெயர்க்கிறது. **நம் குடும்பங்கள் இப்படி மாற வேண்டிய அவசியம் உண்டல்லவா! கணவனும் மனைவியும் இப்படிப்பட்ட சூழ்நிலையிலும் தங்கள் பிள்ளைகளை "உலகிற்குச் செய்தியாக" மாற்றிவிட்டார்களே.** வெற்றி வாழ்க்கை வாழவும் சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்தில் குடியிருக்கும் குடும்பங்கள் தேவ பலனைப் பெற்றுக்கொள்ளாதா?



# எசேக்கியேல்

## 24. அடையாளமாவதற்கு விட்டுத்தந்த அன்பு மனைவி

"திருமணம் செய்து கொள்ளாதே" இது தீர்க்கன் எரேமியாவுக்குக் கர்த்தரின் கட்டளை (ஏரே 16:2). வேசியை சோரம்போன ஒருவளை மனைவியாகச் சேர்த்துக்கொள், இது தீர்க்கன் ஓசியாவுக்கு தேவ ஆலோசனை. "உன் கண்களுக்கு விருப்பமானவளை ஒரே அடியினாலே உன்னைவிட்டு எடுத்துக்கொள்ளுவேன், ஆனாலும் நீ புலம்பாலும் அழாமலும் கண்ணீர் விடாமலும் இருப்பாயாக. அலறாமல் பெருமூச்சுவிடு, இழவு கொண்டாட வேண்டாம், உன் பாகையை உன் தலையிலே கட்டி உன் பாதரட்சைகளை உன் பாதங்களில் தொடுத்துக்கொள். உன் தாடியை மூடாமலும் துக்கங்கொண்டாடுபவர்களின் அப்பத்தைப் புசியாமலும் இருக்கக்கடவாய்" இது தீர்க்கத்தரிசி எசேக்கியேலுக்கு உண்டான தேவ செய்தி (எசே 24:15-17). தீர்க்கதரிசியாய் இருப்பது அந்த நாட்களில் அத்தனைக் கடினம். இன்று தீர்க்கர்கள் பெருத்துப் போய்விட்டார்கள். ஏனெனில் ஜனத்தின் குறைகளைச் சொல்ல அன்றைய தீர்க்கர்களே அடையாளங்கள்.

இரவிலே தேவன் சொன்ன செய்தியை எசேக்கியேல் விடியற்காலையில் ஜனங்களுக்குச் சொல்ல, அன்று சாயங்காலத்தில் மனைவி இறந்து போகிறாள் (எசே 24:18). அப்படி என்னுடைய குடும்ப வாழ்க்கை உங்களுக்கு அடையாளம் என்கிறான் (எசே 24:24). அன்று அவனுடைய மனநிலையும் அவனுடைய விருப்பமான, இன்பமான மனைவியின் மனநிலையும் எப்படி இருந்திருக்கும் என்று யோசியுங்கள்.

முதல் நான்கு அதிகாரங்களிலேயே எசேக்கியேல் 24 முறை தேவனுக்கு முழுமையாகக் கீழ்படிகிறான். பைத்தியக்காரனைப் போல செங்கலை எடுத்துவைத்து, இருப்புச் சட்டி வாங்கிவைத்து, சிறு பிள்ளையைப் போல விளையாடச் சொல்கிறார் அவனும் அப்படியே செய்கிறான் (எசே 4:1-3). 350 நாட்கள் இடது பக்கமாக ஒருக்களித்தும், 40 நாட்கள் வலது பக்கமாக ஒருகளித்தும் படுக்கச் செய்கிறார் (எசே 4:6). மனித வரட்டியினால் அப்பஞ் செய்து சாப்பிடச் சொல்கிறார் (எசே 4:12). அப்படிக் கீழ்ப்படிய ஒப்புக்கொடுத்த அவனுக்கு இவ்வளவு பெரிய அடி, அதுவும் அடையாளமாவதற்கேதுவாக. கூடவே அழகான மனைவியை ஒரே அடியில் ஆண்டவர் எடுத்துக் கொள்வாரா.

தன் அழைப்பைப் புரிந்துகொண்டவனுக்கு, அப்படியே அர்ப்பணித்த மனைவி இல்லாமல் இருந்திருந்தால் இது நடந்திருக்க வாய்ப்பேயில்லையே. என் உயிர் அல்ல உங்கள் அழைப்பே முக்கியம் நாம் பிரிவது முக்கியமில்லை. தேசம் தேவனுக்கு நேராய் திரும்பிவிடவேண்டும் என்பதே நம்முடைய ஒப்புக்கொடுத்தல் என்று கூறிய மனைவியாகத் தானே அவள் இருந்திருக்க வேண்டும். இல்லையேல் அவள் ஓடிப் போயிருப்பாளே! இத்தனை ஆழமாகப் புரிந்து கொண்ட வாழ்க்கை காணக் கிடைக்குமோ?



சகரியா - எலிசபெத்து

# 25. அடைக்கலப் பட்டணமான ஆசாரியக் குடும்பம்

400 வருடங்கள் தீர்க்கத்தரிசிகளின் மூலமாய் தேவ ஜனமாம் இஸ்ரவேலுக்கு ஒரு செய்தியும் இல்லை. **தேவசத்தத்தினை கேட்க மறுத்தவர்களுக்கு இது பாடமாக அமையட்டும் என்று கூறி தேவன் அமைதியாகிவிட்டாரோ?** ஆயினும் ஆங்காங்கே தேவ பிள்ளைகளுக்குத் தேவன் செய்தி தந்து கொண்டிருந்தார். கர்த்தருடைய கிறிஸ்துவை காணுமுன்னே நீ மரணமடையமாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே சிமியோன் என்ற நீதியும் தேவ பக்தியும் உள்ளவனுக்குச் சொல்லப்பட்டிருந்தது (லூக் 2:25,26). அதே வகையில் கர்த்தரிட்ட கற்பனைகளின்படியேயும், நியாயங்களின் படியேயும் குற்றமல்லாதவர்களாய் நடந்து தேவனுக்கு முன்பாக நீதியுள்ள சகரியா என்னும் ஆசாரியனுக்குச் செய்தி ஒன்றை தேவன் தருகிறார் (லூக் 1:5,6,13). யோவான் ஸ்நானனின் பிறப்பைக் குறித்து தேவன் அவனுக்கு முன்னறிவித்து அதனை நிறைவேறுங்காலத்தில் அவனும் "தேவன் உடன் படிக்கையை நினைவு கூர்ந்தார்" என களிப்போடு (லூக் 1:70) தீர்க்கதரிசனம் உரைக்கிறான். **அவனும் அவன் மனைவியும் ஏன் கர்ப்பத்தில் பிள்ளையும் பரிசுத்த ஆவியினால் நிறைந்துக் காணப்படும் இக்குடும்பம் எத்தனை தேவ பக்தியாய் வாழ்ந்தது என்பதற்கு அடையாளம்** (லூக் 1:41, 67).

**வயதான காலத்திலும், தங்களுடைய வேண்டுதலின் ஜெபம் நீண்ட நாட்களாக கேட்கப்படாமல் இருந்த ஜெபத்திற்கு விடை கிடைக்கும் என்ற நம்பிக்கை அற்றுப் போன போதிலும், தேவபக்தி இவர்களிலிருந்து குறையவுமில்லை, இல்லற உறவு மங்கவும் இல்லை** (லூக் 1:13, 18 – 25).

ஐந்துமாதம் அளவும் அவர் மனைவி எலிசபெத்தினால் வெளியே எட்டிப் பார்க்கவும் கூடாத அளவு வெட்கம். இந்த வயதிலும் கர்ப்பந்தரித்தாயா? என்ற கேள்வி (லூக் 1:36).

அவர்களின் பக்தியுள்ள வாழ்க்கை மரியாளுக்கும் அடைக்கலப் பட்டணமாக அமைகிறது. அவர்கள் வீட்டில் தங்கியிருந்த போதுதான் மரியாள் கர்ப்பவதியான காரியம் வெளிப்பட்டது. ஆறாம் மாதம் வந்து ஒன்பதாம் மாதம் சென்று விட்டாளே. எலிசபெத்தின் பேர்காலத்திற்கு மரியாள் அங்கே உதவி இருக்கவில்லை. **ஆகையால்தான் சமுதாயம் இயேசுவை ஒருநாளும்**

வேசித்தனத்தினால் பிறந்த பிள்ளை என்று சொல்லக் கூடாமல் இருந்தது. சகரியா வீட்டில் பாதுகாப்பாக இருந்த மரியாளை தேவன் சந்தித்திருக்கிறார் என்பதனை மக்கள் நம்ப ஏதுவாயிற்று. உங்களின் தேவப்பக்தியுள்ள வாழ்க்கை அநேகருடைய வாக்குத்தத்தத்தினை நிறைவேற்றவும் களங்கமில்லாமல் பார்த்துக்கொள்ளவும் ஏதுவாகட்டும்.



மரியாள் - யோசேப்பு

# 26. ஏழைகள் ஆனால் ஏக இரட்சகரின் பெட்டகம்

உலகிற்கு இரட்சகரைத் தர, ஒரு கன்னியையும் அவளைப் பேணிப் பாதுகாக்கவும் உலகரட்சகர் உலகில் உதிக்கும் வரை தன் ஆசைகளை உள்ளடக்கி அவளை அறியாதிருந்து ஆனால் அவளைப் பத்திரமாகப் பாதுகாக்கவும் (மத் 1:25), பிதா தன் குமாரனை உலகில் அனுப்பும் போது உலகின் ஆபத்துகளிலிருந்து அவரைப் பாதுகாக்க (மத் 2:13-15), பிள்ளைப் பிறந்த போது ஒரு ஆட்டுக்குட்டியைத்தானும் பலியிடத் திராணியற்றதினால் இரண்டு காட்டுப் புறாக்களைப் பலியிட்டவனும் (லூக் 2:22-25), சொந்த ஊரில் சேர்த்துக்கொள்வார் இல்லாதிருந்தவனுமாகிய (லூக் 2:4-7) யோசேப்பு என்னும் ஏழை மனிதனையும் அவனுக்கு நியமிக்கப்பட்டிருந்த ஏழை மரியாளையும் ஆண்டவர் நம்பினார்.

ஏழையாய், ஏற்றுக்கொள்வார் இல்லாதிருந்தால் நேர்மையாக, நீதிமானாக வாழ்வது கூடாதக் காரியம் என்பதற்கு சாவுமணி அடிக்கிறான் யோசேப்பு. ஆகூர் என்ற மனிதன் அப்படித்தானே ஜெபித்தான் "தரித்திரப்படுகிறதினால் திருடி என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதப்படிக்கு என் படியை எனக்கு அளந்து போஷித்தருளும்" (நீதி 30:8,9). எகிப்துக்கு பிரயாணப்பட வேண்டும் என்பதனை முன்னறிந்த தேவன், போவதற்குரிய செலவுகளை சாஸ்திரிகள் மூலம் முன்னமே தீர்த்து வைத்துவிட்டாரே (மத் 1:11). பொன்னை காணிக்கையாய் கொண்டு வந்தவர்கள் முன்னிலையில் படுத்துக் கிடந்த தேவ குமாரனுக்குத் (இராஜா என்றழைக்கப்பட்டவர்) தர யோசிக்கவில்லையே (மத் 1:2); அது தேவன் செய்யும் அற்புதம் அல்லவா! நீதிமானாய் வாழ்ந்த யோசேப்பு யாரையும் அவமானப்படுத்தவும், தனக்கு அதற்குரியத் தகுதியும் உரிமையும் இருந்தாலும், துணிய மாட்டான் (மத் 1:19).

பயந்த சுபாவம் உள்ள அவன் (மத் 1:22) தேவன் தன்னை நம்பித் தந்த பொறுப்பை நிறைவேற்ற எந்த ஆபத்தினையும் சந்திக்கத் தயார் (மத் 2:14). தேவனும் அவனுடைய பெலவீனத்தினை அறிந்து நேரடியாகவோ, தேவதூதன் மூலமாகவோ பேசாமல் சொப்பனத்திலேயே பேசுகிறார் (மத் 1:20; 2:13; 2:19). மரியாளிடத்தில் காபிரியேலை அனுப்பினவருக்கு யோசேப்பினிடத்தில் அனுப்ப எத்தனை நேரம் பிடித்திருக்கும். கூடவே திருமணத்திற்குமுன் மரியாளிடம் செய்தி சொன்னவர்,

திருமணத்திற்குப் பின் அத்தனை செய்தியையும், நடக்க வேண்டிய வழிகளையும், செயல்படவேண்டிய செயல் திட்டங்களையும் குடும்பத்தலைவன் தேவ பக்தியுள்ளவனாய் இருந்ததினால் யோசேப்புக்கே அறிவிக்கிறார்.

காரியங்களையும் இரகசியங்களையும் தன் இருதயத்தில் வைத்து சிந்திக்கக் கற்றிருந்தாள் அமைதி பெண் மரியாள் (லூக் 2:19,51). தேவ பிள்ளையை வளர்க்கும் பெரிய பொறுப்புத் தனக்குத் தரப்பட்டுள்ளதை அவள் ஒரு போதும் மறந்ததில்லை (லூக் 2:48). அதனால் உண்டாகப் போகும் பாடுகளையும் கஷ்டங்களையும் இருதய வேதனைகளையும் அவள் அறிந்திருந்த போதிலும், (உன் ஆத்துமாவையும் ஒரு பட்டயம் ஊடுருவிப்போகும் (லூக் 2:33) என்று தீர்க்கதரிசனம்) கலங்கவில்லை.

இயேசு அநேக நேரங்களில் "ஸ்திரியே உனக்கும் எனக்கும் என்ன?" (யோவா 2:4). தாயும் சகோதரரும் பேசவேண்டும் எனக் கேட்டபோது "என் பிதாவின் சித்தம் செய்கிறவனே தாயும் சகோதரருமாயிருக்கிறார்கள்" என்று முகத்தில் அறைந்தாற் போல் உத்தரவு சொன்ன போதும், தாயாகிய மரியாளை அது பாதிக்கவில்லை (மத் 12:46-50). கூடவே யோசேப்பும் "என் பிதாவுக்கு அடுத்தவைகள்" என்று வானத்தினை நோக்கி மற்றவர்கள் மத்தியில் நீர் என் தகப்பன் அல்ல என்று கூறுவது போல (லூக் 2:48-49) பேசின போது பாதிக்கப்படவில்லை.

எந்தநோக்கத்திற்காக தேவன் எங்களை இணைத்தாரோ அதனை நிறைவேற்றுவதில் நாங்கள் கருத்தாய் இருப்போமே ஒழிய, பாராட்டுதல் பெறுவதனை நோக்கமாகக் கொண்டு வாழ எங்களை ஒப்புக்கொடுக்கவில்லை எனக் கூறுகிறார்களோ இந்த தேவ பக்தியுடைய தேவன் நம்பின அன்பு தம்பதியர். தம்பட்டம் அடித்து வாழப் படித்த இந்த பாழ் உலகில் இப்படி வாழ்வோரைத் தேடித் தான் தேவன் அலைகிறாரோ பெரிய பொறுப்புகளைத் தர (2 நாளா 16:9).

தாழ்மையுள்ளவர்களை உயர்த்தும் தேவனையும், இருதயத்தில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடிக்கும் ஆண்டவரையும் அறிந்தவர்களுக்கு (லூக் 1:51,52) இது அதிசயமல்ல!

தேவன் நம்மை நம்பி, ஒப்புக்கொடுக்க வல்ல பத்திரமான,

பாக்கியமான குடும்பமாக மாறுவோம். தேவ பக்தி நிறை வாழ்வு இதனை சாதித்திட வல்லமையுள்ளது ஒப்புக்கொடுத்தலில் சிகரம் அது.



# ஆக்கில்லா - பிரிஸ்கில்லா

# 27. பிரிக்க முடியாத பிரயாணிகளான குடும்பம்

அகதிகளாக்கப்பட்டு அலைந்து திரிந்தவர்கள் ஆக்கில்லா பிரிஸ்கில்லா தம்பதியர். பொந்து தேசத்தான் என்று (கப்பதோக்கியாவுக்கும் கருங்கடலுக்கும் இடைபட்ட தேசம், இன்றைய துருக்கி) அழைக்கப்பட்ட இந்த யூதன் பிழைப்பைத் தேடி ரோமாபுரிக்குச் செல்ல, பின்னர் ரோம அரசாங்கத்தின் கெடுபிடியினால் கொரிந்து பட்டணம் (கிரேக்க நாடு) வந்து சேர்ந்தான். கூடாரம் செய்து விற்கிறதொழில் அவனைக் கூடார வாசியாகவும் மாற்றி விட்டது. **மாறி மாறி தேசங்களை மாற்றவேண்டியவர்கள் வாழ்வில் ஏற்படும் தாக்கத்தின் மத்தியில் குடும்ப வாழ்க்கையைக் கவனிப்பதும் இணைந்து வாழ்வதும் அதுவும் கொரிந்து போன்ற துன்மார்க்க பட்டணத்தில் (1 கொரி 5:11; அப் 18:17) மிகவும் கடினம்.** ஆனால் தேவ நோக்கம் அவர்களைக் குறித்தது வேறே அல்லவா!

வேலையினிமித்தம் பவுலை சந்திக்க நேரிட்டு பின்னர் பவுலோடு சேர்ந்து கர்த்தரின் பணியில் தீவிரமாய், ஈடுபட்ட இந்த தம்பதியர் துடிப்பானவர்கள் (அப் 18:3,26; ரோமர் 16:3-5; 1 கொரி 16:19). **அப்பொல்லோவை அப்போஸ்தலனாகக் உதவியது இவர்களின் தீவிரமான தேவ பணியே** (அப் 18:26; 1கொரி 3:4-5). போட்டிப்போட்டுக் கொண்டு தேவனுக்காக வைராக்கியம் காண்பித்த இந்த தம்பதியரின் பெயர் முன்னுக்கு பின் வருவதற்கு காரணம் இதுவே (ஆக்கில்லா பிரிஸ்கில்லா என்றும் பின்னர் பிரிஸ்கில்லா ஆக்கில்லா என்றும் வருகிறது. (1 கொரி 16:19; 2 தீமோ 4:19; ரோமர் 16:3; அப் 18:26)

**வாழ்க்கையில் எங்கு சென்றாலும், எத்தேசத்திலிருந்தும் எந்த சூழ்நிலையிலிருந்தும் வீட்டிலே சபையை ஸ்தாபித்து விட்டார்களே** (ரோமர் 16:3-5; 1கொரி 16:19; 2தீமோ 4:19). **ரோமாபுரியில், கொரிந்துவில், பின்னர் எபேசுவில் என அவர்கள் செயல்படுவதினைக் காணமுடியும்.** ஆண்டவரின் ஊழியங்களுக்காக பிராணனையும் கொடுக்க ஆயத்தமானவர்கள் இவர்கள்.

ஒருவரை ஒருவர் நன்றாகப் புரிந்து கொண்டு வேலையையும் செய்து கொண்டு, ஆண்டவரின் பணியிலும் தீவிரமாய் ஈடுபட்ட இந்த குடும்பம் இணைபிரியாமல் வாழ்ந்ததனைத்தான் அவர்கள் பெயர்கள் பிரிக்கப்படாமல் சொல்வதனைக் காண்பிக்கிறது. இருவருக்கும்

தரப்பட்டிருந்த கிருபைகளை இணைந்து இயக்குவித்து ஆவியானவரின் கையில் அவர்கள் பலத்த ஆயுதமாகமாறிப் போனது மாத்திரமல்லாமல், அவர்களைக் குறித்து அனைத்து தேச சபைகளும் ஆர்ப்பரிக்கவும், நன்றி செலுத்தவும் காரணமாகி மாறிவிட்டனரே இந்த தேவனுக்கு பயப்படும் குடும்பத்தார்.



# குணசாலியான மனைவி

# 28. தேவ பயமிக்கவர் தேசத்தில் ஆசீர்வாத சின்னங்கள்

சுறு சுறுப்பான மனைவி கண்ணும் கருத்தாய் தன் வீட்டுக் காரியத்தைக் கவனிப்பவள் (நீதி 31:27); புருஷனை நேர்த்தியாய் தேசத்து மூப்பர்களோடே நியாயஸ்தலத்தில் பேர் பெற்றவனாகக் காணலாம். புருஷனும் பிள்ளைகளும் உன்னைப் போல நாங்கள் யாரையும் கண்டதில்லை என்று புகழப்பட்ட அவள் (நீதி 31:23,28,29), வீட்டாரின் எதிர்கால ஆபத்துக்களை அறிந்து செயல்படுகிறவள் (வச 21). புருஷனுடைய சம்பத்தின் பெருக்கத்திற்கு அவளே காரணம் (வச 11,16). சிறுமையானவர்களுக்கும் ஏழைகளுக்கும் அவள் ஒரு பெலன் (வச 20).

வீட்டுக் காரியங்களை நீ கவனித்துக் கொள் நான் வெளியின் காரியங்களைப் பார்த்து கொள்ளுகிறேன் என்ற புரிந்து கொள்ளுதலோடு செயல்படும் இந்தத் தம்பதியினருக்குப் பிறந்த பிள்ளைகள் தாய் தகப்பனைப் புகழக் கற்றிருந்தனர். காயம்பட்டவர்கள் இவளைத் தேடி வருவர் (வச 26). அலங்காரம் செய்து கொள்வதில் அவளுக்கு அதிக கவனம் இல்லை, ஏனெனில் சௌந்தரியம் வஞ்சனையுள்ளது என்றும் அழகும் வீண் என்றும் அவள் அறிவாள் (வச 30). ஒரு பெண்ணே மற்ற பெண்ணைப் பாராட்டுவது எளிதில் நடப்பதில்லை, ஆனால் இங்கேயோ வித்தியாசம் (நீதி 31:31).

குணசாலியான அவளுடைய செய்கைகள் குடும்பத்தைக் கட்டுவிப்பதற்கும், காத்துக் கொள்கிறதற்கும், கருவியாய் மாற்றுவதற்கும், கஷ்டப்படுவோருக்கும் நியாயம் இழந்தோருக்கும் களைப்பை மாற்றுபவர்களாக செயல்படும் இந்த தம்பதியர் வாழ்வுக்கு முக்கிய மூல காரணம் கர்த்தருக்கு பயப்பட்டதே (நீதி 31:30). சங் 128 சொல்கிறது கர்த்தருக்குப் பயந்து அவர் வழியில் நடக்கிறவன் எவனோ.... அவன் மனைவி வீட்டோரங்களில் கனிதரும் திராட்சைச் செடி.... அவன் பிள்ளைகள் அழகு சேர்த்து பெலன் சேர்க்கும் ஒலிவமரக்கன்றுகள்.

கர்த்தருக்குப்பயப்படும் தம்பதியர் தங்கள் குடும்பத்திற்கும், வாழும் பட்டணத்திற்கும், வாழும் தேசத்திற்கும் செழிப்பையும் மற்றும் சமாதானத்தையும் கொண்டு வருபவர்கள் அல்லவா! (சங் 128:5,6). அப்படிப்பட்டவர்களாக நம்மை தேவன் நிறுத்தட்டும் "சேர்ந்த இரண்டும்" செழிப்புண்டாக்கவே.

# அத்தியாயம் 4

## பக்தியற்ற பாதகக் குடும்பங்கள்



# எலிமெலேக்கு - நகோமி

# 29. கர்த்தரைக் குறை கூறும் கணவன் மனைவி

“தேவனே என் ராஜா” என்று தான் பெயர் (எலிமெலேக்கு). ஆனால், அவன் தேவனை இராஜாவாகக்கொண்டதில்லை. இனிமையானவள் (நகோமி) என்று தான் பெயர் ஆனால் தன் வாழ்வை நரகமாக்கிக் கொண்டவள். கசப்பினால் நிறையப் பெற்ற வாழ்க்கை அவள் வாழ்க்கை (ரூத் 1:20). **தானே அப்படிப்பட்ட வாழ்க்கையைத் தெரிந்து கொண்டு தேவன் மேல் பழியைப் போடுகிறவள் அவள்.** அவர் என்னை வெறுமையாக்கினார், அவர் என்னை சிறுமைப்படுத்தினார், அவர் என்னை கிலேசப்படுத்தினார் என்பதே அவள் தேவனைக் குறித்து சொல்லும் சாட்சி (ரூத் 1:21). கர்த்தருடைய கை தங்களுக்கு விரோதமாய் இருந்தக் காரணத்தினை உணர்ந்து மனம் திரும்பக் கூடாதபடி கண்கள் அடைக்கப்பட்டிருந்தது (ரூத் 1:13). **தாங்கள் தேவ வார்த்தைக்குக் கீழ்ப்படியாததினால்தான் என்பதனை உணராமல் “கர்த்தர்” நாமத்தினை உச்சரிக்க அவள் தவற மாட்டாள்** (ரூத் 1:6,8,9,13,21).

‘‘இன்னும் நீங்கள் எனக்குச் செவி கொடாதிருந்தால் உங்கள் பாவங்களினிமித்தம் ஏழத்தனையாய் உங்களைத் தண்டித்து, உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப் போலவும் உங்கள் பூமியை வெண்கலத்தைப்போலவும் ஆக்குவேன். உங்கள் தேசம் தன் பலனையும் தேசத்தின் மரங்கள் தங்கள் கனிகளையும் கொடுக்க மாட்டாது’’ (லேவி 26:18) என்றவரின் எச்சரிப்பைக் கவனிக்காமல், மோவாபுக்குக் குடி பெயர்ந்து, “கர்த்தர் அன்னிய ஜாதியாரான ஸ்திரீகளண்டைக்கு பிரவேசிக்கலாகாது’’ (1 இரா 11:1,2) என்று கூறியிருந்த போதிலும், மோவாபின் குமாரத்திகள் இஸ்ரவேலரை பாகால் பேயோரைப் பின் பற்றச் செய்து இஸ்ரவேலின் மத்தியில் பெரிய அழிவைக் கொண்டு வந்தனை அறிந்திருந்த போதிலும் (எண் 25:1-9), தன்னுடைய மகன்களுக்கு அவர்களிலேயே பெண் எடுத்தாள் நகோமி (ரூத் 1:5). மூன்று விதவைகளை உண்டாக்கி ஆண்களை இழந்து தவித்த அவள் அப்போதும் கர்த்தரையே குறை சொன்னாள் (ரூத் 1:13). **தங்களின் தெய்வங்களிடத்தில் திரும்பப் போகவே அவர்களை ஏவுகிறாள்** (ரூத் 1:15). **வயது சென்றபின்னரும் அவளுக்கு கர்த்தரிடம் திரும்ப விருப்பமில்லை** (ரூத் 1:12).

**ரூத்தின் விடாப்பிடியான தீர்மானமும் பொறுமையும்,**

**காத்திருத்தலும், கீழ்படிதலும், ஐசுவரியத்தினை நாடாமல், வாலிபரைப் பின் தொடராமல் தேவ நியாயத்தின் படி உரியவனை மாத்திரம் நாடின அவளின் நற்குணமே நகோமியைப் பின்னதாக திருப்பிற்று** (ரூத் 3:10; 2:20); ஏழு குமாரனை பார்க்கிலும் அருமையானவள் அவள் (ரூத் 4:15).


மற்றவர்களை பழைய வாழ்க்கைக்கு திருப்பி அனுப்புவதில் தான் நகோமியின் கவனம் இருந்தது (ரூத் 1:11). பஞ்சம் என்றால் அல்லது குறைவு என்றால் அனைத்தையும் மறந்துவிடும் இந்த தேவ பயமற்ற தம்பதியர், தேவ ஜனத்தை விட்டு அந்நியர்களிடத்தில் சென்றவர்கள் அந்நியர்களைத் திருப்பவேண்டியவர்கள். ஆனால், அந்நியர்களைக் கொண்டுதான் தேவன் இவர்களைத் திருப்புகிறார்.

சந்தான சேதமும் விதவையிருப்பும் ஆகிய இவ்விரண்டும் உனக்கு சடிதியாய் ஒரே நாளில் வரும் (ஏசா 47:9), உன் அறிவு (மோவாபில் ஆகாரம் உண்டு என்ற அறிவு) உன்னைக் கெடுத்தது (ஏசா 47:10) என்ற ஏசாயா தீர்க்கனின் புலம்பல் இவளைக் குறித்தது தானோ! கர்த்தரின் கை தன்னை மீண்டும் தள்ளிக்கொண்டு வந்து தாவீதின் இராஜா வம்சத்தில் பங்கடைய உன்னை வைத்துவிட்டதனை ருசித்தாயோ?

**கர்த்தரைக் குற்றப்படுத்தின ஆதாம் (ஆதி 3:12) விட்டுச் சென்ற ஜென்ம சுபாவம் இவளை எவ்வளவாய் ஆட்கொண்டிருக்கிறது பாருங்கள்.** “உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று கூறி பற்றிக் கொண்டாளே ரூத் (ரூத் 1:16), ரூத் முன்னால் கூட இவள் பேச்சு சரியில்லையே (1:20,21)

இவருடைய பிள்ளைகள் மக்லோன் (பெலவீனன்) என்றும், கிலியோன் (சாப்பாட்டு ராமன்) என்றும் அழைக்கப்படக் காரணமானவள் இவளே. **கர்த்தரைக் காண்பிக்காத பெற்றோராய் வாழ்ந்து என்ன பிரயோஜனம்?**

ரூத் என்ற ஆண்டவர் அன்பு கொண்ட அந்நிய பெண்ணால் தேவகிருபை மாத்திரம் இந்த தேவ பயமற்ற பக்தியற்றக் குடும்பத்தில் கிரியை செய்யாதிருக்குமானால், இவர்கள் பெயர் முற்றிலும் அழிந்திருக்குமே. ஜாக்கிரதை!



# அனனியா - சப்பீராள்

# 30. ஒருமனப்பட்டு அழிந்த ஒரு அன்பு தம்பதி

**விசுவாசிகளின் திரளான கூட்டத்தில் ஒருமனம். ஆனால், பெயர் பெற வேண்டும், பாராட்டப்பட வேண்டும் என்று நினைத்து அதற்கு தங்களை ஒப்புக்கொடுத்து, மாய்மாலம் பண்ணி, சாத்தானால் இருதயம் நிரப்ப விட்டுக் கொடுத்து ஒருமனப்பட்ட அனனியா சப்பீராள் ஓர் எச்சரிக்கைச் சின்னம்** (அப் 4:32; 5:3, 5,9). எல்லார் மேலும் தேவ கிருபை பெருகியிருந்த நேரத்தில், உண்மையான ஒருவனாகிலும் தன்னுடையது என்று உரிமை பாராட்டாத நேரத்தில், ஒருவனுக்கு ஒன்றும் குறைவில்லாத போது, இந்த தம்பதியரின் தன்னயமும் பொய் வார்த்தைகளும், வெளிப்படையான துர் எண்ணமும் ஆதி சபைக்கு ஒரு அதிரடியைத் தந்து விட்டது (அப் 4:22,23,25). **எத்தனை தம்பதியர் இன்று பேர் புகழ் கிடைக்கும் என்பதில் ஈடுபட்டு, ஒருமனப்பட்டு தேவனுக்கு ஒப்புக்கொடுத்த வாழ்விலிருந்து திரும்பிக் கெட்டுப்போனார்கள். வஞ்சனையும் மாய்மாலமும் கொண்ட வாழ்வு, பரிசுத்த ஆவியானவரிடத்திலும் பரிசுத்தவான்களிடத்திலும் பொய் சொல்ல ஏவிவிடும் என்பதும் அதனுடைய பேரழிவு எத்தனைப்பெரியது என்பதினையும் உணர்ந்தால் எத்தனை நலமாயிருக்கும்.**

பர்னபாசைப் பாராட்டியவர்கள் தங்களையும் பாராட்ட வேண்டும் என்ற நோக்கமே மேலோங்கி நின்ற இந்த தம்பதியரின் ஒருமனம், ஒரே நாளில் மரணத்தைத்தான் கொண்டு வந்தது (அப் 4:36,37). **ஆதி சபையை அளவு கோலாக நியமிக்க நினைத்த தேவ ஆவியானவரின் தீவிரம்** இந்த சம்பவத்தில் தெளிவாகிறது. ஆனால் ஆதி நிலை திரும்ப நினைக்கும் இன்றைய சபைகளில் தேவ மக்களின், விசேஷமாக தம்பதியரின் மனநிலை எப்படி இருக்க வேண்டும் என்பது முக்கியமல்லவா! **பரிசுத்த வாழ்க்கைக்கும், தேவனுக்குப் பிரியமான வாழ்வுக்கும் வழி நடத்தாத ஒரு மனம் ஏற்பட்டு என்ன பயன்!** அவர்களுக்கு மனம் திரும்ப போதிய தருணம் கொடுக்கப்படவில்லையே என்று வாதிடுவர் உண்டு. ஆனால், இது ஒரு திட்டமிட்ட கூடிப் பேசி எடுத்த முடிவு மாத்திரமல்ல, மாறாக வஞ்சித்து ஒரு நல்ல காட்சியை மற்றவர்கள் முன் காட்ட நினைத்தக் காரியம். அவர்களுடைய இருதயம் ஏற்கனவே பிரிக்கப்பட்ட நிலையில் இருந்தது என்பதும் ஒட்டக் கூடாதபடி மாற்றப்பட்டிருந்தது என்பதனையும் கவனியுங்கள். **ஒருமனப்படுவோம் தேவ காரியங்களில் அவர் நம் மேல் பிரியமாயிருக்கட்டும்.**



# ஆகாப் - யேசபேல்

# 31. தேசத்தைக் கெடுக்க போதும் இணையும் இருவர்

ஆண்டவர் உயர்த்தியிருந்தார் ராஜாவாக. ஆட்களைத் தந்திருந்தார், அருட்பணியாளர்களையும், தீர்க்கர்களையும் தேவனுக்குப் பயன்படுகிற உடன் வேலையாட்களையும் தந்திருந்தார். தேவனைத் தேடும் நண்பர்களைத் தந்திருந்தார். ஆனால், பாவத்தோடே பாவத்தினைக் கூட்டும் வாழ்க்கையை மேற்கொள்ளத் தக்கதாக தன் மனைவிக்கு அதுவும் பில்லிசூனியக்காரியும் வேசித்தனங்களால் நிறைந்தவளும், தேவனையும் தேவ ஊழியர்களையும் முழுமையாய் பகைக்கிறவளுமாகிய அவளுடைய தாக்கம் கணவனையும் இராஜ்யத்தையும் மூப்பர்களையும் ஆட்டிப்படைத்தது. இதுவே ஆகாப் யேசபேலின் கதை.

அவ்வப்போது தீர்க்கத்தரிசிகளை அனுப்பித் தருகிறார் 1இரா17:1ல் எலியா, 1இரா 20:13,22ல் ஒரு தீர்க்கதரிசி, 1இரா 20:28ல் மற்றொரு தேவனுடைய மனுஷன் 1இரா20:35ல் தீர்க்கதரிகளின் புத்திரரில் ஒருவன். இப்படி அடுக்கடுக்காக ஆண்டவரால் எச்சரிக்கப்பட்டு, வழி நடத்த ஆண்டவர் அனுப்பித் தந்தவர்களை அவனோ பகைஞனாகப் (1இரா 21:20) பார்த்தான். அவர்கள் வார்த்தை சலிப்பையும் விசனத்தையும் தந்தது (1இரா20:43). உண்மையைக் கூறும் மிகாயா போன்ற தீர்க்கதரிசிகளை அவன் வெறுத்தான் (1இரா22:8); வெளிப்படையாகவே “பகைக்கிறேன்” என்று கூறுகிறான். அப்படிப்பட்டவர்களை சிறையில் வைக்கவும், இடுக்கத்தின் அப்பத்தையும் தண்ணீரையும் சாப்பிடச் செய்கிறான் (1இரா 22:27).

**நல்ல தேவ பக்தியுள்ள நண்பர்கள் உண்டு** யோசபாத்தைப் போல (1இரா 22:3,4). அவர்கள் தேவனைத் தேட இவனை ஏவினார்கள் (1இராஜா 22:5,7,8).

தேசத்தின் குடிகள் மேல் வைக்கப்பட்ட அதிகாரிகள் சிறுவயதுமுதல் தேவனுக்குப் பயந்தவர்கள் (1இராஜா 18:3,12), கூடவே நூறு தீர்க்கதரிசிகளை ஒளித்து வைத்து நித்தமும் போஷித்து வந்தவன் (1இராஜா 18:4). ஆனால் இவை அனைத்தையும் அவன் உதறி விட்டு, விக்கிரக ஆராதனைக்குத் தன்னை விற்றுப்போட்டவனும், **தேவ பயமுள்ளவர்களைத் தன்னுடைய அதிகாரத்தினால் கொல்ல வல்ல யேசபேலை விவாகம்**

பண்ணி, அவள் வழியில், ஆலோசனையில் நடந்து தன்னையும் தேசத்தையும் கெடுத்துப் போட்டவன்.

மனைவியாகிய யேசபேல் புருஷனுக்குப் பிடித்த அனைத்தையும் செய்ய வேண்டும் அவன் மகிழ்ச்சியாயிருக்க வேண்டும் என்ற காரியத்தினை நிறைவேற்ற எந்தக் கோலத்தையும் எடுக்க ஆயத்தம். 1இரா21ம் அதிகாரம் சொல்லுகிறபடி, நாபோத்தின் திராட்சைத் தோட்டத்தினைக் கீரை கொல்லையாக்க விரும்பிய ஆகாபுக்கு உடந்தையாய் நின்று கர்த்தரின் பேரில் அவனைக் கல்லெறியவும், உபவாசம் என்ற பேரில் பொய்யை நிரூபிக்கவும், பட்டணத்தின் மூப்பர்களையும் பெரியவர்களையும் பொய்யர்களாய் மாற்றவும் பேலியாளின் மக்களுக்கு உற்சாகமூட்டவும் இவளால் ஆகும்.

இஸ்ரவேலில் சமாதானக் குறைவை உண்டாக்க அவளின் பில்லிசூனியத்தின் ஆளுகை (2இரா 9:22) இஸ்ரவேலைக் கலங்கப்பண்ண ஆகாபையும் ஏவிவிட்டிருந்தது (1இராஜா 18:18). ஆகாப் தன் மனைவிக்கு தன்னை விற்றுப்போட்டிருந்தான் (1இராஜா 21:25); அவள் தீமை செய்ய தூண்டிவிடுகிறவன்.

சில வேளைகளில் தேவ கோபத்தை நினைத்து துக்கித்து உபவாசம் பண்ணி தன்னைத் தாழ்த்துவான் (1இராஜா 2:27); தீர்க்கதரிசி எலியாவின் கட்டளைக்குக் கீழ்ப்படிவான் (1இரா18:20,41,42); கர்த்தரின் அக்கினி இறங்குவதனைக் கண்டு பிரமிப்பான். ஆயினும், அவையெல்லாம் யேசபேலைப் பார்த்த உடன் பறந்து போய் விடும். அவளின் வஞ்சக ஆவி அத்தனை வல்லமையுள்ளது; அது எலியாவையேக் கலங்கப்பண்ணிற்றே; சோர்ந்து போகச் செய்து விட்டது (1இராஜா 19:3,14).

இப்படிப்பட்ட தம்பதியரால் நடக்கும் காரியம் என்ன? தேசமும், மூப்பர்களும் சீரழிந்து பாவத்தின் மேல் பாவம் கூட்டப்பட்டது (1இரா 16:25,30-33). ஜனங்கள் சாபத்தின் வார்த்தைகளைக் கனம் பண்ணி, தண்டனையை அனுபவித்தாலும் அதிலிருந்து மனம் திரும்பக் கூடாதப்படி மாற்றப்பட்டிருந்தார்கள் (1இரா 16:34).

கர்த்தருக்குக் கோபமுண்டாக்கி (1இரா16:33) பின்னதாக தன்னையும் தன் வீட்டாரையும் தன் ஆதீனத்தில் தன் மக்களையும் சிறைப்பிடித்துக் கொடுக்க வழி வகுத்தார்கள். அவர்கள் இரத்தமும் நாய்களினால் நக்கப்பட்டு போயிற்று (1இரா 22:38; 2 இரா9:36).

பிள்ளைகள் ஒருவரும் தப்பப் கூடாமற் போயிற்று (2இரா10:17). கூடப் பந்தியிருந்தவர்களும் அழிக்கப்பட்டார்கள் (2 இரா10:25). தேவபக்தியற்ற இரண்டு பேர் இணைந்தால் நடக்கும் விபரீதங்கள் தான் எத்தனை.



# ஆதாம் - ஏவாள்

# 32. ஆதிப் பெற்றோர் தந்த அலங்கோலம்

அனைத்திற்கும் ஆரம்பம் ஆதிப்பெற்றோரில் காணப்பட்ட கீழ்படியாமையே (ரோமர் 5:19). ஆண்டவர் அழகாக உண்டாக்கி அனைத்தையும் கையளித்திருந்த போதிலும் (ஆதி 1:26-28), ஆண்டவரின் சொல்லைத் தட்டி, அற்ப சாத்தானின் வார்த்தைக்கு அவசரப்பட்டு கீழ்ப்படிந்து (ஆதி 2:17; 3:6), (அவர்தான் தினமும் குளிர்ச்சியான வேளையில் சந்திக்க வந்தாரே (ஆதி 3:8) அவரைக் கேட்டிருக்க வேண்டாமா? **வரும் சந்ததிக்கும் அந்த சுபாவத்தினை வைத்துப் போய்விட்டவர்கள் அவர்களே.**

ஏவாளுக்குத்தான் ஏன் இந்த அவசரம் கணவனை விட்டு விட்டுத்தானே அவள் புசித்தாள் (ஆதி 3:6), அவனையும் வஞ்சக வலையில் இழுத்துப்போட்டு விட்டாளே (11 கொரி 1:3). வஞ்சகனின் தந்திரம் இவளை எத்தனையாய் ஏமாற்றிவிட்டது. "என்னை சர்ப்பம் வஞ்சித்தது" (ஆதி 3:13) என்பதனை முன்னமே கண்டு கொள்ளக் கண்கள் இல்லையே. கணவனையும் விசாரிக்கலாம், கர்த்தரையும் வினவலாம் என்று ஏன் தெரியவில்லை.

ஆசையும், இச்சையும் இணையுங்கால் அது காரணம் கேட்பதில்லை (ஆதி 3:5,6). தாங்கள் ஏற்கனவே தேவ சாயலில் தான் உருவாக்கப்பட்டிருக்கிறோம் என்கிற அறிவே இல்லாமல், தேவர்களைப்போல மாறுவீர்கள் என்று கூறின அவனுடைய வார்த்தைகளை ஏன் அவள் புரிந்து கொள்ள முடியவில்லை (ஆதி 1:26; 3:5).

ஏற்ற துணையாக இருப்பாள் என்று தானே அவளை உருவாக்கித் தந்தார். (ஆதி 2:18,22) அவளோ ஆதாமை சுதந்தரத்தை விட்டு தேவன் வெளியே அனுப்பவேண்டிய நிலைக்கு தள்ளிவிட்டு விட்டாளே (ஆதி 3:22). பெற்ற பிள்ளையும் கொலைகாரனாக மாறி நிற்கிறானே. **உன் அவபக்தி, தேவனைக் கேட்டுக் காரியங்களை நீ செய்யக் கற்றுக் கொள்ளாததினால் அவனும் தேவனைக் கேட்டுப் பழகவில்லையே** (ஆதி 4:8).

தேவபக்தியற்றவர்களாய் கற்பனைகளைவிட்டு விட்டு வாழ்ந்த அநேகருடைய வாழ்க்கையைத் தியானித்தோமே, அதற்கெல்லாம் மூல காரணமாய் மாறிவிட்டனரே இந்த ஆண்டவரின் சாயலில் உண்டாக்கப்பட்ட ஆதி பெற்றோர்.

| தேவபக்தியற்றோர் | குணநலன்கள் | ஆதிபெற்றோரில் இருந்து வந்தவை |
|---|---|---|
| 1.லோத்தின் மனைவி | தரிசனம் அற்ற வாழ்வு | தேவன் தன்னை எப்படி உண்டாக்கினார் என்பதனை அறியாமை. |
| 2.மீகாள் (தாவீதின் மனைவி) | தேவக் காரியத்தினை அற்பமாய் எண்ணுதல் | சர்ப்பத்தின் வஞ்சனைக்கு விட்டுக்கொடுத்தல் |
| 3.லேயாள் (யாக்கோபின் மனைவி) | புருஷன் பைத்தியம் | உன் ஆசை புருஷனைப் பற்றியிருக்கும் (ஆதி 3:16) |
| 4.ராகேல் (யாக்கோபின் மனைவி) | பிள்ளைப் பைத்தியம் | சாபத்தினை கொண்டு வந்த வாழ்க்கை (ஆதி 3:17) |
| 5.சூலமித்தி (சாலமோனின் மனைவி) | தன் கதவை திறக்க மனமில்லாமை | தன்னை ஒளித்துக் கொள்ளுதல் (ஆதி 3:8 யோபு 31:33) |
| 6.ஆகார் (ஆபிரகாமின் மனைவி) | வெறுமை, ஏமாற்றம், பயம் | பயமும், ஏமாற்றமும் (ஆதி 3:10) |
| 7.பெனின்னாள் (எல்க்கானாவின் மனைவி) | இழப்பு | சீர்மிகு ஏதேன் தோட்டத்தின் இழப்பு (ஆதி 3:23) |
| 8.யோபுவின் மனைவி | சாத்தானின் கைப்பொம்மை | சாத்தானின் வஞ்சகத்திற்கு பலி (ஆதி 3:13) |
| 9.ஓசியாவின் மனைவி | அன்பை புரிந்து கொள்ளாத வாழ்க்கை | தேவ அன்பை விட்டு ஓட்டம் (1யோவா 5:3) |
| 10.நாபால் | தன்னயம், சுயபோகப் பிரியம் | ஏவாள் தனியே புசித்தது (ஆதி 3:6) |
| 11.சூனேமியாளின் கணவன் | தன் வேலையில் தான் கவனம் | ஆதாம் (அவனுக்குத் தெரியாது ஏவாளின் சர்ப்ப சிநேகம்) |
| 12.பினெகாஸ் (ஏலியின் மகன்) | தேவ மகிமை இழக்கக் காரணம் | தேவமகிமை இழந்து விட்ட நிலை (ரோமர் 3:23; ஆதி 2:25; 3:10) |
| 13.ஆகாஸ்வேரு இராஜா | கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையும் | கண்களுக்கு இன்பம் (1யோ 2:16; 3:6) |
| 14.யூதா | மாம்ச விருப்புக்கு ஒப்புக்கொடுத்தல் | இச்சிக்கப்படத்தக்க விருட்சத்தில் பங்கு (ஆதி 3:6) |
| 15.மனோவா | பயத்தின் உறைவிடம் | பயம் (ஆதி 3:10) |
| 16.பிலாத்து | நிதானிகத் தெரியாமை | ஏமாற்றத்திற்குக் காரணம் அலசி ஆராயாததே (ஆதி 3:5) |
| 17.நகோமி-எலிமெலேக்கு | தேவனையே குற்றம் சாட்டுதல் | தேவன் தந்தவளே காரணம (ஆதி 3:12) |
| 18.அனனியா-சப்பீராள் | துணிகரம் | சாயங்காலம் வரை காத்திருக்காமல் துணிகரம் (ஆதி 3:8,6) |
| 19.ஆகாப், யேசபேல் | மனைவிக்கு விற்றுப்போடுதல | மனைவிக்குக் கீழ்படிதல், கீழ்படியாமை (ஆதி 3:12) |

தேவனுடைய கிருபையை இழந்து விட இவர்கள் காண்பித்த கீழ்படியாமை எனும் பாவமும், தேவ பயமற்ற செய்கைகளும், பின்னர் அதனை மூடி மறைக்க எடுத்துக்கொள்ளப்பட்ட முயற்சியும், தலைமுறை தலைமுறையாய் தேவனை அண்டிக்கொள்ளாதவர்களுக்கும் தேவனுக்குக் கீழ்படியாதவர்களுக்கும் பக்தி அற்றவர்களுக்கும் ஏற்படுவதினைக் கவனித்தீர்களா?

உமக்குப் பயந்தவர்களுக்கும் மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும் நீர் உண்டு பண்ணி வைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரியதாயிருக்கிறது (சங் 31:19) என்ற சங்கீதக்காரனின் வார்த்தைகளைக் கடைபிடித்து நன்மை பெற்றுக்கொள்வோமாக.

“தேவ பயமே ஜீவ ஊற்று” என்றான் ஞானி சாலோமோன் (நீதி 14:27) தேவனுக்குப் பயந்த, பக்திக்குரிய குடும்பம் ஒன்றினைக் கட்டி எழுப்புவோம். அதன் விளைவுகளைக் கண்ட நாம் இப்பூமிக்கு ஆசீர்வாதமாக மாறவே தேவன் நம்மை அழைத்திருக்கிறார் என்ற தெளிவை பெறுவோம். தேசங்கள் தேவனை அறிந்திட நம் குடும்பமும் காரணமாகட்டும். அதற்காகத் தான் தேவன் நம்மை இணைத்திருக்கிறார் என்ற நினைவு நம்மை ஆட்கொள்வதாக.

இணைக்கப்பட்டோம் இணையற்ற தேவனால்
இயங்குவோம் அவர் வார்த்தையின் வழியில்
இணைந்த கரங்கள் இறைவனின் சமூகத்தில்
இணைபிரியாமல் நிற்கட்டும் நித்தமும்
இனியும் சத்துரு பெலன் கொள்ளாமல்
இருக்கட்டும் நம் வாழ்க்கையில்
இந்திய தேசம் இயேசுவைக் கண்டிட்டால்
இல்லற வாழ்வின் இனிமை புரியுமே.

# கேள்வி - பதில்

**கேள்வி 1 :- வெளிநாட்டு வேலையினிமித்தம் கணவனும் மனைவியும் பிரிந்து வாழலாமா?**

கணவனும் மனைவியும் பிரிந்து வாழ்வதனை வேதம் ஒரு போதும் ஆமோதிக்கவில்லை. 1கொரி 7-ன்படி உபவாசத்திற்கும் ஜெபத்திற்குமேயன்றி வேறொன்றுக்கும் இல்லை என்றே வேதம் கூறுகிறது. ஆனால், திருமணத்திற்கு முன்னரே மாப்பிள்ளை வெளிநாட்டில் வேலை செய்கிறார் எனவும் அவர் மனைவியைக் கூட வைத்துக்கொள்வதற்கு அரசாங்கமும், பொருளாதரமும் இடம் தரவில்லை எனவும் வாதங்கள் உண்டு. கூடவே, விசேஷமாக வளைகுடா நாடுகளில் வேலை செய்பவர்களின் பிள்ளைகள் அந்த நாடுகளில் மேற்படிப்பு படிக்கக் கூடாத நிலையினிமித்தம் மனைவி பிள்ளைகளோடு தாயகம் திரும்பி தங்கி விட்ட சூழ்நிலையும் உண்டு.

இதுவும் அல்லாமல் வெளி நாட்டில் வேறொரு சூழ்நிலையில் (work culture) வேலை செய்த பின்னர் இந்தியாவுக்கு வந்து வேறொரு வேலை செய்வதும், அதே அளவு பணம் சம்பாதிப்பதும் இயலாததாகவே எண்ணப்படுகிறது. வெளிநாட்டு வேலைக்கு போனவர்கள் அநேகர் கடனை வாங்கி சென்றவர்கள்; கடனை அடைக்க நிர்வாகம் தேவை. சிலர் எப்படியாவது ஒரு நல்ல வீட்டினைக் கட்டி விட வேண்டும் என்ற நாட்டம் கொண்டவர்கள் சிலர் பிள்ளைகளுக்கு உயர்தரமான கல்வியைப் பெற்றுத்தர தான் அதிகமாக சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்கள். பிள்ளையை நன்றாக செலவு செய்து படிக்க வைத்து பின்னர் அவர்களை இழந்து போனவர்களின் எண்ணிக்கை அதிகம். சிலர் அங்கே சம்பாதித்து வந்து இங்கே வந்து வசதியாக வருமானம் தருகிற ஒரு தொழிலை தொடங்கி விடலாம் என்று நினைத்தவர்கள் வெளி நாட்டில் வேலை செய்கிறேன் என்ற வார்த்தைகளே சிலருக்கு மயக்க வார்த்தைகள் “திரைகடல் ஓடி திரவியம் தேடு” என்பது தமிழர் கலாச்சாரத்தில் கலந்த ஒன்று. எனவேதான், அன்று பர்மா (இன்றைய மியான்மர்) மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில்

அவர்கள் அதிகமாக குடியேறினர்; பின்னதாக அங்கிருந்து விரட்டியும் அடிக்கப்பட்டனர்.

சூழ்நிலைகள், குடும்பத்தின் பாரம் போன்றவை அநேகரை வெளிநாட்டிற்கு வேலைக்காக தள்ளிற்று. சிலர் தாங்கள் கற்ற கல்விக்கேற்ற வேலை இந்தியாவில் இல்லை என்றும் முன்னேறவும் வாய்ப்புகள் குறைவு என்று சொல்லுகிறார்கள்.

ஆனால், மாறிவரும் இன்றைய சூழ்நிலையில் குடும்பமாக ஒரே இடத்தில் வாழ்வது மனைவிக்கும் குழந்தைகளுக்கும் மிகவும் நல்லது. மாற்றக்கூடாதபடி மாட்டிக்கொண்டவர்கள் எத்தனை சீக்கிரமாய் காரியங்களைச் சரி செய்து கூடி வாழமுடியுமோ, அத்தனை துரிதாய் அதில் ஈடுபடுவது நல்லது. வெளிநாட்டில் வேலை செய்வது தவறல்ல, ஆனால், குடும்பமாக செல்ல வழியில்லாவிட்டால் அதனைத் தவிர்ப்பது நமக்கு சுகம்.

பண ஆசையும் பேராசையும் நம்மை தள்ளிவிடும் சக்திகளாக மாறிவிடக்கூடாது. பெரிய பங்களா இருந்தும், வாழ்வினை கசப்பாக்கிய பிள்ளைகளை உடையவர்களாய் மாறிவிட்டால் அதனை விட வேறே வேதனை உண்டோ? மனைவி, கணவன், தாம்பத்திய வாழ்வில் கறைபடக்கூடிய சூழ்நிலைகள் உண்டானால் அதனைவிட மானக்கேடு வேறு உண்டோ? சொகுசு வாழ்விற்காக சொந்த பந்தங்களை தாரை வார்ப்பது எத்தனை புத்தியீனம்! வெளிநாட்டில் வேலை செய்தால் ஊழியத்திற்கு அதிகம் பணம் தரலாமே என்ற ஆவிக்குரிய போர்வையைப் போட்டுக் கொள்ளாதீர்கள். பணம் படைத்த அடிமையாய் வாழ்வதைவிட, கஞ்சி சாப்பிடும் சுதந்தரராய் வாழ்வது அதிக மேன்மை.

**கேள்வி 2: சொத்துக்கள் வாங்கும் போது யார் பேரில் வாங்குவது. கணவன் பேரிலா? மனைவி பேரிலா?**

சொத்துக்கள் உறவினைப் பாதிக்க அதிகம் பெலன் பெற்றவை என்பதனை மறக்கலாகாது. அநேக பெண்கள் தங்களின் பாதுகாப்பற்ற நிலையினை எண்ணி தங்கள் பேரில் சொத்துக்கள் வாங்கப்படவேண்டும் என்று விரும்புவர். சிலர் சொத்துக்களை தங்கள்

பேரில் வாங்கி கணவனை துச்சமாக மதித்து, நாயாக நடத்துபவர்களையும் நான் கண்டிருக்கிறேன். தேவபயம் அற்றுப் போகும் எந்தக் குடும்பத்திலும் சொத்து யார் பேரில் இருக்கிறது என்பதனை விட, எப்படி கையாளப்படுகிறது என்பதுதான் முக்கியம். முதலாவது தேவனுக்குப் பயப்படும் குடும்பமாக இருப்பதுதான் தேவை. அதனைத் தொடர்ந்து சொத்துக்கு நாம் சொந்தக்காரர் என்ற மனநிலை மாறி, நான் அதனை பராமரிக்க தேவன் என்னை உக்கிராணக்காரனாக வைத்திருக்கிறார் என்று எண்ணி அதே கண்ணோட்டத்தில் உபயோகித்து வாழ்வதே உத்தமம்.

இப்படி நடக்குமானால் என் பேரில் எவ்வளவு சொத்து இருக்கிறது என்ற எண்ணத்தினைத் தாண்டி, அதனை நான் எப்படி உபயோகிக்கிறேன் என்பதில் அதிக கவனம் சென்று தேவனும், தேவ ராஜ்யபணியும் மகிமைப்பட வாய்ப்புகள் பெருகும். ஏழு தலைமுறைக்கு சொத்து சேர்த்துவிட்டவர்களும் உண்டு ஆனால் இறுதியில் மன சஞ்சலத்தோடு மரிக்கிறவர்களே ஏராளம்.

"ஐசுவரியமானது அதை உடையவர்களுக்கே கேடுண்டாகும்படி சேகரித்து வைக்கப்படுவதாம். இந்த ஐசுவரியம் விக்கினத்தால் அழிந்துபோகிறது. அவன் ஒரு புத்திரனைப் பெறுகிறான்; அவன் கையில் யாதொன்றும் இல்லை. தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான். வந்தது போலவே நிர்வாணியாய் திரும்பப் போவான். அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக்கொண்டு போவதில்லை" (பிர 5:13-15).

சூரியனுக்குக் கீழே நான் பட்ட பிரயாசத்தையெல்லாம் வெறுத்தேன். எனக்குப் பின் வரப்போகிறவனுக்கு அதைநான் வைத்துப்போக வேண்டியதாகுமே. அவன் புத்திமானாயிருப்பானோ மூடனாயிருப்பானோ அதை யார் அறிவார்? ஆகிலும் சூரியனுக்குக் கீழே நான் பிரயாசப்பட்டு ஞானமாய் சம்பாதித்த சகல வஸ்துக்களின் பேரிலும் அவன் அதிகாரியாவான்" (பிர 2:18,19).

ஒருவன் புத்தி, யுக்தி, நிதானத்தோடு பிரயாசப்படுகிறான். ஆகிலும், அப்படிப்பிரயாசப்படாதிருந்த வேறொருவனுக்கு அவன்

அதைச் சொந்தமாக விட்டு விட வேண்டியதாகுமே (பிர 2:21).

இவை யாவும் சூரியனுக்குக் கீழே நடப்பவை எனவே சூரியனுக்கு மேலே உள்ளக் காரியங்களில் அதிகம் கவனம் செலுத்துவது நல்லது. அதைத்தான் இயேசு பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும் இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுவதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும் (மத் 6:19-21) என்றார்.

இவ்வுலகத்தில் ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வைக்காமலும், தான் அனுபவிக்கிறதற்குச் சகல வித நன்மைகளையும் சம்பூரணமாய் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன் மேல் நம்பிக்கை வைக்கவும் நன்மை செய்யவும் நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாயும் உதாரகுணமுள்ளவர்களாயிருக்கவும் நித்திய ஜீவனைப்பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தை பொக்கிஷமாக வைக்கவும் வேண்டும் என பவுலும் கூறுகிறார் (1 தீமோ 6:17-19).

**கேள்வி 3 : கணவனுக்கோ மனைவிக்கோத் தெரியாமல் தன் குடும்பத்தாருக்கு பண உதவியையோ வேறு உதவிகளையோ செய்யலாமா?**

திருமணத்தில் நாம் கற்றுக்கொள்ள வேண்டிய முதல் பாடம் நான், நீ, எனது என்ற நிலைமாறி நாம், நம்முடையது என்ற நிலைக்கு வரவேண்டும். இந்த எண்ணம் இரண்டு குடும்பமாக அல்ல ஒரே குடும்பமாகவே நம்மைப் பார்க்கச் செய்யும். "நான் செய்வதனை கணவன் விரும்பமாட்டாத கஞ்சன்" என்று சொல்லும் மனைவிமாரும், "எனக்கு ஒரு பிசாசுதான் கிடைத்திருக்கிறது. என் குடும்பத்திற்கு உதவுவதை அவள் அறிந்தால் பேயாட்டம் போட்டுவிடுவாள்" என்றுக் கூறும் கணவர்மாரும் உண்டு.

எது எப்படியாயினும் திறந்த மனதோடு வாழாத வாழ்க்கையில் என்றைக்கும் போராட்டம் ஏற்பட வாய்ப்பு உண்டாகும். அது சந்தேகத்தினை உருவாக்க வல்லது. சந்தேகம் கொள்ளும் வாழ்க்கை சஞ்சலத்தையும் வேதனையையும் ஏன் பிரிவினையையும் கொண்டுவந்துவிடும்.

அன்பாகப்பேசி, அவர்களுக்குப் புரியச் செய்து அதனை இருவருமாக செய்வது அதிக நன்மையாயிருப்பது மாத்திரமல்லாமல், குடும்ப பிணைப்பு உறுதியாயிருப்பதற்கும் ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கையுள்ளவர்களாய் மாறுவதற்கும் அது வழி வகுத்திடும்.

சிறிய காரியமானாலும் பெரிய காரியமானாலும் பகிர்ந்து கொண்டு காரியங்களை நிறை வேற்றுவது ஒரு வேளை பிந்திப்போக நேரிடும் எனினும், பிரிக்கிறதிலிருந்து நம்மைக் காக்க முடியும். ஞானமாய் நடப்பது நல்லது. அபிகாயிலைக் குறித்து நான் எழுதியிருப்பதனை மீண்டும் வாசித்துப் பாருங்கள்

“உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காதே” என்பது தான் தேவதிட்டம். அப்பொழுது விடியாற்கால வெளுப்பைப் போல் உன் வெளிச்சம் எழும்பி, உன் சுக வாழ்வு சீக்கிரத்தில் துளிர்த்து, உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும், கர்த்தருடைய மகிமை உன்னைப்பின்னாலே காக்கும், அப்பொழுது நீ கூப்பிடுவாய் கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார். நீ சத்தமிடுவாய் இதோ நான் இருக்கிறேன் என்று சொல்லுவார் (ஏசா 58:7-9) என்ற வாக்குத்தத்த வார்த்தைகளை சுதந்தரிக்க தேவன் உங்களுக்கு அருள் புரிவாராக.

**கேள்வி 4 : கணவனுக்கோ மனைவிக்கோ தெரியாமல் ஊழியங்களுக்கு உதவலாமா?**

அவிசுவாசியான கணவனையோ மனைவியையோ உடையவர்களுக்கு இது ஒரு பெரிய பிரச்சனையே. கணவனுக்குத் தெரியாமல் தங்கள் நகைகளை ஊழியருக்குக் கொடுத்து பின்னர் அடி உதைகளை வாங்கின மனைவிகளை நான் அறிவேன். உங்கள் காணிக்கைகளை விட கணவனின் அல்லது மனைவியின்

இரட்சிப்புக்காக நீங்கள் ஏங்குவதே பிரதானம்.

ஆனால் சிலர் நான் உனக்குத் தரும் பணத்தை வைத்து எதை வேண்டுமானாலும் செய் என்ற சுதந்தரம் தருவர்; அப்படி செய்யும் போது அதனைத் தருவது தவறல்ல. கொடுத்து விட்டு பின்னர் பகிர்ந்து கொள்வதனை விட கொடுக்கும் முன் பகிர்ந்து கொண்டு கொடுப்பதே சாலச் சிறந்தது.

ஆபிரகாமிடத்தில் கர்த்தர் அவனுடைய மகனைக் காணிக்கையாகக் கேட்ட பின்னர், அவன் சாராளிடத்தில் சொல்லவில்லையே என வாதிடுவோரும் உண்டு. ஆனால் சாராள் ஆபிரகாமை "ஆண்டவனே' என்று அழைக்கக்கூடிய உன்னத இடத்தில் வைத்திருந்ததால் அவர் தவறு செய்ய மாட்டார் என்ற நம்பிக்கையை உடையவளாக வாழ்ந்ததனை மறுக்க முடியாதே; அந்த உறவு முக்கியம்.

நம்பிக்கையைக் கெடுக்கும் எந்த செயலும் அது காணிக்கை தருவதாய் இருக்கும் நல்ல செயலானாலும் அதை செய்யாமல் விட்டால் தேவன் அதற்காக நம்மைத் தண்டிக்கமாட்டார்.

ஒரு பெண் பொருத்தனை பண்ணும் போதும் தன் உதடுகளைத் திறந்து தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொள்ளும் போதும், அவளுக்கு புருஷன் இருந்தால் அப்பொழுது அவளுடைய புருஷன் அதைக் கேட்டிருந்தும் அதைக் கேள்விபடுகிற நாளில் அவளுக்கு ஒன்றும் சொல்லாதிருந்தால் அவளுடைய பொருத்தனைகளும் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின நிபந்தனையும் நிறைவேற வேண்டும்.

அவளுடைய புருஷன் அதைக் கேட்கிற நாளில் அவன் வேண்டாம் என்று தடுத்து, அவள் செய்த பொருத்தனையும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்ட நிபந்தனையும் செல்லாதபடி செய்தானேயானால் அப்பொழுது கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார் (எண் 30:6,7); இது திருமணத்திற்கு முன் எடுக்கப்பட்ட பொருத்தனை.

திருமணத்திற்குப் பின் எடுக்கப்பட்ட பொருத்தனையைக்

குறித்து வேதம் சொல்லும் காரியம் "அவள் தன் புருஷனுடைய வீட்டில் யாதொரு பொருத்தனை பண்ணினாலும் அல்லது யாதொரு காரியத்தைச் செய்யும்படி ஆணையிட்டுத் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்திக் கொண்டாலும் அவளுடைய புருஷன் அதைக் கேட்டும் அவளுக்கு அதை வேண்டாமென்று தடுக்காமல் மவுனமாயிருந்தால் அவள் செய்த எல்லாப் பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை நிபந்தனைக்குட்படுத்தின எல்லா நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும்.

அவளுடைய புருஷன் அதைக் கேட்ட நாளில் அவைகளைச் செல்லாதபடி பண்ணினால், அப்பொழுது அவள் செய்த பொருத்தனைகளும் அவள் தன் ஆத்துமாவை உட்படுத்திக்கொண்ட நிபந்தனையைக் குறித்து அவள் வாயிலிருந்து புறப்பட்டதொன்றும் நிறைவேறவேண்டியதில்லை. அவளுடைய புருஷன் அவைகளைச் செல்லாதபடி பண்ணினதினாலே கர்த்தர் அதை அவளுக்கு மன்னிப்பார் (எண் 30:10-12).

எந்த பொருத்தனையையும், ஆத்துமாவைத் தாழ்மைப்படுத்தும்படி செய்யப்பட்ட எந்த ஆணையையும், அவளுடைய புருஷன் ஸ்திரப்படுத்தவும் கூடும் செல்லாதபடி பண்ணவும் கூடும் (எண் 30:13). இவைகள் பழைய ஏற்பாட்டின் பிரமாணம் எனிலும் தேவனுடைய இதயத்தின் எண்ணத்தைச் சொல்லும் காரியம் அல்லவா.

**கேள்வி 5: யார் குடும்பத்தின் பணத்தை கையாள வேண்டும்?**

நான் முன்னதாகவே குறிப்பிட்டது போல், என் பணம், உன் பணம் என்ற முறையிலிருந்து மாறி நம் பணம் என்ற நிலை முதலில் உண்டாக வேண்டும். இந்த காரியத்தில் என் தாய் தகப்பன் நல்ல முன்மாதிரி. என் அப்பா சம்பளம் வாங்கி வந்து என் அம்மாவிடம் தருவார்கள், என் அம்மா சம்பளம் வாங்கி வந்து என் அப்பாவிடம் தருவார்கள். இரண்டு பேரும் பின்னர் உட்கார்ந்து தேவனுக்கு ஒரு பங்கை முதலாவது எடுத்து வைத்து விட்டு. அந்த மாத பட்ஜெட்டைப் போடுவார்கள். பின்னர் என் அம்மாவிடம் எல்லா பணத்தையும் தந்து அன்றாடத் தேவைகள் அவர்களுக்குரியதை மாத்திரம் என் தந்தைப்

பெற்றுச் செல்வார்கள். என் அம்மா ஒழுங்காக தங்கள் கணக்கை எழுதி வைப்பார்கள். இதனால் என் குடும்பத்தில் கடனும் இருந்ததில்லை. பணத்தினை வைத்து பிரச்சனைகளும் எழும்பினது இல்லை.

இதே முறையில் திருமணமானவுடன் நானும் வீட்டுக் காரியங்களை நடத்தும் அத்தனை பணப் பொறுப்பினையும் என் மனைவியினிடத்திலேயே தந்தேன்; அவளுக்கு அப்போது தெரியாது. ஆனால் முதல் நாளிலிருந்தே அவள் தான் மார்க்கெட்டும் போய் வந்தாள். இன்று வரை பணத்தினால் எங்களுக்குள் பிரச்சனை வந்ததேயில்லை.

நீதி 31ம் அதிகாரத்தில் காணப்படும் குணசாலியான ஸ்திரீயினை அவளுடைய புருஷன் நம்புவதையும் (வச 11), வாங்கும் விற்கும் வேலைகளை அவளே செய்வதாகவும் (வச 16,18), முழு பணத்தையும் அவள் கையாடுவதனையும் காண்கிறோம். வெளிக்காரியங்களைத்தான் அவளுடைய கணவன் கவனிக்கிறான் (வச 23). குடும்பத்திலும் மகிழ்ச்சி (வச 25), சமாதானம் (வச 28,29), சமுதாயத்திலும் புகழ்ச்சி (வச 31) உண்டாகிறது. இப்படி புத்தியுள்ள ஸ்திரீகளால் கட்டப்படும் வீடு பாக்கியமுள்ளது; இது வேதம் காட்டும் உண்மை.

**கேள்வி 6: நம்முடைய தனிப்பட்ட கவலைகளையும் கஷ்டங்களையும் (கணவனிடத்திலோ மனைவியினிடத்திலோ மனஸ்தாபம் ஏற்படும் போது) யாரிடம் பகிர்ந்து கொள்வது?**

ஞானமற்ற காரியத்தினால் அநேகர் தவறான நபரிடத்தில் பகிர்ந்து கொள்ள நேரிட்டு வேதனைக்குள்ளானதும், சிலர் தவறான உறவுக்குட்பட்டதும் நாம் அறிந்ததே.

நம்பப்படுகிறவர்கள் போல காட்சியளிக்கும் சிலர், பொய் அனுதாபம் காண்பித்து, பின்னர் அதுவே தாறுமாறுகளுக்கு வழிவிட்டுவிட்டதனைக் காணுங்கால் நம்முடைய மனது உருகுகிறது. ஆயினும், காரியத்தினைக் கெடுத்துப் போட்ட பின்னர் சரியாக்குவது மிகவும் கடினமாகவே மாறிவிடுகிறது.

ஊழியர்கள் போதகர்கள் என்ற நிலையிலும் சிலர் அநேகரை வஞ்சித்து விட்ட சம்பவங்கள் உண்டு. இதனால் யாரையுமே நம்பாமல் இருங்கள் என்று நான் சொல்லவில்லை; சில பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்தவர்கள் கூட ஒருவருக்கு ஆறுதல் தர நினைத்து அகப்பட்டுக் கொண்டவர்கள் உண்டு. எனவே மிகவும் ஜாக்கிரதையாக இதனைக் கையாள வேண்டும்.

கணவன் மனைவிக்கிடையில் பேசியோ, ஜெபித்தோ, தீர்க்கக் கூடாதக் காரியங்கள் உருவாகும் போது. ஒரு நபருக்கு மாத்திரம் அதனை அறிவித்து அறிவுரைக் கேட்பது ஞானமற்ற செயலே. ஏனெனில் நாம் நினைக்கலாம் ஒருவர் மாத்திரம் அறிந்தால் அது இரகசியமாக இருக்குமே என்று. ஆங்கிலத்தில் ஒரு காரியம் சொல்லப்படும் A Secret will be a secret as long as it is known to only two people provided one is dead. அதாவது இரகசியம் என்று ஒன்று உண்டென்றால் அது வெறுமனே இருவருக்கு மாத்திரம் தெரிந்து, அதிலும் ஒருவர் மரித்திருந்தால் மாத்திரமே அது சாத்தியம். ஆகையால் ஒருவருக்கு மாத்திரம் சொல்லுகிறேன் என்று கூறுவது விவேகமாகாது. இரண்டு பேருடைய (நம்பத்தகுந்த) பிரசன்னத்தில் அதனைக் கூறி உதவி பெறுவது நம்மைப் பாதுக்காக்கப் போதுமான வல்லமை உள்ளது. அது ஒருவேளை ஊழியராய் இருந்தால், அவருடைய மனைவியும் இருக்கும் போது பகிர்ந்துக்கொள்ளப்படவேண்டும். (மனைவியும் நம்பத்தகுந்தவராகவும், காரியத்தை அடக்கத் தெரிந்து காப்பாற்ற வல்லவராகவும் இருத்தல் மிகவும் அவசியம்).

கூடிய மட்டும் மாற்று பாலினத்தவராக (oppo. sex) இல்லாதிருப்பது நல்லது. ஆவிக்குரிய அணுகுமுறையில் காரியங்களை தீர்க்க வல்லவராகவும், தேவ சமூகத்தில் ஜெபிக்க தன்னை ஒப்புக் கொடுத்தவராகவும் இருப்பது சாலச் சிறந்தது.

நாம் பகிர்ந்து கொண்டவற்றை பறைசாற்றி, தனக்கு ஆதாயம் தேடாத நபராகவும், பொறுமையைக் கடைப்பிடிக்கக் கூடியவராகவும் இருந்து, தேவவசனத்தின் வெளிச்சத்தில் வழிநடத்தக் கூடியவராகவும், பாதிக்கப்பட்டவரையும் காயம் உண்டாக்கினவரையும் அணுக பெலன்

உள்ளவராகவும் இருப்பவர்களோடு பகிர்ந்து கொண்டால் நற்பலன் உண்டாகும்.

"தந்திரசாலிகள்" நெருங்கிய நண்பனாக இருந்தாலும் அவர்கள் நம்மை அழிவுக்கு வழிநடத்தி விடுவர் (2சாமு 13:3-5) "உண்மையான நண்பர்களோ" நம்மை தப்புவிக்க வகை செய்வர் (1 சாமு 20:1-43).

கூடவே ஆலோசனை செய்ய சிலரை தேவன் அதற்கென்றே அபிஷேகித்திருக்கிறார். அவர்களில் ஞானத்தை உணர்த்தும் வரமும் (word of wisdom), அறிவை உணர்த்தும் வரமும் (word of knowledge) அதிகமாக வெளிப்படும். அப்படிப்பட்டவர்கள் மிகவும் பயனுள்ளவர்கள் ஆவார்கள். எப்படியாயினும் தேவனுக்குப் பயந்த தேவ மனிதர்களிடமும் தனியாக அல்ல இரண்டு பேர் மத்தியில் பகிர்ந்து கொள்வதே மிகவும் சிறந்தது.

**கேள்வி 7 : பாலியல் உறவில் மிகவும் உந்துதலோடு (active) இருக்கும் நபரோடு எப்படி ஒத்துப் போவது?**

உடலின் அமைப்பு ஒவ்வொரு நபருக்கும் வித்தியாசப்படுவதினால் சிலர் உடலுறவில் அதிக நாட்டம் இல்லாதவர்களாகவும், சிலர் அதில் அதிக உற்சாகம் காட்டுகிறவராகவும் இருக்க வாய்ப்புகள் உண்டு. அதை தவறாகப் புரிந்து கொண்ட குடும்ப வாழ்வின் ஒரு சாரார், ஏதோ மாறுசாரர் அதுதான் வாழ்க்கை என்று நினைப்பது போல எண்ணி ஒரு சோகத்திற்குள் தங்களை ஆழ்த்தி வேண்டாதவைகளை கற்பனை பண்ணி ஒத்துப் போகாத வாழ்வைத் தொடர ஆரம்பிக்கின்றனர்.

வேறு சிலர் வாலிப நாட்களில் கண்ட கண்ட புத்தகங்களைப் படித்ததினாலும், பலவித ஆபாசக் காட்சிகளை இன்டர்நெட்டில் கண்டு களித்ததினாலும் (Pornography), தன் மனைவியோடோ கணவனோடோ முறைகெட்ட முறையில் (Perverted sex) நடந்து கொள்ள முயலும் போது, அதற்கு ஒத்துப் போக முடியாத நிலையில் தள்ளப்படும் மற்ற நபரின் செயலைக் கேள்வி கேட்டு அதனால் துன்பங்களை அனுபவிப்பவர்கள் பலர்; பிரிந்தவர்களும் உண்டு.

உடலுறவுகளைக் குறித்து நண்பர்கள் சொல்லக்கேட்டு (பொதுவாக பெற்றோரும், சபையும் அதனைக் கற்றுக் கொடுப்பதில்லை) அதனை தங்கள் வாழ்க்கையில் கடைபிடிக்க முயன்றவர்கள், தங்கள் எதிர்பார்ப்புக்கேற்ற நிலை இல்லாதபோது வெறுப்புற்று, ஏமாற்றமுற்று, மற்றவர்களைக் காயப்படுத்தும் வார்த்தைகளால் அழித்துப் போட்டவர்களும் உண்டு.

இதனைக் குறித்து மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்ளவும் வெட்கப்பட்டு தனக்குள்ளே பொறுமி, பின்னர் வேறே ஒரு காரணத்தினைச் சொல்லி பிரிவினைக்கு வித்திட்டவர்களும் உண்டு.

ஒருபாலின உறவுக்கு (Homo-Sexual) வாலிபத்தில் அடிமையானவர்கள் நடந்து கொள்ளும் விதமும் விகர்ப்பமாகவே இருக்கலாம். இதுவும் உறவில் பெரியபாதிப்பைக் கொண்டு வந்து விடலாம். தனக்கு இன்பம் மாத்திரம் தான் வேண்டும். பிள்ளை வேண்டாம் என்று எண்ணும் கணவன் ஓனானைப் போன்று "சந்ததி உண்டாகாதபடிக்குத் தன் வித்தை தரையிலே விழவிட்டு கெடுத்தவர்களும்" உண்டு (ஆதி 38:9). அவன் செய்தது கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாததாயிருந்தது என்றே வேதம் சொல்கிறது (ஆதி 38:10).

மாற்று நபரை (spouse) திருப்தி செய்வதனைத் தவிர்த்து தனக்கு மாத்திரம் இன்பம் தேடும் எந்த நபருடைய நிலையும் பரிதாபமே. விவாகம் பண்ணினவன் தன் மனைவிக்கு எப்படிப் பிரியமாயிருக்கலாமென்று கவலைப்படுகிறான் என்றும், விவாகம் பண்ணினவள் தன் புருஷனுக்கு எப்படி பிரியமாயிருக்கலாமென்று கவலைப்படுகிறாள் என்றும் வேதம் கூறுகிறது. (1 கொரி 7:33,34)

தாம்பத்திய உறவு வெறும் உடலுறவில் தான் அடங்குகிறது என்ற எண்ணத்திலிருந்து வெளிவரவேண்டிய அவசியம் சிலருக்கு உண்டு. பொதுவாக "Man gives love to have sex and woman gives sex to have love" ஆண் அன்பைத் தருவது பாலுறவுக்காகவும், பெண் பாலுறவில் ஈடுபட சம்பதிப்பது அன்பைப் பெற வேண்டியும் என்று

கூறுவர்; இது ஓரளவு உண்மை.

குறிப்பாக "விவாக மஞ்சம் அசுசிப்படாததாயிருப்பதாக" (எபி 13:4) என்ற தேவ கட்டளை படுக்கையில் கணவன் மனைவி உறவிலேயும் காக்கப்பட வேண்டும்.

மேலும் வார்த்தைகளினாலும் அன்பின் தொடுதலினாலும், அரவணைப்பாலும் அன்பை பகிர்ந்து கொள்ள முடியும் என்பதனையும், உடலுறவுக்கு முன் ஒரு அன்பை பகிர்ந்து கொள்ளுதல் (மற்ற விதங்களில் செயல்பட்டால்) இந்த உடலுறவு உந்து சக்தியின் மூலமே திருப்தியாக முடியும் என்ற நிலைமாற வாய்ப்புண்டு; தவறாக நினைக்காமல் புரியவைத்து புத்திசாலித்தனமாக செயல்பட்டால் மேற்கொள்வது எளிது.

**கேள்வி 8 : வயதிற்கு வந்த பிள்ளைகள் இருக்கும் போது தம்பத்திய உறவில் ஈடுபடாலாமா? அவர்கள் முன்னிலையில் கணவன் மனைவி தொடர்பு எப்படியிருக்க வேண்டும்?**

தாம்பத்திய உறவிற்கு வயது வரம்பு இல்லை. மிருகங்களுக்கும் மனிதர்களுக்கும் உள்ள பெருத்த வித்தியாசம் அது. மிருகங்களுக்கும் பறவைகளுக்கும் வெறும் இனப் பெருக்கத்திற்காகவே உடலுறவு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் மனிதனுக்கு இனப்பெருக்கத்திற்கு மட்டுமல்லாமல், இன்பத்திற்கும் அளிக்கப்பட்டுள்ளது. எனவே வயது வரம்போ, வயதிற்கு வந்த பிள்ளைகள் இருப்பதோ அதை வரையறுக்காது.

ஆனால் பிள்ளைகள் முன்னதாக ஞானமாய் நடக்காவிடில் பிள்ளைகளுக்கு உங்கள் மேல் இருக்கும் மரியாதையை நீங்கள் இழந்துவிடுவீர்கள். அது அவர்களை வழிநடத்துவதிலும், ஒழுங்குப்படுத்துவதிலும் உங்களைத் திக்கு முக்காடச் செய்துவிட வாய்ப்புண்டு.

மேல்நாட்டு நாகரீகத்தில் கணவன் மனைவி பொது இடங்களில் முத்தமிட்டு, கொஞ்சி மகிழ்வது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது இந்திய கலாச்சாரத்தில் அருவருப்பாக எண்ணப்படுகிறது. படுக்கையறையில் நடைபெறுவதனை பட்டப் பகலில் நடத்துகின்றனரே

என்ற கேலிப்பேச்சு அதனால் வெளிப்படும். இதனால் மேல்நாட்டவர் தன் பிள்ளைகள் முன்னால் நடந்து கொள்ளும் முறையினைப் பின்பற்றி நாம் வாழ்ந்து விட முடியாது.

வயதுக்கு வந்த பிள்ளைகள் இருந்த போதிலும் ஈசாக்கு ரெபேக்காள் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அதனைக் கண்ட அபிமெலேக்கு அவர்கள் கணவன் மனைவி என்று அறிந்து கொண்டான் (ஆதி 26:8,9)

இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ அவனுடைய கழுத்தில் எந்திரக்கல்லை கட்டி சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்தி விடுவது நலம்" என்று எந்தக் காரியத்தினாலும் இடறல் உண்டாக்கினால் அது பெற்றோராய் இருந்தாலும் அப்படிப்பட்ட தீர்ப்பு என்பதனை மறக்கலாகாது (மத் 11:6).

**கேள்வி 9: கணவரோ மனைவியோ நெடு நாள் வியாதிப்பட்டவராய் இருக்கும் போது அவர்கள் தாம்பத்திய உறவில் தடை ஏற்படுவதனை மேற்கொள்வது எப்படி?**

நான் முன்னதாகவே குறிப்பிட்டதுபோல வெறும் உடலுறவு மாத்திரம் இன்பம் தருவது என்று நினைப்பது தவறு, சரீரம் அதனை வாஞ்சித்தாலும் அன்புப் பேச்சு, அரவணைப்பு போன்றவை நேசத்தினை வளர்க்க மாத்திரமல்ல திருப்திப்படுத்தவும் போதுமானவை.

மாம்சத்தின் ஏவுதலை மாத்திரம் பின்பற்றி நடப்போருக்கு இது கடினமாகத் தெரியலாம். ஆனால் ஆவியின் நிறைவு பெற்று வாழ்வுக்கு ஒப்பு கொடுத்தோருக்கு இது எளிதானதே.

சரீர உணர்வுகளைத் தூண்டி விடும் காட்சிகளில் லயித்திருப்பது, அதனை இயக்கிவிடும் புத்தகங்கள், தொலைக்காட்சிகள், மின்அஞ்சல் போன்றவற்றில் அதிக நேரம் செலவிடுவதும் தவிர்க்கப்பட வேண்டியவை. இராணுவத்தில் பணிபுரியும் பலர் தங்கள் குடும்பங்களை விட்டு விட்டு அநேக நாட்கள் வாழ்கிறார்களே.

தனக்குரியவள் என்றும் தன்னோடு இருக்கிறாள் என்று யோசேப்பு அறிந்திருந்தும், இயேசுவின் பிறப்பு வரை மரியாளைத் தொடாமல் வாழ முடிந்ததே (மத் 1:25)

செயலற்ற உறுப்புகள் உடையோரை மணமுடித்து பலவருடங்கள் இணைந்து வாழ்கிறவர்கள் இல்லையா? ஆவியின் கனிகளில் ஒன்றான "இச்சையடக்கம்" கையாளப்பட்டால் இது இலகுவானதே (கலா 5:23). மனைவியையோ, கணவனையோ உண்மையாய் நேசித்தால் அவளின் சரீர உபத்திரவங்களோடு இன்னமும் பாடுகளைச் சேர்க்க நாம் நினைக்க மாட்டோம். தெய்வீக அன்பு தான் இதனைத் தீர்க்க வழி!

**கேள்வி 10: என் மனைவி தன்னுடைய தாய் வீட்டிற்கு அடிக்கடி போக விரும்புகிறாள்? போனால் சீக்கிரத்தில் வரமாட்டேன் என்று முரண் பிடிக்கிறாள் என்ன செய்வது?**

திருமண உறவில் இணைந்து விட்ட பின்னர், தன்னுடைய கணவனையோ, மனைவியையோ திருப்திபடுத்துவதும் தங்களுடைய பிரதான கடமை என்பதனை உணராததினால் வருவது இது. வேதத்தின் கட்டளைகளை கவனியுங்கள்.

"குமாரத்தியே கேள் நீ உன் செவியைச் சாய்த்து சிந்தித்துக்கொள். உன் ஜனத்தையும் உன் தகப்பன் வீட்டையும் மறந்துவிடு. அப்பொழுது ராஜா உன் அழகில் பிரியப்படுவார். அவர் உன் ஆண்டவர் ஆகையால் அவரை பணிந்து கொள். (சங் 45:10,11)

"மறந்துவிடு" என்பதற்கு முற்றிலும் மறக்கச் சொல்லவில்லை. மாறாக முக்கியமாகக் காணப்பட வேண்டிய காரியம் புருஷனுக்கு பிரியமாயிருப்பதுவே. இந்த வசனத்தை அவளுக்கு விளக்குங்கள். கூடவே கணவனை பகல் முழுவதும் பிரிந்து தனியாக இருக்கும் மனைவி (வேலைக்கு போகாத பட்சத்தில்) உங்கள் துணையைத் தேடுகிறாள் என்பதனை மறக்காமல் அவளுக்குரிய நேசத்தினை கொடுத்து "தாய் வீட்டைக் காட்டிலும் உங்களோடு இருப்பது நலம்" என்பதனை விளக்கும் வண்ணம் வாழ்ந்து காட்டுங்கள்.

பெற்றோர்களும் தங்கள் பிள்ளைக்கு இதனை விளங்க வைக்க பிரயாசப்படுதல் அவசியம். புருஷனுக்கு மனைவியின் கவனிப்பு எத்தனை அவசியம் என்பதனை புரியவைத்து எவ்வளவு சீக்கிரம் திருப்பி அனுப்ப வேண்டுமோ அவ்வளவு சீக்கிரம் அனுப்பி வைக்க வேண்டும். பல ஆண்டுகள் வாழ்ந்து பழகிய இடத்தினை மறப்பதும், விட்டுவிடுவதும் அவ்வளவு எளிதானது அல்ல. மாற்று கலாச்சாரத்தில் வாழ நேரிட்டாலோ மாற்று தேசத்தில் வாழ நேரிட்டாலோ இன்னமும் அதிக கடினம். புரிந்து கொள்ளுதலும், மனைவி தனக்கு எத்தனை தேவைப்படுகிறாள் என்ற கணவனின் கவனமும் கரிசனையுமே இதனை மாற்றும்.

**கேள்வி 11: என்னுடைய கணவர்/மனைவி தன்னுடைய பெற்றோரின் சொல்லைத்தான் விரும்பிக் கேட்கிறார்கள். கீழ்படியவும் செய்கிறார்கள்! என்ன செய்வது?**

பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்பது தவறல்ல, ஆனால் முடிவுகள் எடுக்கும் போது கணவன் மனைவி கர்த்தரின் துணையோடு செயல்படுவதுதான் வேதம் காட்டும் முறை. இது மதிக்கப்படாத போது வேதனையே மிஞ்சும். இதனை குறித்து முன்னமே இப்புத்தகத்தில் எழுதியுள்ளதனை திரும்ப வாசியுங்கள்.

இதனைப் புரிந்து கொண்ட பெற்றோரும் மிகவும் குறைவுதான். எனினும் அவர்கள் தேவ வாக்கியத்தினை மறக்கக்கூடாது.

“புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு தன் மனைவியோடே இசைந்திருப்பான், அவர்கள் ஒரே மாம்சமாய் இருப்பார்கள்” (ஆதி 2:24)

வாழ்க்கையில் பல பிரச்சனைகளை பெற்றோர்கள் சந்திப்பதினால் அவர்களுடைய அனுபவங்கள் நமக்கு உதவலாம். ஆனால் வழி காட்ட வலு இல்லாமல் இருப்பதற்கு ஏராளமான வாய்ப்புண்டு. காலத்தின் கோலம், சூழ்நிலைகளில் மாற்றம் அவர்களுடைய அனுபவங்களுக்கு வேறுபட்டு இருக்கும் என்பதனை தள்ளிவிட முடியாது.

அனுபவக்குறைவு இளம் தம்பதியருக்கு இருப்பதினால் தவறு

செய்ய வாய்ப்புள்ளது, இதனையும் மறக்கலாகாது. தன்னோடு வளர்ந்த வாலிபர்களிடத்தில் ஆலோசனை கேட்ட "ரெகோபேயாம்" இராஜ்யத்தின் பெரும்பகுதியினை இழந்ததனையும் மறக்க முடியாது (1இரா 12:13-16) ஆனால் இதனைகாட்டி பெற்றோர்கள் பிள்ளைகளை அடிமைத்தனத்திற்கு வழிநடத்திவிடக் கூடாது. புரிய வைக்கும் வண்ணம் ஆலோசனை கூறுதலும் இதன் பிறகு அதனை திணிக்காவண்ணம் கவனமாய் இருப்பது ஞானமான செயல், அது பிள்ளைகளின் வாழ்வினை வளமாக்குவது மாத்திரமன்றி பிரச்சனைகளைத் தாங்களாகவேத் தீர்த்துக்கொள்ள அதிக வல்லமையுள்ளவர்களாக்கும்.

**கேள்வி 12: என்னுடைய கணவர்/மனைவி ஏதோ காரணத்தை சாக்கிட்டு தினம்தோறும் வீட்டிற்கு தாமதமாகவே வருகிறார்கள். அவர்கள் சொல்லும் காரணம் வேலை, நண்பர்கள் அல்லது மற்ற அலுவல்கள் போல காட்சியளிக்கிறது. என்ன செய்வது?**

வீட்டினை விரும்பும் இடமாக மாற்றவேண்டிய பொறுப்பு இருவரையும் சார்ந்தது. ஒருவரோடு ஒருவர் நலமானவைகளை பகிர்ந்து கொள்ளுதல், சந்தோஷமாயிருத்தல் இணைந்து சில செடிகளை நாட்டி அதில் மகிழ்தல் போன்ற காரியங்கள் வீட்டை வாஞ்சிக்கும். அலுவல்களை சரியாக செய்து நேரத்தில் வீடுசெல்ல வேண்டிய அவசியத்தினை உரிமையாளர்களுக்கோ, மேலதிகாரிகளுக்கோத் தெரியப்படுத்தி குடும்பத்தோடு களிகூர வேண்டியது ஒவ்வொருவருக்கும் அத்தியாவசியம்.

சில மனைவிமார் வீட்டில் நுழையும்போதே பலவிதமான complaint களோடு தான் கணவனை சந்திப்பர் அது அவர்களுக்கு எரிச்சலைக் கொண்டு வருவதோடு, வீட்டிற்கு வரவே விருப்பம் இல்லாமல் செய்துவிட வல்லமையுள்ளது என்பதனை ஞாபகப்படுத்துதல் அவசியம்.

பிள்ளை பிறந்துவிட்டால் இந்த பிரச்சனை குறைந்துவிட ஏராளமான வாய்ப்புண்டு. ஆயினும் சில கணவர்கள் பிள்ளையைக் கொஞ்சுவதனை விட "டீக்கடை" அரட்டையை அதிகம் விரும்புவதினால் பிள்ளையும் குடும்பமும் கெட்டுப்போக அதிக

வாய்ப்புண்டு என்பதனை எச்சரிக்கையாக எடுப்பதில்லை.

தன்னுடைய பெரிய பொறுப்புகளில் ஒன்று குடும்பத்திற்குச் சம்பாதிப்பதில் மாத்திரம் இல்லை என்பதனை அறியுங்கால் இந்த காரியங்கள் தவிர்க்கப்படும். மாதத்தில் ஓரிரு நாட்கள் எங்கேயாவது குடும்பமாகச் சென்று வருவது இந்த உறவினை பலப்படுத்தி குடும்பத்தில் நேரம் செலவழிப்பதனை முக்கியமாக கருத வாய்ப்புண்டு. "மனைவியோடு மகிழ்ந்திரு" (நீதி 5:18) "பிள்ளைகளோடு கூட படுத்திருக்கிறேன் நான் எழுந்திருந்து வரக்கூடாது" (லூக் 11:7) போன்ற வசனங்கள் கவனத்துக்குரியவை.

**கேள்வி 13 : எதற்கும் சந்தேகப்படும் கணவனோடு அல்லது மனைவியோடு எப்படி வாழ்க்கையை தொடர்வது?**

"சந்தேகம்" ஒரு பொல்லாத பிசாசு. அது வரும்போதே அதனை களைந்தெறிய வேண்டியது மிகவும் அவசியம். ஒருவருக்கொருவர் "நம்பிக்கை" வளர்க்கும் காரியத்தினை மேற்கொள்வது மிகவும் தேவை. ஜெபம் இதனை ஓரளவுக்கு செய்ய வல்லது, "சேர்ந்து ஜெபித்தால் கோடி நன்மை" என்பது வாழ்வின் சூத்திரமாக வேண்டியது.

"சந்தேகம்" எதன் பேரில் ஆரம்பிக்கிறது என்பதனை முதலாவது கண்டுகொள்ளல் அவசியம். பண விஷயத்திலா? உறவு விஷயத்திலா? வேலை விஷயத்திலா? ஊழிய விஷயத்திலா? புரிந்து கொள்ளுதலின் காரியத்திலா? என்பதனை கண்டுகொண்டால் இதனை தீர்ப்பது எளிதாகும்.

சிலர் தங்களுடைய குழந்தை பருவத்தில் பட்ட காரியங்களின் நிமித்தம் அனைவரையும் சந்தேகிப்பர், சிலர் வாலிபத்தில் சந்தித்த பிரச்சினைகளின் நிமித்தம் இப்படி இருப்பர்.

சிலர் கோள்காரர்களுக்கு செவிகொடுத்து இந்த சந்தேக வலையில் விழக்கூடும். ஏனெனில் கோள்காரனுடைய வார்த்தைகள் விளையாட்டு போலிருக்கும் ஆனாலும் அவைகள் உள்ளத்திற்குள் தைக்கும் (நீதி 26:22) கோள் சொல்லுகிறவனில்லாமல் சண்டை

அடங்கும் (நீதி 26:20). மனம் விட்டு பேசுதல் அல்லது நம்பத்தகுந்தவர்களானவர்களும், காரியங்களை தூற்றி திரியாதவர்களுமான சிலரை மத்தியஸ்தராக வைத்து காரியங்களை வெளிப்படையாகப் பகிர்ந்து கொண்டு தேவ பயத்தோடு ஜெபித்து மேற்கொள்ளல் சிறந்த வழியாகும்.

பழைய தவறுகள் நடந்திருக்குமானால், மனப்பூர்வமாய் மன்னிக்கக் கற்றுக்கொள்ளுதல் (மத் 18:35) மிகவும் அவசியம். வடுக்கள் மறைய காலம் எடுக்கும் என்பதும், அதனை தோண்டிக்கொண்டிருத்தல் கேட்டை விளைவிக்கும் என்பதும் இந்த காரியத்தில் கவலையீனமாயிருத்தல் விவாக ரத்துக்களை உண்டாக்க வல்லமையுள்ளது என்பதையும் தெரிந்து கவனமாயிருத்தல் மிகவும் அவசியம்.

**கேள்வி 14: வேறுபட்ட ஊழியத்தில் இணைக்கப்பட்டிருக்கும் கணவன் மனைவிக்குள் அதிக பிரச்சினை வர வாய்ப்புள்ளதே என்ன செய்வது?**

கூடுமானவரை ஒரே விதமான அல்லது ஒரே நோக்குடைய ஊழியத்தில் இருவரும் இணைந்து ஊழியம் நிறைவேற்றுவது மிகவும் நல்லது. திருமணத்திற்கு முன்னரே அப்படி செய்ய நேரிட்டிருக்கும் பட்சத்தில் தெளிவான கிருபை வரங்களை புரிந்துகொண்டு அதனை செயல்படுத்த தாங்கள் ஈடுபட்டிருக்கும் ஊழியத்தினை தொடரும்போது நேரங்கள், நிகழ்ச்சிகளின் நிமித்தம் உரசல் வருவதற்கு வாய்ப்புகள் உண்டு. மனைவியின் கிருபை வரங்களைப் புரிந்து கொண்ட கணவன் அவளை உற்சாகப்படுத்த சில காரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியது வரலாம். சிலர் தங்கள் பணத்தேவையின் நிமித்தமாக வித்தியாசமான ஊழியங்களில் வேலை செய்து வந்தால் அதனை மாற்றிக்கொள்வதே நலம்.

எப்படியாகினும் குடும்ப உறவினை பாதிக்கும் எந்த காரியத்தினையும் நஷ்டப்பட்டாலும் தள்ளி விடுவதுதான் சிறந்தது. இரண்டு பேரும் இணைந்து செய்யும் ஊழியத்திற்கு எதுவும் இணையாகாது. தான் பிடித்ததுதான் கொள்கை என்ற சிலர் ஊழியந்தானே செய்கிறேன் என்று வாதிட்டு பின்னர் விவாகரத்தில்

போய் நின்று ஆனால் ஊழியத்தினைத் தொடர்வதை நான் கண்டு வேதனையுற்றிருக்கிறேன். அப்படிப்பட்ட ஊழியத்தினை அங்கிகரிப்பாரா? என்பது கேள்வி குறியே.

ஊழியத்தினை, வேலை செய்வது போலவும் சம்பளத்திற்காக உழைப்பவர்களைப் போலவும் எண்ணுகிறவர்களுக்கு அது பெரிதாக தெரியாமல் போகலாம். ஆனால் தேவனுக்கு பிரியமானதை செய்ய ஒப்புக்கொடுத்தவர்களுக்கு இணைந்து செயல்படுவதில் மாத்திரம் இன்பம் உண்டாகும். தேவ ராஜ்யத்திற்கும் பெலன் உண்டாகும். தேவனும் மகிமைப்படுவார்.

**கேள்வி 15: குடும்பமாக கர்த்தருக்கென்று, எங்கள் வேலையோடு கூட ஊழியமும் செய்ய விரும்புகிறோம் என்ன செய்வது?**

நீங்கள் இருக்கும் சபையில் உள்ள போதகரோடு அறியப்படாத மக்களை சந்திக்கவும், உங்கள் கிருபை வரங்களை செயல்படுத்தவும் ஏற்ற சூழ்நிலையுள்ள இடத்தினைக் குறித்து உங்களுக்கிருக்கும் பாரத்தினை பகிர்ந்து கொள்ளுங்கள். அவர் உங்களுக்கு ஒத்தாசையாக இருந்தால் அதனை நிறைவேற்றவும், அதனால் வருகிற ஆத்துமாக்களை சபைக்கு கொண்டு வரவும் முயற்சி செய்யுங்கள்.

சில போதகர்கள் இப்படிப்பட்ட முயற்சிகளை உற்சாகப்படுத்துவதில்லை. அதற்கு அவர்களுக்குள் ஒரு பயம் இருக்கலாம் சபையை பிரித்துக்கொண்டு போய் விடுவார்களோ என்று. அப்படிப்பட்ட சூழ்நிலையில் அது உங்கள் நோக்கம் இல்லை என தெளிவுபடுத்தி செயல்படுவது ஞானம்.

அதையும் மீறி அவர் தடுத்தால் தேவனுக்கு பயப்படுவதுதான் முதல் காரியம் என்பதனையும் அவருக்கு கீழ்படிவது உங்கள் கடமை என்பதனையும் உணர்ந்து உங்கள் சபைக்கு இடையூறு இல்லாமல் செயல்படுங்கள். கணவனும் மனைவியும் இணைந்து செய்யும் போது அநேக நேரங்களில் அன்பும், பரிவும் புரிந்து கொள்ளுதலும் குடும்பத்தில் பெருகும். மற்றவர்களும் ஆசீர்வதிக்கப்படுவர். சபையில் உள்ள பிற உறுப்பினர்கள் உங்களோடு இணைந்து செயல்பட விரும்பும்போது அவர்களையும் மேற்கண்ட முறைதனை பின்பற்ற

சொல்லுங்கள். சில சபையின் ஊழியர் தங்களின் சபை அங்கத்தினருக்கு ஊழியம் செய்ய உரிமை இல்லை என்பர். அது தவறான கொள்கை. வேதத்திற்கு ஒவ்வாத சபை சட்டதிட்டங்களுக்கு, அதாவது மனித கற்பனைகளுக்கு கீழ்படிய வேண்டிய அவசியம் இல்லை. சபையின் அங்கத்தினர் அனைவரும் ஏதாவது வகையில் ஊழியம் செய்து ஆத்துமாக்களை சந்திப்பது தேவ திட்டமும் நோக்கமும் ஆகும். ஆக்கில்லா பிரிஸ்கில்லாவாக தேவன் உங்களை உபயோகிப்பாராக.

## இறுதியாக

குழப்பம் மிகும் நாட்களில், உறவுகள் எளிதாகக் கெட வாய்ப்புள்ள நாட்களில் நாம் வாழ்கிறோம். எனவே அநேக புதிய பிரச்சினைகளை, இப்புத்தகத்தில் குறிப்பிடாத காரியங்களை நீங்கள் சந்திக்க நேரிடலாம். தேவ வசனமும், தேவ பயமும் தேவ நடத்துதலும் நமக்கு முன் வழி காட்டியாகட்டும். அதனை புரிந்து கொள்ள உதவவே இந்த புத்தகத்தினை எழுதினேன். ஆலோசனை தேவைப்படுமாயின், மற்ற ஊழியர்களின் உதவி உங்களுக்குக் கிடைக்காமல் போகும்போது என்னை நீங்கள் அணுகலாம். தெளிவாகக் காரியங்களை மூடி மறைக்காமல் எழுதினால் அல்லது பகிர்ந்து கொள்ள விரும்பினால் உங்களுக்கு தேவ பயத்தினால் உதவி செய்ய முயற்சிக்கிறேன். தொலைபேசியில் பேச வாய்ப்புகள் கிடைத்தால் (உங்கள் நம்பரை தெளிவாக எழுதினால்) பேச முயல்கிறேன். என்னுடைய personal e-mail க்கும் நீங்கள் அணுகலாம்.

**Address**

GEMS, Sikaria, Indrapuri,
Dehri-on-sone, Rohtas,
Bihar, North India. Pin : 821 308
E-mail: jebakumar@gemsbihar.org
Office phone No: 06184 234567 (10am - 5pm)

## GEMS PROMOTION SERVICE CENTERS

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | : | #8, 3rd Jeevan Nagar, Adambakkam, Chennai 600 088. | Ph : 044-22670099 |
| COIMBATORE | : | #2, Anbu Nagar 4th Street, Vadavalli Road, Edayarpalayam, Coimbatore 641 025 | Cell : 9344824072 |
| ERODE | : | #6, Kalai Nagar, Rangampalayam, Erode 638 009 | Cell : 9486976202 |
| KODAIKANAL | : | 143-2, Packiapuram, Kodaikanal - 624 101 | Cell : 9443221776 |
| KOVILPATTI | : | 11, Theppakulam Street, Kovilpatti 628501 | Ph : 04632 225890 |
| MARTHANDAM | : | N.S.Building, Kulasekaram Road, Marthandam, K.K.Dist. 629 165 | Cell : 97886 89771 |
| NAZARETH | : | 17-B, Ebenezer Street, Nazareth 628617 | Ph : 04639 277820, Cell : 9789464605 |
| SIVAKASI | : | 1292-B, P.K.N Road, Sivakasi 626 189 | Ph : 04562 275667 |
| TIRUNELVELI | : | 4/112, 10th Street, Shanthi Nagar, Palayamkottai 627 002 | Cell : 9865311225 |
| TUTICORIN | : | 38, Sarangapani Street, Tuticorin 628 002 | Cell : 9442210629 |
| TUTICORIN | : | J.S.Traders, Hotel Geetha complex, Polepettai, Tuticorin 628 002 | Cell : 9442166061 |
| VELLORE | : | Shalom cottage, #52 Vana Nagar, Alamelumangapuram, Vellore 632 009 | Cell : 9952545181 |

## ASSISTANT REGIONAL PROMOTION CO-ORDINATION CENTER

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | : | 3/26, New colony, Nerkundram 600 107 | Cell : 9444017330 |
| TRICHY | : | 36-45, Papa colony, Edamalaipattipudur, Trichy 620 012 | Cell : 9894965520, 9443188521 |

## REGIONAL PROMOTION CO-ORDINATION CENTER

| | | | |
|---|---|---|---|
| CHENNAI | : | Plot No. 19A, 3rd Street, Megala Nagar, Vengaivasal 600 073 | Cell : 9444763141 |
| COIMBATORE | : | Site No. 115, Sabari Garden, 4th Avenue, 8th Cross street, Nallampalayam Road 641 027 | Cell : 9976960201 |
| MADURAI | : | Plot No. 21, Sharon Church street, Booman Nagar 625 018 | Cell : 9865583563 |
| NAGERCOIL | : | 66-E, Bright street, Nagercoil 629 001 | Cell : 9442934613 |
| TRICHY | : | Mahanaim, #1 Abdul Gazoor street, Kajah Nagar 620 020 | Cell : 9443555577 |

## OTHER STATE PROMOTION CO-ORDINATION CENTER

| | | | |
|---|---|---|---|
| BANGALORE | : | No 10, 4th Cross (2nd Floor) Oil Mill Road, Lingarajapuram, St.Thomas Town 560 084 | Cell : 09448517025 |
| MUMBAI | : | B/1013, Station Plaza, Station Road, Bhandup (W) 400 078 | Cell : 09322730294, 09820701775 |
| PONDICHERRY | : | Old No. 20, New No.1, III rd cross, 1st Floor, Vicoria Nagar 605 005 | Cell : 09486796631 |
| KERELA | : | CARMEL, No.4, N.V.Nagar, Peroonkada (PO), Trivandrum - 5 | Cell : 09486357950, 09961071118 |

| GENERAL PROMOTION CO-ORDINATION CENTRE | PROMOTIONAL ADMINISTRATIVE CENTRE |
|---|---|
| GEMS, No.10 Thamaraj street, Santhosh Nagar, P&T Nagar, Madurai 625017 Cell : 9443429735, E-Mail : promotions@gemsbihar.org | 16-A, Chinnakoil Street, Murugankurichi, Tirunelveli-2. Tamil Nadu. Phone: 0462-2581131, Email: nellaioffice@gemsbihar.org |

# GEMS FIVE FOLD MINISTRY




**G**o to the unreached
**E**vangelize
**M**ake Disciples and
**S**end them to reach their own

## Fivefold Ministry

Evangelism
Church Planting
Discipleship & Training
Educational Services
Humanitarian


## Five Core Values

Sincerity
Simplicity
Sanctity
Sacrifice
Service

**2175 people toil together with GEMS as Missionaries, Workers, Tentmakers and Bible Men / Women. More than 3000 people serve as Volunteers.**







**GEMS is a trans-denominational charismatic Christian mission organization, involved in Evangelism, with the vision to reach the unreached with the Good News of the Lord Jesus Christ and help them reach their own; so as to bring about holistic societal transformation through its Spiritual, Educational, Medical and Social services; primarily in Bihar, other North Indian states like Jharkhand, Uttar Pradesh, Madhya Pradesh, Maharashtra and also countries like Nepal and some closed countries since 1972.**


# CHURCH PLANTING

## Saturation Church Planting (SCP)

**GEMS Block Approach Model**
**with reference to politically demarked geography**

**GEMS targets key 'Blocks' and "Panchayats" and attempts to saturate every village under them, with a maximum number of Churches**






### Political Demarcation of India


**35 States**
**593 Districts**
**5564 Blocks**
**2,65,000 Panchayats**
**6,38,588 Villages**

**GEMS** identifies strategic 'Blocks' and adopts it for total transformation and wholesome communitydevelopment at grassroots level within its geographical boundary.


**GEMS** provides education, healthcare, community reformation, vocation specific training programs and self-help livelihood programs in these chosen 'Blocks' to bring about **transformation at grassroots level.**





An identified Block within Bihar State, India



Panchayats circled within a block



Villages within a Panchayat for SCP



Spread of GEMS'Belivers in Bihar

சேர்ந்த இரண்டும்

# EVANGELISM

## Evangelism - Heartbeat of GEMS

**CHURCH PLANTING IN CITIES, VILLAGES AND TRIBAL AREAS THROUGH ACTIVE EVANGELISM HAS RESULTED IN ESTABLISHING 1200 CHURCHES INFLUENCING MORE THAN 1 MILLION PEOPLE**



NET

GUM

AGNI

PEACE

STORM

PROFIT

FILM TEAMS

CHILDREN MINISTRY

MAJOR & MINI GOSPEL MEETINGS

- 110 Mini (1000 to 3000 people) and 12 Major (6000 to 12000 people) **Gospel Meetings** are conducted annually to break new grounds.
- Through Panchayat Evangelism and Church Establishment (**PEACE**) / AGgravating New-life Influence (**AGNI**) strategy, attempt is made to place one missionary in every Panchayat (Govt. Administrative Demarcation) aiming Saturation Church Planting.
- GEMS Urban Ministries (**GUM**) attempts to influence the influencers, the urban elite.
- More than 40000 **Children** are reached every year through Bible Clubs, Vacation Bible Schools, Camps, and Rallies through Children Ministry.
- Students Outreach Ministries (**STORM**) concentrates College students through Prayer Cells, Bible Studies and Leadership Training.
- **PROFIT** (PROfessionals Fellowship of International Talents), is an initiative encouraging workplace evangelism globally.
- 25 **Film Teams** reaching more than 350 thousand people every year with Jesus Film and other Gospel Messages.













# HEALTH SERVICES

## GEMS Health Services

**More than 30000 people treated every year**




**150 beded Multi-specialty Hospital with 3 satellite Primary Health Clinics**

**Regular medical check-up camps in remote villages**









**Round the year free Cataract and Polio corrective surgeries**

**Disaster relief health camps during natural calamities**





**Leprosy, TB and Immunization programs**

**Patients are personally followed up and inducted into the Church through Automated Follow-up system which geographically maps the patient with the field missionary.**

## Health and Eternal Life!

# HUMANITARIAN SERVICES

## GEMS Humanitarian

GEMS follows the approach of establishing 'Homes' as the fundamental block of bringing about wholesome transformation of society.





**49 Different Homes**

Homes for the abused, abandoned and exploited.
Homes for the physically handicapped.
Homes for the children from tribal territories.
Homes for the children of Commercial Sex Workers.
Homes for the children of missionaries.

**3 Village Transformation Projects**

A complete under-privileged village is adopted for total transformation and communitydevelopment.

Education, healthcare, vocational training and self-help livelihood options are offered.

**Women Empowerment Movement**


Knowledge empowerment and self-help groups.

**2 Social Reformation Projects**

Rehabilitating jailed convicts.
Community transformation among Sex Workers.

## Restoring Smiles to the Deprived









# EDUCATIONAL SERVICES

## GEMS Educational Services

**GEMS has toiled for more than 30 years in imparting education inspired by Christ as means for structured change.**

**GEMS promises wholesome education with intellectual, moral, spiritual, social and physical attributes.**

- Schools - GEMS runs 120 English and Hindi medium schools catering to more than 25000 young lives annually.
- GEMS Industrial Training Institute GEMS ITI offers vocational training courses on four technical trades namely Electrical, Fitter, Welder and Motor Mechanic.
- Nursing School - GEMS School Of Nursing (GSON) offers nationally approved Auxiliary Nursing and Midwifery (ANM) courses.
- Higher Education - GEMS department of higher education facilitates 81 different Certificate, Diploma, Graduate and Post Graduate courses through Distance Education.
- Computer Center - GEMS Institutes of Future Technology (GIFT) offer high quality work oriented computer education in Hardware, Software and Computer Applications.
- Tailoring Training Institute -GEMS runs five Tailoring Training Institutes empowering socially underprivileged and persecuted women towards self employment and evangelism.

**Schools**

**Nursing School**

**Computer Center**

**Higher Education**

**Tailoring Training Institute**

**Industrial Training Institute**



**Fostering Education for Transformation**

# DISCIPLESHIP & TRAINING

## Discipleship and Training in GEMS

25,000 first generation active believers are constantly trained under 25 different types of training programs, targeting 20 million active believers by 2020.





Corporate Training Center (CTC) with 6000 seating capacity for mass training.



Fourteen Regional, Language, Focus and Gender specific Discipleship Training Centers (DTC).


Cross Cultural, Induction Orientation, Discipleship, Short-term and One year Bible Training programs are conducted periodically.








## சகோ. D. அகஸ்டின் ஜெபக்குமார் எழுதிய புத்தகங்கள்













## பத்திரிக்கைகள்










**GEMS PUBLICATIONS**
Sikaria, Indrapuri post, Dehri on Sone,
Rohtas Dist, Bihar 821 308, North India
E-Mail : publications@gemsbihar.org www.gemsbihar.org
Tel. : 06184 234026, 234567



## இந்நூலின் நோக்கம் ...

பாரம்பரியம், சமூக கட்டுப்பாடு, வழி வழியாய் வந்த கொள்கைகள், கலாச்சார வேற்றுமைகள், சத்துரு உத்தியாய் விதைத்து விட்ட, வேதத்திற்கு ஒவ்வாத புதுமை எண்ணங்கள், மேற்கத்திய நாகரீக மோகங்கள், சிலுவையில் அடிக்கப்படாத சுயம், சுதந்தரம் என்ற பெயரில் காணப்படும் தாறுமாறுகள், உரிமை என்னும் குரலில் தொனிக்கும் அகங்காரம், சம்பாத்தியம் எனக்குரியது என்ற பெருமை, பணம் படுத்தும் பாடு, அடிமையாக்க நினைக்கும் அற்பத்தனங்கள், அனைத்தும் திருமண வாழ்வின் இன்பத்தினையும், நோக்கத்தினையும் நோகடித்து, சிதறடித்துவிடப் போதுமான பெலனுள்ளவை என்பதனை யார் மறுக்கக் கூடும்.

வேத வெளிச்சத்தில், தேவ சித்தத்தில் தேவ நோக்கத்தினைப் புரிந்து கொண்ட வாழ்வில் தன்னை வாழ ஒப்புகொடுத்தோர் வாழ்வில் காயங்கள் பட்டாலும் மடிந்து போக மாட்டார், மாறாக நிமிர்ந்து வெற்றிப் புன்னகையோடு முன்னேறுவர்; இதனை விளக்கவே ...

GEMS Publications